Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 66 | சர்வதேச மின் செய்தித்தாள் | பெப்ரவரி 01 2024



## சிறீலங்காவின் சுதந்திர நாள் ஈழத்தமிழர்களின் கரிநாள்

FEB 04 2024

பெப்ரவரி 04 2024

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**































# விளம்பரத் தொடர்புக்கு அழையுங்கள்: 437.345.4203



# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**சுதந்திரத்தை வென்றெடுக்காது போனால் நாம் அடிமைகளாக வாழ வேண்டும். தன்மானம் இழந்து தலை குனிந்து வாழ வேண்டும். பயந்து பயந்து பதட்டத்துடன் வாழ வேண்டும். ஆகவே சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழியெதுவும் இல்லை.**






## சங்கத்தமிழ்

**தொடர்புகளுக்கு**

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# லெப். கேணல் அற்புதன்

## தளபதி பொன்னம்மான்





மலைக்காற்று வீசுகின்ற ஒரு மாலைப்பொழுதில் மலை உச்சியொன்றில் ஒரு அழகிய தாய்த் தேசத்தின் உருவாக்கம் பற்றிய ஆழமான கனவில் பொன்னம்மான் திளைத்திருந்தார். நல்லதொரு கனவை உளத்தில் கண்டு கொண்டிருந்தார். அவரது உள்ளத்தில் அருமையான செயற் திட்டங்கள் உருப் பெற்றன. அத்திட்டங்களை தலைவரோடு ஆழமாக அலசி ஆய்ந்து தீர்க்கமான முடிவுகளை எடுத்து செயற்படுத்திய செயல் வீரம். அவரிடம் இருந்ததை தோழர்கள் பெருமையோடு பேசாத நாளே இல்லை. நாளும் பொழுதும் கனவும் வாழ்வும் அவ ருக்கு உயரிய தேடலிலேயும் கழிந்தது. தேசமக்களுக்காக அவர்களது நல்வாழ்வுக்காக தன் வாழ்நாளையே அர்ப் பணித்து நின்ற ஒரு அற்புத மனிதர், எளிமையானவர். பிரமிக் கத்தக்க அடக்கமும், பொறுமையும் அவருக்குள் தோய்ந்து நின்றது. அவர் தாங்கி நின்ற பணியின் பின்னால் அத்தகைய அழகு இருந்தது. வாழ்வை நேசித்த மானுடத் துடிப்பு ஒரு போதும் அடங்கிப்போகாது. வெளிமுழுதும் நிறைந்த ஆன்ம சங்கீதத்தை தோழர்கள் மீண்டும் எப்படி தம் உயிர்களில் ஏற்றினார்கள். ஜீவநதியின் பெருக்கில் பூமி தோய அன்பெனும் வடிவு கொலுவீற்றிருக்கிறது. அந்தப் பிரபஞ்சத்தின் நாதமாய் நின்றொலிக்கின்ற தகமையை அவர்கள் அடைந்து விட்டிருக் கிறார்கள்.

பொன்னம்மானின் வாழ்வு எப்போதும் எம்முள் ஏதோவொரு இனம் தெரியாத துயரின் கசிவை தரும்படியாக அமைந்து போய்விட்டது.

சிறிய மலைகளும், சிறுகாடுகளுமாக நிறைந்த ஒரு கிராமத் தின் ஒதுக்குப்புறத்தில் பெரியளவிலான இடப்பகுதியைத் தேர்ந் தெடுத்து அதனை ஒரு பெரிய பயிற்சித் திடலாக்கினார்.



**எங்களுக்கு ஒரு ஜீப் வண்டி வேண்டும். எனக்கு ஒரே வழி தெரிகிறது என்று கூறிவிட்டு தோழர்களிடம் கேட்டார் "நீங்கள் அனைவரும் உங்கள் காலை நேர உணவை ஒரு சில மாதங்களுக்கு நிறுத்தினால் அதன் மூலம் சேமிப்பாகும் பணத்தில் நாங்கள் ஒரு ஜீப் வண்டியை வாங்கிக் கொள்ளலாம்" என்றார். தோழர்கள் ஒரு மித்த குரலில் அப்படியே செய்வோம் என்று சொன்னார்கள். அவ்வாறே காலை எல்லோரும் பசியிருந்து மீதப்படுத்திய பணத்தில் ஒரு ஜீப் வண்டி வாங்கினார்.**

பயிற்சியாளர்களாக வந்திருக்கும் புதிய முகங்கள் அனை வரையும் கொள்ளை கொள்ளும் அன்பு வழியும் பார்வை அனைவர் மீதும் பரவுகிறது. அவர்களின் குண நல இயல் புகளை, தெரிந்து புரிந்து கொண்ட அருமையான தந்தையாக அவர் நின்றார். நல்லதொரு சீரிய சமூக நெறியாளராகவும் பன்முகப்பட்ட பார்வையும், சிந்தனைத் தெளிவும், உண் மையும் அவரிடம் நிறைந்திருந்த பண்புகள். இந்தப் பண்புகளே தோழர்களை பொன்னம்மான் என்று சுற்றிவரச் செய்தன. ஏராளமான போராளிகளின் உருவாக்கத்தில் பெரும் பணியை செல்வனே செய்து முடித்தவர். சின்னச் சின்ன பல ஆயிரம் சூரியன்களை செதுக்கிய ஒரு சிற்பிதான் பொன்னமான். தலைவரின் சுமைகளைத் தாங்கிய அற்புதனாகவும் அவர் விளங்கினார்.

பயிற்சித் திடலில் தற்காப்புப் பயிற்சி நெறிகள், துப்பாக்கிப் பயிற்சி நெறிகள், வெடிமருந்துப் பயிற்சிகள், நீச்சல் பயிற்சிகள், மருத் துவ பயிற்சிகள் என்று ஒரு விரிந்த களப்பயிற்சிகள் நிகழந்து கொண்டிருந்தன. அப்போது அப் பயிற்சி நெறிக்களத்தில் பல நூறு தோழர்கள் இருந்தார்கள். உணவு நெருக்கடிகள், போக் குவரத்து இடர்கள், வசதிகள் அற்றிருந்த நிலையிலும் என்றுமே எம்வாழ்வின் சொத்தான சந்தோஷத்தை கனன்று எரியவைத தபடியே திரிந்தார். எதிர் நீச்சலிடுவது, நெருப்பில் நீந்துவது, விண்ணைச்சாடுவது, விழுதெறிவது, புயலாய், காற்றாய், தண் புனலாய், நிலவாய் இருக்க பொன்னமான் கற்றுக்கொடுத்தார்.

துன்பம் நேருகின்ற போது பக்கத்துணையாக நிற்க வல்ல தோள்கள்; வலிமைநிறைந்த தோள்கள்; தேசியத் தலைவரே பயிற்சியாளராக நின்ற பாசறையில் விளைந்த கனிகள். உயிர், உடல் இரண்டுமே என்றும் ஒருமித்து நின்று இருமை கடந்த போராளர். தீ சுட்டது கிடையாது, குளிர் நெருங்கிய தில்லை.

யாவும் சக்தியின் வடிவாக எல்லோரும் தன் குழந்தைகளாக நொக்கும் உயர் நோக்கிருந்தது. இந்த உயர்வு, இந்தப் பக்குவம் எளிதில் யாரிடத்தும் கிடைத்துவிடுவதற்குரிய பண்பில்லை. இது ஒரு பெரிய வாழ்க்கைக் கல்வி. இத்தகையவர்களிடம் இருந்து பூமி பாடம் கேட்கமுடியாது போய்விட்டதை நினைக்கையில்



நெஞ்சதிர்கிறது.

அந்தப் பயிற்சி முகாமின் வாழ்க்கை பற்றி முழுமையுமாக தொட முடியாது. இருந்தும் ஒரு நாள் நிகழ்ந்த ஒரு சம்பவத்தினை நினைவு கூரலாம்.

அந்த பயிற்சி முகாமிற்கு தேவையான பொருட்களை தோளிலும், தலையிலுமாக சுமந்து கொண்டு தோழர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அப்போது போதியளவு நிதிப்பலம் இருக்கவில்லை. பன்முக வளர்ச்சித் தேவை; நிறைய போராளிகள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளை; நிறைய ஆயுதங்கள், வெடிமருந்துகள் தேவையான காலம். தமிழீத்தில் ஒரு புறமும், தமிழகத்தில் ஒரு புறமுமாக பல செயற்பாடுகள் நிகழுந்து கொண்டிருந்தன. இந்த நிலையில் பயிற்சி முகாமின் விரிந்து செல்லும் செலவுக்கு மத்தியில் ஒரு ஜீப் வண்டி வேண்டுவது இயலாதிருந்தது. அப்போது பொன்னம்மான் எல்லோரையும் சந்தித்துக் கேட்டார். எங்களுக்கு ஒரு ஜீப் வண்டி வேண்டும். எனக்கு ஒரே வழி தெரிகிறது என்று கூறிவிட்டு தோழர்களிடம் கேட்டார் "நீங்கள் அனைவரும் உங்கள் காலை நேர உணவை ஒரு சில மாதங்களுக்கு நிறுத்தினால் அதன் மூலம் சேமிப்பாகும் பணத்தில் நாங்கள் ஒரு ஜீப் வண்டியை வாங்கிக் கொள்ளலாம்" என்றார். தோழர்கள் ஒரு மித்த குரலில் அப்படியே செய்வோம் என்று சொன்னார்கள். அவ்வாறே காலை எல்லோரும் பசியிருந்து மீதப்படுத்திய பணத்தில் ஒரு ஜீப் வண்டி வாங்கினார். அந்த வண்டியிலேயே பலர் சாரதியப் பயிற்சிகளைப் பெற்று சிறந்த சாரதிகளாகியது இன்னொரு கதை. எப்படியோ அந்த ஜீப் வண்டி. எப்போதும் எம் உணர்வில் ஒரு அரிய நினைவுச் சின்னமாக இருக்கின்றது.

பொன்னம்மான் ஒரு நீர் நிறைந்த ஒரு பொய்கையைப் போன்ற அரிய மனிதர். தமிழகத்தின் பட்டி தொட்டியெல்லாம் சென்ற பொன்னம்மான் ஒரு சொந்த சோதரனின் உளக்குமுலோடு பல தடவை இருந்தார். தமிழக மக்களைச் சந்தித்து அவர்கள் படும் பாட்டை, அவர்களை மாய்க்கும் மாயைப் பேயைப் பற்றியெல்லாம் பேசினார். அவர்களின் கைகளை, கால்களை பிணைத்திருக்கின்ற விலங்குகளை பற்றி தோழர்களோடு பேசி மனம் நொந்தார். "சினிமா" எனும் அரிய சாதனத்தின் போக்கைக் கண்டு கலங்கினார். உயரிய கலை விழுமியங்களை, மானுட வாழ்வை தரிசிக்க வைக்கும் கலைக் கண்ணாடியின் ரசம் போன நிலையை நொந்தார். பொன்னம்மான் கொண்டிருந்த கவலை சதாரணமானதல்ல. மானுட நேயம் என்ற அவரது



உயரிய கொள்கை எல்லையற்றதாக விரிந்திருந்தது. அதுவே துன்புறுவோரின் கால் தூசியை கழுவிவிடுகின்ற பண்பாக மாறி பூமியில் என்றுமே வற்றாத ஜீவநதியை கரை புரண்டு பாயந் திடச் செய்கின்றது.



அவரோடு மேஜர் கேடில்ஸ், கப்டன் வாசு, லெப்டினன்ட் சித்தார்த்தன், 2ம் லெப். பரன், வீரவேங்கை யோகேஸ், வீரவேங்கை தேவன், வீரவேங்கை அக்பர், வீரவேங்கை கவர் ஆகிய ஜீவ நதிகளும் சங்கமமாகிவிட்டன. நாவற்குழியில் இருந்த ஆக்கிரமிப்பாளனை எதிர்கொண்டு அழிக்க ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்தவேளை, 14.02.1987 அன்று தற்செயலான வெடி விபத்தில் சிக்கி வீரசாவடைந்து விட்டார்கள்.

இன்று மூன்று தசாப்த காலம் முடிவடைந்து விட்டது. அவர்களின் அடிச்சுவட்டைப் பற்றி ஏராளமானோர் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களின் இலட்சியம், அவர்கள் சுமந்த பணி அனைத்தையும் தங்கள் தோள்களில் சுமந்து நடந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஏன் இவர்களை சாவு நெருங்குவதில்லை? ஏன் இவர்களை நெருப்பு சுடுவதில்லை? ஏன் இவர்களை குளர் தாக்குவதில்லை?

பொன்னம்மான் போன்ற பல மாவீரரது வாழ்க்கை பற்றிய கேள்விகளை எம்முள் எழுப்பிப் பார்க்கின்ற போது வாழ்வு பற்றிய முழுமையும், அதன் ஆழமும், அதன் அர்த்தமும் புலனாகும். அப்போது பல தளைகள் அறுகின்ற பெரிய அனுபவம் பிறக்கும்.






# மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனைப் பண்ணையாளர்களுக்கு நீதி கோரி யாழில் போராட்டம்!

ஜனவரி 16, 2023

மட்டக்களப்பு பண்ணையாளர்களுக்கு நீதி கோரி இன்றையநாள் யாழ்ப்பாணத்தில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திற்கு முன்பாக, இன்றைய நாள் செவ்வாய்க்கிழமை மாலை தமிழர் ஒருங்கிணைந்த கட்டமைப்பின் ஏற்பாட்டில் இந்த கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள், சைவ மகா சபையினர், மத தலைவர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்களால் இன்றைய நாளன் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாபொரும் கவயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# மட்டக்களப்பில் பட்டிப்பொங்கல்; கறுப்பு பொங்கலாக நினைவு கூர்ந்தனர்!

ஜனவரி 16, 2024

மட்டக்களப்பில் கால்நடை பண்ணையாளர்கள் பட்டிப்பொங்கல் தினத்தை கறுப்பு நாளாக அனுஸ்டித்து மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை மீட்பு போராட்டமாக இன்று செவ்வாய்க்கிழமை (16) மட்டக்களப்பு நகரில் முன்னெடுத்திருந்தனர்.

அவர்களிற்கு ஆதரவாக யாழ்ப்பாணத்திலும் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மேய்ச்சற்தரைப் பகுதியில் அத்துமீறிய விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் அயல் மாவட்ட சிங்களவர்களால் கால் நடை வளர்ப்பில் ஈடுபடும் பண்ணையாளர்களின் கால்நடைகளுக்கு ஏற்படுத்தப்படும் இன்னல்கள், அழிவுகளுக்கு எதிர்ப்பினைத் தெரிவிக்கும் முகமாகவும், அத்துமீறிய விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை அகற்றி தங்கள் கால்நடைகளை சுதந்திரமாக மேய்ச்சலில் ஈடுபடுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு தர வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்நிறுத்தி போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.




மயிலத்தமடு மாதவனை மேச்சல் தரை பண்ணையாளர்களின் அறவழிப் போராட்டம் 124 நாள் கடந்துள்ள நிலையில் 124 பொங்கல் பானைகளை கறுப்பு நாடா கட்டி தங்களது எதிர்ப்பினை வெளிப்படுத்தி இருந்தனர்.

பச்சைத் தரை எங்கும் இரத்தக் கறை என்ற மகுடவாசகத்துடன் பண்ணையாளர்கள் மேலாடையின்று 126 வெற்றுப் பொங்கல் பாணைகள் சகிதம் குறித்த ஆர்ப்பாட்டம் காந்திப் பூங்காவில் ஆரம்பமாகி பின்னர் பேரணியாக மட்டக்களப்பு கச்சேரிக்கு சென்று முடிவடைந்திருந்தது.

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கெடுத்திருந்தனர்.

மாதவனை மயிலத்தமடு பகுதியில் அத்துமீறிய பயிர் செய்கையாளர்களால் இதுவரை 254 கால்நடைகள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# இமாலயப் பிரகடனத்தை ஆதரிக்காதீர்கள்; சுவிஸ் ஜனாதிபதியிடம் கோரிக்கை!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள்

ஜனவரி 16, 2024




இமாலயப்பிரகடனத்தை ஆதரிப்பதை விட, தமிழர்களின் சுய நிர்ணயத்திற்கு ஆதரவை வழங்குமாறு காணாமல் ஆக்கப் பட்டோரின் சங்கம் சுவிஸ் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத் துள்ளது.

தைபொங்கல் தினத்தை முன்னிட்டு நேற்றைய தினம் திங்கட்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதன் போது கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரி வித்தனர்.

“இமாலயப் பிரகடனம்” என்ற காலாவதியான கருத்தையும் ஒற் றையாட்சியையும் ஊக்குவிப்பதை விட, பொதுவாக்கெடுப்பை ஆதரித்து, தமிழர்களுக்கு சுயநிர்ணயத்தை வழங்கவும் சுவிஸ் ஜனாதிபதி வயோலா அம்ஹெர்ட்டை நாங்கள் கடுமையாக ஊக்குவிக்கிறோம்.

இமாலயப் பிரகடனத்தில் பௌத்த குருமார்கள் பங்கேற்பதற்கு சுவிட்சர்லாந்து நிதியுதவி அளித்தது. அதற்கு நிதி உதவி வழங் குவதை நாம் எதிர்க்கிறோம் . இந்த பிரகடனம் பன்மைத்துவ சமூகத்துடன் கூடிய ஒற்றையாட்சி அரசை உருவாக்க முயல் கிறது, இது சிங்கள சமூகத்திற்கு சாதகமாக அமையும்.

சுவிஸ் மற்றும் பிற அரசாங்கங்கள் செல்வாக்குமிக்க தமிழ் குழுக் களை பலவீனப்படுத்துவதற்கு பங்களிக்கும் சில அரச சார்பற்ற நிறுவனங்களை ஆதரிக்கின்றன.

இதன் விளைவாக, இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் போர்க் குற்றங்கள் மற்றும் தமிழர் அபிலாஷைகளுக்கான சர்வதேச நீதி பற்றிய விவாதங்களை மறைக்கின்றன.

நல்லிணக்கம் என்றழைக்கப்படுவதை நாங்கள் நம்பவில்லை, ஏனெனில் இது தமிழர்களின் நிலங்களை அபகரிக்கும் ஒரு மாறுவேட முயற்சியாகத் தெரிகிறது.

அரசியல் தீர்வு காண்பதில் தமிழர்களில் எவரும் ரணிலையோ அல்லது எந்த சிங்களத் தலைவரையும் நம்புவதில்லை. கடந்த 75 வருடங்கள் இதற்கான தெளிவான சான்றுகளை வழங் குகின்றன.

இலங்கையில் வசிக்கும் தமிழ் மக்களுக்கும், போரினால் இடம் பெயர்ந்த மக்களுக்கும் இடையே பொதுவாக்கெடுப்பு நடத்த சுவிஸ்நாடானது வளங்களை ஒதுக்குமாறு அந்த ஜனாதி பதியிடம் வலியுறுத்துகிறோம்.

சுவிட்சர்லாந்தின் ஜனாதிபதியாக நீங்கள் ஒரு ஜனநாயக நாட்டில் தலைமைப் பதவியை வகிக்கிறீர்கள். எனவே, வாக் கெடுப்பு என்பது நேரடி ஜனநாயகத்தின் ஒரு வடிவமாக இருப் பதால், நீங்கள் தமிழர் பிரச்சினையை ஆதரிப்பது மட்டுமல் லாமல், பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது.

செழுமையான தமிழ் கலாச்சாரத்தையும், அதன் அடையாளங் களையும், மொழியையும், வடக்கு கிழக்கில் உள்ள அவர் களின் பூர்வீக நிலங்களையும் அழிக்க முயலும் தமிழர் விரோத வேலைத்திட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். என்றனர்.

# பொங்கு தமிழ்ப் பிரகடனத்தின் 23ஆம் ஆண்டு நினைவு நாள்!

ஜனவரி 17, 2023

பொங்கு தமிழ்ப் பிரகடனத்தின் 23ஆம் ஆண்டு நினைவு நாள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.






யாழ் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பொங்கு தமிழ் நினைவுத் தூபியில் இன்றைய நாள் புதன்கிழமை மதியம் 12 மணியளவில் நினைவு நாள் இடம்பெற்றது.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நினைவு நாளில் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மா.இளம்பிறையன், பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர், மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த 2001 ஆம் ஆண்டு இதே நாளில் இடம்பெற்ற பொங்கு தமிழில் தமிழ் மக்களின் அபிலாசைகளான, சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம், என்பன அங் கீகரிக்கப்பட வேண்டும் என பிரகடனமாக பிரகடனப்படுத்தப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிறீலங்காவின் சுதந்திர நாள் ஈழத்தமிழர்களின் கரிநாள் – பெப்ரவரி 04 2024

# முல்லை அளம்பில் மாவீரர் துயிலுமில்லக் காணியை சிறீலங்கா இராணுவத்தினர் சுவீகரிக்க முயற்சி; அளவீட்டு முயற்சி மக்களால் தடுத்து நிறுத்தம்!

ஜனவரி 18, 2023

முல்லைத்தீவு - அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல காணியினை, சிறீலங்கா 23 ஆவது சிங்க ரெஜிமென்ட் இராணுவத்தினருக்கு சுவீகரித்து வழங்க எடுக்கப்ப முயற்சி அப்பகுதி மக்களாலும், அரசியல் கட்சிப் பிரமுகர்கள் சிலராலும் வியாழக்கிழமை (18) தடுத்து நிறுத்தப்பட்டது.

குறிப்பாக நில அளவை திணைக்களத்தினர் மற்றும், கரைதுறைப்பற்று காணி உத்தியோகத்தர் உள்ளிட்டவர்கள், குறித்த மாவீரர்துயிலுமில்லக் காணியினை அளவீடு செய்ய வருகை தந்திருந்தனர்.

இந்நிலையில் மாவீரர்களின் பெற்றோர், அப்பகுதிமக்கள் மற்றும், அப்பகுதி அரசியல் கட்சிப் பிரமுகர்களா முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும், அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோரின் தலையீட்டால் குறித்த காணிசுவீகரிப்பு நடவடிக்கைக்கு கடுமையான எதிர்ப்பினைத் தெரிவித்திருந்தனர்.

அத்தோடு குறித்த காணியினை அளவீடு செய்து, இராணுவத்திற்காக சுவீகரிக்கும் நடவடிக்கையினை அனுமதிக்கமுடியாதென அப்பகுதிமக்களாலும், மக்கள் பிரதிநிதிகளாலும், அங்கு வருகைதந்த நில அளவைத்திணைக்கள அதிகாரியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இராணுவத்தினருக்காக காணி சுவீகரிக்கும் முயற்சி கைவிடப்பட்டு, நில அளவைத்திணைக்களத்தினர் அங்கிருந்து புறப்பட்டுச்சென்றனர்.

குறிப்பாக அளம்பில் மாவீரர் துயிலுமில்லக் காணியினை தற்போது 23ஆவது சிங்க ரெஜிமென்ட் இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருப்பதுடன், அங்கு இரணுவத்தினரால் விவசாய நடவடிக்கைகள், இராணுவத்தினருக்கான விளையாட்டு செயற்பாடுகள் இடம்பெறும் இடமாகவும் அளம்பில் மாவீரர் துயிலுமில்லக் காணி காணப்படுகின்றது. அதுதவிர குறித்த காணியில் இராணுவத்தினரால் உணவகம் ஒன்றும் நடாத்தப்பட்டுவருகின்றது.

இந் நிலையில் துயிலுமில்லக்காணியின் வெளிப்புறத்திலேயே வருடாவருடம் மாவீரர் நாளில் மாவீரர் நாள் நினைவு வணக்கம் உறவுகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



இவ்வாறான சூழலில் கடந்தவருடம் குறித்த மாவீரர் துயிலுமில்லக் காணியினை இராணுவத்தினர் விடுவிக்க வலியுறுத்தி மாவீரர்களின் உறவுகள் சிலர் உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்ததுடன், இதற்கு முன்னரும் பலதடவைகள் நில அளவைத் திணைக்களத்தினர் இவ்வாறு நில அளவீட்டு முயற்சியில் ஈடுபட்டபோதும் மக்கள் எதிர்ப்புகளால் கைவிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.









# தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்த நாளை கொண்டாடிய பெண் விடுதலை!

ஜனவரி 18, 2023

தமிழீழ தேசிய தலைவரின் பிறந்த நாளை முன்னிட்டு கேக் வெட்டிய காரணத்தினால் கைது செய்யப்பட்ட பெண் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய குறித்த பெண் இன்று(18.01.2024) பெண் விடுதலைசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் மாவீரர் நாளிற்கு முதல் நாள் தமிழீழத் தேசியத் தலைவரின் பெயர் பொறித்த கேக்கை வெட்டிய காரணத்திற்காக பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் குறித்த பெண் கைது செய்யப்பட்டிருந்தார்.

மட்டக்களப்பு - மாவீரர் நாளில் உயிர் நீத்த உறவுகளுக்கு அகவணக்கம் செலுத்திய பலர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்த நாளுக்கு கேக் வெட்டியதாக குறித்த பெண்ணும் பயங்கரவாத தடை சட்டத்தில் கைது செய்யப்பட்டிருந்தார்.

மேலும், கடந்த இரண்டு மாதங்களாக மட்டக்களப்பு சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த குறித்த பெண் இன்றைய நாள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் ஊடாக விடுதலையாகியுள்ளார்.



# இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவு!

ஜனவரி 21, 2023

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



இலங்கைத் தமிழரசுக்கட்சியின் புதிய தலைமைக்கான இரகசிய வாக்கெடுப்பு இன்றையநாள் ஞாயிற்றுக்கிழமை (21) திருகோணமலையில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது.

பதில் பொதுச்செயலாளர் வைத்தியர். ப. சத்தியலிங்கத்தின் தலைமையில் நடைபெற்ற இந்த வாக்கெடுப்பில் அவருக்கு





உதவியாளர்களாக வடக்கு, கிழக்கு மாகணங்களின் எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த எண்மர் செயற்பட்டனர்.

இந்நிலையில் குறித்த வாக்கெடுப்பில் மத்திய செயற்குழு அங்கத்தவர்களும் மாவட்டங்களில் இருந்து பொதுச்சபைக்கு வாக்களிப்பதற்கான அங்கீகாரத்தைக் கொண்டவர்கள் வாக்களித்தனர்.

அதன்படி, இன்று 21 ஆம் திகதி ததிருகோணமலை நகரமண்டபத்தில் இடம் பெற்ற வாக்களிப்பில் 327 பேர் கலந்து கொண்டனர்.

முன்னதாக இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைமைப் பதவிக்கான வேட்பு மனு கோரப்பட்டபோது கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சிவஞானம் சிறீதரன் ஆகியோரும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சீனித்தம்பி யோகேஸ்வரனும் விண்ணப்பங்களை செய்திருந்தனர்.

இதில், பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. சிறீதரன் 184 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். திரு. எம்.ஏ.சுமந்திரன் 137 வாக்குகள் பெற்று இரண்டாம் நிலையில். சி.யோகேஸ்வரன் போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்திருந்தார்.

# சிறீதரனுக்கு ஆதரவாக பயணிப்பேன் எம். ஏ சுமந்திரன் தெரிவிப்பு!

ஜனவரி 21, 2024

ஜனநாயக தேர்தல் மூலம் சிவஞானம் சிறீதரனுக்கு இலங்கை தமிழரசுக் கட்சிப் பொறுப்பு வழங்கப்பட்டிருப்பது மிகுந்த மிகிழ்ச்சியளிப்பதாகவும், தலைவர் சிறீதரனுக்கு தனது முழுமையான ஆதரவினை வழங்குவேன் என எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வாக்கெடுப்பு முடிவுகள் வெளியான பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

தமிழரசுக் கட்சித் தலைவருக்கான தேர்தலிலே மிக ஆரோக்கியமாக, எமது கட்சி உட்கட்சி ஜனநாயகத்தினை நாட்டுக்கும், சர்வதேசத்துக்கும் முன்மாதிரியாக நடத்திக் காட்டியிருக்கின்றது.

இதிலே வெற்றிபெற்ற நண்பன் சிறீதரனுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எமது தலைவர் மாவை சேனாதிராஜா வழிநடத்திய தமிழரசுக் கட்சிப் பொறுப்பு, இப்பொழுது சிறீதரனுக்கு வழங்கப்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சியான விடயமாகும்.

இந்தப் பயணத்திலே நாம் தொடர்ந்தும் ஒன்றாகவே பயணிப்போம். இதை நாம் இருவரும் தேர்தல் காலத்திலும் தெளிவாக மக்களுக்குச் சொல்லியிருக்கின்றோம். அவ்வாறே தொடர்ந்து பயணிப்போம்.

ஆகவே, எனது முழுமையான ஆதரவினை தற்போது ஜனநாயக முறையில் தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ள தலைவர் சிறீதரனுக்கு முழுமையாக வழங்குவேன் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.



# ஒட்டுசுட்டான் உப பொலிஸ் பரிசோதகருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க கோரிக்கை!

## புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா

ஜனவரி 21, 2024

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை தவறாக வழி நடத்தி , அப்பகுதி மக்களை வஞ்சித்து வருவதாக , புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

ஒட்டுசுட்டான் பகுதியில் பண்ணை ஒன்றினை நடாத்தி வருகிறோம். அதேவேளை பண்ணையில் வைத்து நாம் தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு உதவிகளையும் செய்து வருகின்றோம்.

இந்நிலையில் கடந்த 18ஆம் திகதி ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் வந்த பொலிஸார் எமது பண்ணைக்குள் அத்துமீறி நுழைந்து காணியின் உரிமையாளரை விசாரணைக்கு உட்படுத்தினர்.

பின்னர் என்னிடம் நீ புலி கட்சியா ? உதவிகளை புலி கட்சி ஊடாகவா செய்கிறாய் என மிரட்டி விசாரணைகளை முன்னெடுத்தனர்.

என்னிடம் கடுமையான முறையில் நடந்து கொண்டது, உப பொலிஸ் பரிசோதகரான சுபேசன் எனும் தமிழ் பொலிஸ் உத்தியோகஸ்தரே ...!

என்னிடம் விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் எமது அனுமதியின்றி, அத்துமீறி எமது அலுவலகத்தினுள் புகந்ததுடன் சப்பாத்து கால்களுடன், சாமியறைக்குள் புகுந்து சாமி படங்களை தூக்கி சோதனை செய்தனர்.

அறைக்குள் இருந்து எமது கட்சியான "புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் கட்சி" எனும் பெயர் பொறிக்கப்பட்ட பதாகையை, ஏதோ பயங்கர ஆயுதம் ஒன்றினை மீட்டு வருவது போன்ற பீடிகையுடன் வந்து, அதில் உள்ள பெயரை முழுமையாக பொறுப்பதிகாரிக்கு மொழி பெயர்ப்பு செய்யாமல், விடுலைப்புலிகள் என எழுதி இருப்பதனை மட்டும் மொழி பெயர்த்தார்.

அதனை அடுத்து என்னை பொலிஸ் வாகனத்தில் ஏற்ற முயன்றனர். நான் ஏற மறுத்த போது கைவிலங்குடன் வந்து என்னை மிரட்டி வாகனத்தில் ஏற்ற முற்பட்டனர்.

நான் மறுத்த போது , மீண்டும் எமது அலுவலகத்தினுள் புகுந்து, மேற் கூரைகளுக்குள் ஏறி சோதனை இட்டனர். அதனை எனது மனைவி காணொளி எடுத்தார். நான் எனக்கு தெரிந்த ஊடகவியலாளர்கள், பொலிஸ் உயர் அதிகாரிகள், உள்ளிட்ட தரப்புகளுக்கு இந்த விடயத்தை உடனே தொலைபேசி ஊடாக தெரிவித்தனர்.




அலுவகத்தை சோதனையிட்டவர்கள், மீண்டும் என்னிடம் வந்து பொலிஸ் நிலையம் போக வேண்டும் வாகனத்தில் ஏறு என மிரட்டினார்கள், நான் பொலிஸ் வாகனத்தில் வர மாட்டேன். எனது மோட்டார் சைக்கிளில் பொலிஸ் நிலையம் வருகிறேன் என்றேன்.

நீண்ட இழுபறியில் பின்னர் சிவில் உடை தரித்த பொலிஸார் எனது மோட்டார் சைக்கிளை செலுத்த என்னை பின்னால் ஏறி அமருமாறு கூறி அழைத்து சென்றனர்.

நான் பொலிஸ் நிலையம் செல்ல முன்னர், நான் அறிவித்த ஊடகவியலாளர்கள் பொலிஸ் உயர் அதிகாரிகளிடம் எதற்காக அவரை கைது செய்தீர்கள் என வினவிய போது, தாம் கைது செய்யவில்லை. விண்ணப்ப படிவம் ஒன்றினை நிரப்பவே பொலிஸ் நிலையத்திற்கு அழைத்தோம் என பதில் அளித்தார்

ஆனால், பொலிஸார் விண்ணப்ப படிவம் தொடர்பில் எதுவும் என்னிடம் கூறவில்லை. பொலிஸ் நிலையத்தில் என்னை தடுத்து வைத்திருந்த வேளை மேலிடங்களில் இருந்து வந்த தொலைபேசி அழைப்புக்களை அடுத்து, பொலிஸ் பொறுப்பதிகாரி என்னை அழைத்து, உங்கள் கட்சி பற்றி இப்ப தான் தெரியும். என கூறி என்னை சமரசப்படுத்தி, இனி ஏதாவது உதவிகள் செய்யும் போது பொலிஸாரின் உதவிகள் தேவை எனில் தன்னை தொடர்பு கொள்ளுமாறும் கூறி என்னை அனுப்பி வைத்தார்.

இதன் பின்னர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை பிழையாக வழி நடத்திய உப பொலிஸ் பரிசோதகர் தொடர்பில் ஊரவர்களிடம் விசாரித்த போது, குறித்த உத்தியோகஸ்தர் தனக்கு வேண்டாதவர்கள், தன்னுடன் தர்க்க படுபவர்களை பொய் வழக்குகள் தொடர்ந்து சிறைகளில் அடைத்து உள்ளமை தெரிய வந்துள்ளது.

இவரால் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் பல பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எங்கே சென்று யாரிடம் முறையிடுவது என தெரியாமல் உள்ளனர்.

மக்களுக்கு உள்ள மொழி பிரச்னையை தனக்கு சாதகமாக பயன்படுத்தி, பொறுப்பதிகாரியை பிழையாக வழிநடத்தும் குறித்த உத்தியோகஸ்தருக்கு எதிராக கடுமையான நடவடிக்கையை பொலிஸ் திணைக்களம் எடுக்க வேண்டும்.

ஊடகங்கள் ஊடாக அனைத்து தரப்பிடமும் கேட்டு கொள்வது, குறித்த பொலிஸ் உத்தியோகஸ்தர் தொடர்பில் புலனாய்வு பிரிவுகளை சேர்ந்தவர்கள் விசாரணைகளை முன்னெடுத்து, பாதிக்கப்பட்ட மக்களில் வாக்கு மூலங்களை பெற்று, அவர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

தாங்கள் நினைத்தால் என்ன வேண்டும் என்றாலும் செய்யலாம் என மனநிலையில் பல பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் உள்ளனர். என மக்களுக்கு அநீதி இழைத்து பல பொய் வழக்குகளை தொடுத்துள்ள இந்த உப பொலிஸ் பரிசோதகருக்கு பொலிஸ் திணைக்களம் கொடுக்கும் தண்டனை ஏனைய பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கு பாடமாக அமைய வேண்டும் என தெரிவித்தார்.

# மாவீரர் துயிலுமில்லத்தில் சிறீதரன்!

ஜனவரி 21, 2023

தமிழரசு கட்சியின் புதிய தலைவர் சி.சிறிதரன் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் அஞ்சலி செலுத்திய பின்னர், சமய வழிபாட்டில் ஈடுபட்டார்.







# யாழ். ஊரெழு இளைஞர்களால் கசிப்பு உற்பத்தி நிலையம் துணிகர முற்றுகை!

ஜனவரி 21, 2024



யாழ்ப்பாணம் ஊரெழு கிராமத்தில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று இளைஞர்களால் முற்றுகையிடப்பட்டு, கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய பொருட்களும் ஒரு தொகுதி கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஊரெழு கிராமத்தில் சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் கிராம இளைஞர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்பு குழுவொன்றின் ஒழுங்கமைப்பில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் சிவில் பாதுகாப்பு குழு தலைவர் சின்னத்துரை முகுந்தன் தலைமையிலான குழுவினர்கள் நேற்றைய நாள் சனிக்கிழமை ஊரெழு கிராமத்தில் அதிரடியாக சுற்றி வளைத்து தேடுதலை மேற்கொண்டனர்.

இதன்போது கைவிடப்பட்ட தோட்டம் ஒன்றில் இருந்து கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் பொருட்களும் தென்னைமரத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி கசிப்பும் சிவில் பாதுகாப்பு குழுவால் கைப்பற்றப்பட்டன.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு கோப்பாய் பொலிஸார் வரவழைக்கப்பட்டு அவர்களிடம் கைப்பற்றப்பட்ட கசிப்பு உற்பத்திப் பொருட்கள் கையளிக்கப்பட்டன.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உப தலைவர் என். நகுலேஸ் பிணையில் விடுதலை!

ஜனவரி 23, 2024

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என். நகுலேஸ் நேற்றைய நாள்(22) பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த நவம்பர் 25ம் திகதி ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பினை மேற்கொணடதன் பேரில் அவர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விளக்க மறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர் நேற்றைய நாள் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் போராளிகள் ஜனநாயக ரீதியிலான செயற்பாடுகளை முன்னெடுப்பதென்பது இன்னும் இயலாத ஒரு விடயமாகவே இருக் கின்றது. யுத்தத்தின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டாலும் இனவாத அரசியலில் இருந்து மற்றைய இனத்தினை அடிமைப்படுத்தும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தினைக் கொண்டு அச்சுறுத்தும் நடவடிக்கைகள் தொடரத்தான் செய்கின்றதென நகுலேஸ் ஊடகங்களிடையே கருத்து வெளியிட்டுள்ளார்.



# சட்டவிரோத மதுபான ஒழிப்பு செயற்பாட்டில் காரைநகர் இளந்தென்றல் விளையாட்டுக் கழகத்தினர்!

ஜனவரி 23, 2023



சட்டவிரோத மதுபான ஒழிப்பு செயற்பாட்டில் யாழ்ப்பாணம் - காரைநகர் இளந்தொன்றல் விளையாட்டு கழகத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

சட்டவிரோத மதுபான உற்பத்தி அதிகரித்து வருவதுடன், அதன் பாவனையாளர்களுக்கு அதிகரித்து வரும் நிலையில் அவற்றை தடுக்கும் நோக்குடன் இளம் தென்றல் விளையாட்டு கழக இளைஞர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

சட்டவிரோத மதுபான உற்பத்தி நிலையம் ஒன்றினை முற்றுகையிட்டு, உற்பத்தி பொருட்களுடன். ஒரு தொகை சட்டவிரோத மதுபானத்தையும் மீட்டு இருந்தனர்.

அதேவேளை, சட்டவிரோத மதுபானத்தை கொள்வனவு செய்து அவற்றை எடுத்து சென்ற இருவரை மடக்கி பிடித்து, அவர்களிடம் இருந்து அவற்றை பறிமுதல் செய்து நிலத்தில் ஊற்றியதுடன், அவர்களை கடுமையாக எச்சரித்து விடுவித்தனர்.

சட்டவிரோத மதுபான ஒழிப்பு செயற்பாட்டிற்கு காரைநகர் பிரதேச சபை இளம் தென்றல் விளையாட்டு கழகத்திற்கு தனது பாராட்டுக்களை தெரிவித்து உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறீலங்காவின் சுதந்திர நாள் ஈழத்தமிழர்களின் கரிநாள் பெப்ரவரி 04 2024

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரசாரத்தை பல நாடுகளுக்கு விரிவுபடுத்தவுள்ளோம்!

ஜனவரி 23, 2024

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரசாரத்தை பல நாடுகளுக்கு விரிவுபடுத்தவுள்ளோம் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் செவ்வாய்க்கிழமை (23) தெரிவித்தனர்.

வவுனியாவில் தொடர் போராட்டத்தை மேற்கொண்டுவரும் வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தினர் போராட்டம் ஆரம்பித்து செவ்வாய்க்கிழமை (23) 7 ஆவது ஆண்டு நிறைவை அனுஷ்டித்தனர்.

இந்நிலையில் வவுனியா பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டபோதே சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார் மற்றும் சங்க தலைவி கா.ஜெயவனிதா ஆகியோர் இவ்வாறு தெரிவித்தனர்.





தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள்,

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட நமது அன்புக்குரியவர்களைக் கண்டுபிடிப்பதில் நமது முயற்சிகளை வலுப்படுத்துவதே எங்கள் அர்ப்பணிப்பாகும், மேலும் நமது தைரியத்தின் ஆதாரம் நமது இறையாண்மையில் உள்ளது.

இந்த இடத்தில் எங்களின் ஏழாவது ஆண்டு கடினமான பணி இன்றுடன் நிறைவுபெற்று 8 ஆவது ஆண்டை தொடர்கிறது. நமது இறுதி இலக்கான இறையாண்மையை அடைவதற்கு இடைவிடாமல் பாடுபடும்போது நமது உறுதி அசையாது. காணாமல் ஆக்கப்பட்ட எமது தமிழ்ப் பிள்ளைகளின் இருப்பிடம் தொடர்பில் விசாரணை செய்வதற்குத் தேவையான அதிகாரத்தை இதன்மூலம் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

நாங்கள் எங்கள் பிரச்சாரத்தை பல நாடுகளுக்கு விரிவுபடுத்துகிறோம், மேலும் போராடும் தமிழர்களின் சார்பாக வாதிடுவதற்கு ஐரோப்பா மற்றும் பிற பிராந்தியங்களுக்குச் செல்ல விரும்பும் நபர்களைத் நாடி வருகிறோம்.

எங்கள் வெளிநாட்டுக் குழுவின் பிரசாரத்திற்கு ஆதரவளிப்பதில் பல பொறுப்பை ஏற்க அனைத்து நாடுகளிலும் உள்ள புலம் பெயர் தமிழர்களை நாங்கள் ஊக்குவிக்கிறோம். இந்த ஆதரவு, வாக்கெடுப்பு தொடர்பான நமது பார்வையை திறம்பட வாதிட எங்களுக்கு அதிகாரம் அளிக்கும்.

தமிழர் விடுதலையை நசுக்குவதை ஆதரிக்கக் கூடாது என்று வலியுறுத்தி சுவிட்சர்லாந்து அதிபருக்கு கடிதம் எழுதினோம். அதற்குப் பதிலாக, ஜனநாயகக் கருவியான வாக்கெடுப்பைப் பயன்படுத்துவதற்கு அவர்களின் ஆதரவைக் கேட்டோம்.

இதே நடவடிக்கையை ஜப்பான் பிரதமரிடமும் கோர திட்டமிட்டுள்ளோம். இந்த வாரத்தில் அவருக்கு ஒரு கடிதம் அனுப்பப்படும்.

எங்கள் வாக்கெடுப்புக்கு ஆதரவைப் பெற அமெரிக்க வெள்ளை மாளிகையுடன் தொடர்பு கொள்வோம்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் 'இமாலய பிரகடனத்தை' ஏற்றுக்கொண்டமைக்கும் எமது வருத்தத்தைத் தெரிவிக்க விரும்புகிறோம். இந்த அறிவிப்பு பைடனின் நிகழ் கால மற்றும் கடந்த கால வெளியுறவுக் கொள்கைக்கு முரணானது.

ஒவ்வொரு அமெரிக்க தூதரும் மற்றும் புதிய அமெரிக்க அரசுத் துறை அதிகாரிகளும் "அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை" என்ற கொள்கையின் அடிப்படையில் தங்கள் சிந்தனையை முயற்சி செய்கிறார்கள், ஆனால் அது செயல்படவில்லை. அது வேலை செய்யாது என்பதை அவர்கள் உணரும் போது, அவர்கள் தங்கள் பதவி நிலையை விட்டு வெளியேறு வருகின்றது.

ஒரு நேர்காணலின் போது, தூதர் பிளேக், ராஜபக்க்ஷ அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து இரண்டு மாறுபட்ட அறிக்கைகளை வழங்கினார். ஆரம்பத்தில், பிரிவினைவாதப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கத்திற்கு கால அவகாசம் தேவை என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். எவ்வாறாயினும், நீதி, மனித உரிமைகள் மற்றும் அரசியல் சீர்திருத்தங்கள் ஆகியவற்றில் ராஜபக்க்ஷ அரசாங்கம் தன்னிடம் நேர்மையற்ற முறையில் நடந்துகொண்டது என்பதை உணர்ந்து கொண்டதாக அவர் பின்னர் ஒப்புக்கொண்டார்.

பொஸ்னியா, கொசோவோ, ஈராக், மத்திய கிழக்கு மற்றும் உக்ரைன் மீதான ஜனாதிபதி பைடனின் கடந்த கால மற்றும் தற்போதைய கொள்கைகளை தூதுவர் ஜூலி சுங்கிற்கு நினைவுபடுத்த விரும்புகிறோம். இந்தக் கொள்கைகள், போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, கண்காணிக்கப்படும் சர்வதேச எல்லைகள் மூலம், அவர்களின் இருப்பு பாதுகாப்பு மற்றும் அமைதியினை அளித்துள்ளன.

தமிழரசுக் கட்சி தலைமைப் பொறுப்பு தேர்தலில் சிறீதரன் பெற்ற வாக்குகள் சுமந்திரனுக்கு எதிரானவர்களிடமிருந்தே வந்துள்ளன, ஆனால் அவை அவருடைய அடிப்படை ஆதரவைப் பிரதிபதிக்கவில்லை என்பதை புதிய தலைவர் அறிந்திருக்க வேண்டும். திரு. சிறீதரன் பொதுவாக்கெடுப்புக்கு வாதிட வேண்டும் மற்றும் இலங்கையுடனான எந்தவொரு பேச்சுவார்த்தைகளிலும் மூன்றாம் தரப்பினரின் தலையீட்டைக் கோர வேண்டும்.

நமது தொடர் போராட்டத்தின் 7ஆவது ஆண்டு நினைவேந்தலில், எதிர்வரும் ஆண்டிற்கான நம்பிக்கையை நிலைநிறுத்துவோம். இந்தப் பயணத்தில் புலம்பெயர் தமிழர்கள் அனைவரும் பங்களித்து எம்முடன் இணைந்து கொள்ள வேண்டும் என்றனர்.

# நிகழ்நிலை காப்பு சட்டமூலத்துக்கு எதிராக யாழில் போராட்டம்!

ஜனவரி 24, 2023

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள நிகழ்நிலை காப்பு சட்டமூலத்துக்கு எதிராக இன்றைய தினம் புதன்கிழமை காலை யாழ்ப்பாணம் பேரூந்து நிலையத்திற்கு முன்பாக யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.






ஜனநாயகத்தை அச்சுறுத்தாதே, நிகழ் நிலை காப்புச் சட்டத்தை மீளப்பெறு, ஊடகங்களை சமூக ஊடகங்களை நசுக்கும் நிகழ் நிலை காப்புச் சட்டத்தை மீளப்பெறு போன்ற பல கோரிக்கைகள் போராட்டகாரர்களால் வலியுறுத்தப்பட்டது.

நிகழ் நிலை காப்பு சட்டமூலம் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு விவாதம் நடைபெற்று வருகிறமை குறிப்பிடத்தக்கது.



# இலங்கையின் சுதந்திர நாள் தமிழர்களின் கரி நாளாக பிரகடனப்படுத்திய யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்!

ஜனவரி 25, 2024

இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்த வேண்டும் என அழைப்பு விடுத்த யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம், சிங்கள மக்களுக்கும் கரிநாள் என்பது பொருத்தமானதே என தெரிவித்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

இலங்கை தீவிலே தமிழ் மக்கள் தங்கள் இருப்புக்களை தக்க வைப்பதற்கு அன்றிலிருந்து இன்று வரை தொடர் போராட்டங் களில் ஈடுபட்டு வருகின்றார்கள் .

அதனடிப்படையில் எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி இலங் கையின் சுதந்திர தினத்தினை கரி நாளாக பிரகடனபடுத்தி வடக்கு கிழக்கு தழுவிய பிரகடனத்தை பொதுமக்களுக்கு

தெரியப்படுத்துகின்றோம். குறிப்பாக இந்த இலங்கைத் தீவிலே தமிழ் மக்களுக்கான உரிமைகள் இருப்புக்கள் மீறப்பட்டுக் கொண்டே வருகின்றது. ஆட்சிகள் மாறுகின்றது ஆட்சியாளர் களும் மாறிக்கொண்டே இருக்கின்றார்கள்.

ஆனால் தமிழ் மக்களுக்கு இன்றுவரை எந்த ஒரு தீர்வு திட் டமும் முன்னெடுக்கப்படவில்லை. அது வெறும் பேச்சுமட்டத் திலே மாத்திரமே நல்லிணக்கத்தை பேசி வருகின்றார்கள். இதய சுத்தியுடன் தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுதர சிங்கள தரப்புக்கள் தயாராக இல்லை.

வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் சமூ கங்கள், சமூக செயற்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள், அனைத்து தொழிற்சங்கங்களும் சுதந்திர தினத்தினை கரி நாளாக பிரகடனப்படுத்த ஆதரவினை வழங்கவேண்டும். தமிழர்களின் உரிமைக்கான போராட்டத்தினை சிதைக்கும் நோக்கில் இலங்கை அரசாங்கம் தீவிரமாக செயற்பட்டு வருகின்றது.

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் நிறைவேற்றபட்டுள்ளது. இந்த நாட்டிலே ஊடக சுதந்திரத்தை, ஒரு பொதுமகனின் கருத்து சுதந்திரத்தை கூட இந்த அரசாங்கம் பறித்தெடுத்து கொண்டு தான் இருக்கிறது.

இதன்மூலம் போராட்டங்களில் ஈடுபடுகின்றவர்களை ஒடுக்க இவ்வாறான சட்டங்களை நடைமுறைபடுத்தி மல்லினபடுத்தி அவர்களை கைது செய்கின்ற தொலைதூர நோக்கோடு இந்த அரசு செயற்பட்டு வருகின்றது.

இவர்கள் ஒருபொழுதும் தமிழர்களுடைய அரசியல் தீர்வு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், வடக்கு கிழக்கில் அத்துமீறி நிகழுகின்ற குடியேற்ற திட்டங்கள், திட்டமிட்ட பௌத்தமயமாக்கலையோ நிறுத்த போவதில்லை. எமக்கான தீர்வு கிடைக்கும் வரை நாம் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு ஆகவேண்டும் என்பது வரலாற்று உண்மை.

மேலும் கரிநாள் என்பது சிங்கள மக்களுக்கும் பொருத்த மானதே காரணம், சிங்கள மக்களுக்கும் எதிரான சட்டங்கள் உருவாக்கப்பட்ட வண்ணமே உள்ளது. இதனை அனைத்து தரப்புக்களும் புரிந்துகொள்ளவேண்டும்.

சமநேரத்தில் எங்களுக்குரிய நிரந்தர அரசியல் தீர்வை பெற்று




தருவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் அதனடிப் படையில் 13 ஆவது திருத்தம் தமிழர்களுக்கான ஆரம்ப புள் ளியோ முடிவு புள்ளியோ கிடையாது. 13இனை நாம் ஒரு போதும் ஏற்றுகொள்ள முடியாது.

ஆகவே தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினை காணாது நாங்கள் எங்களுடைய போராட்டங்களையோ போராட்ட வடிவங்களையோ கைவிடப்போவதில்லை என பல்கலைக்கழக மாணவர் சமூகமாக வலியுறுத்துகின்றோம்.

எங்களுடைய இனம் விடுதலை பெற வேண்டும். இனத்திற் குரிய நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க இலங்கையின் சுதந்திர தினத்தினை கரிநாளாக பிரகடனபடுத்த பூரண ஆதரவினை தந்துவுமாறு அவர் மேலும் தெரிவித்தார்.

# கறுப்பு ஜனவரி 2024

ஜனவரி 25, 2024

இலங்கை அரசினால் ஊடக சுதந்திரத்தை முடக்க நிறைவேற் றப்பட்ட சட்டமூலங்களிற்கு எதிர்ப்பு தெரிவித்தும் ஊடக படு கொலைகளை நினைவு கூரும் வகையிலான கறுப்பு ஜனவரி இன்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். ஊடக அமையத்துடன் இணைந்து தென்னிலங்கை முன்னணி ஊடக அமைப்பான சுதந்திர ஊடக இயக்கம் நினைவேந்தலை முன்னெடுத்திருந்தது.

இலங்கை அரசினால் நேற்றைய நாள் நிறைவேற்றப்பட்ட நிகழ் நிலை சட்டமூலத்தின் அபாயங்கள் தொடர்பில் சிவில் அமைப் புக்களது பிரதிநிதிகள் தெளிவூட்டப்பட்டிருந்தனர்.

அதேவேளை படுகொலை செய்யப்பட்ட மாற்றும் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்கள் நினைவேந்தி சுடரேற்றிஅ ஞ்சலி செலுத்தப்பட்டிருந்தது.

இதனிடையே இலங்கையின் 76வது சுதந்திர தினத்தை ஈழத் தமிழர்களின் கரிநாளாக பிரகடனம் செய்வது தொடர்பாக சிவில் அமைப்புக்கள் அழைப்பு விடுத்துள்ளன.

எதிர்வரும் இலங்கை 76வது சுதந்திர தினமான 4ம் திகதியை ஈழத் தமிழர்களின் கரிநாள் அனுஸ்டிப்பு நாளாக தமிழ் தேசிய மக்கள் இயக்கம் பிரகடனம் செய்துள்ளது.

தற்போது வரை இலங்கை பௌத்த சிங்கள பேரினவாத அரசு தொடர்ந்து தமிழ் தேசிய நிலப்பரப்பில் முன்னெடுத்துச் செல்லும்




இனப் படுகொலைகளை இனங்காட்ட சுதந்திர தினத்தை கரி நாளாக முன்னெடுக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.








# நிகழ் நிலை காப்புச் சட்டமூலத்தை இலங்கை நிறைவேற்றியமைக்கு அமெரிக்கா கவலை?

ஜனவரி 25, 2023

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலசினால் சபைக்கு சமர்ப்பித்திருந்த நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் 46 மேலதிக வாக்குகளால் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் நிறைவேற்றப்பட் டுள்ளமை தொடர்பில் அமெரிக்கா தனது கவலையை வெளியிட் டுள்ளது.

இது குறித்து இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

"சிவில் சமூகம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்ளிட்ட முக்கிய பங்குதாரர்களின் கோரிக்கைகளை உள்ளடக்காமல் பாராளுமன்றில் நேற்று நிறைவேற்றப்பட்ட இலங்கையின் நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தின் சாத்தியமான தாக்கம் குறித்து அமெரிக்கா கவலை கொண்டுள்ளது.

ஜனநாயக விழுமியங்களை ஆபத்தில் தள்ளுவதுடன் தெளி வற்ற மற்றும் மிகையான கடுமையான சட்டங்கள் முதலீடு மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு இடையூறாக அமையும் என்பதுடன் இலங்கையின் பொருளாதார வளர்ச் சியைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும்.

வெளிப்படைத்தன்மைக்கு முன்னுரிமை அளிக்குமாறும், எந்த வொரு சட்டமும் மக்களின் குரல்களை நசுக்காமல் இருப்பதை உறுதி செய்யுமாறும் இலங்கையை அமெரிக்கா வலியுறுத் துகிறது. என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.


Ambassador Julie Chung
@USAmbSL

The United States remains concerned about the potential impact of Sri Lanka's Online Safety Bill, which passed yesterday without incorporating important input from key stakeholders, including civil society and tech companies who say that this legislation threatens freedom of expression, innovation, and privacy.

In addition to jeopardizing democratic values, vague and overly restrictive legislation can hinder investment and the development of a digital economy, undermining the economic growth that Sri Lanka needs. The U.S. urges Sri Lanka to prioritize transparency and ensure any legislation does not stifle the voices of its people.

1:27 PM · Jan 25, 2024 · 12 Views

# அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு முன்வைத்துள்ள 11 கோரிக்கைகள்!

## வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஒருங்கிணைப்பாளர் கண்டுமணி லவகுகராசா

ஜனவரி 25, 2024

ஐக்கிய இலங்கைக்குள் இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெறமுடியாத சமஸ்டி முறையிலான அதிகாரப் பகிர்வான தீர்வை பெறுவதற்காக நாங்கள் முன்வைக்கும் 11 கோரிக்கைகளை அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் கட்சிகளும் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும் என ஒருங்கிணைப்பாளர் கண்டுமணி லவகுகராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஒருங்கிணைப்பாளர் கண்டுமணி லவகுகராசா வியாழக்கிழமை (25) ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசிய அரசியலின் வரலாற்றிலும், தமிழரசுக் கட்சியின் வரலாற்றிலும் முதன்முதல் வாக்கெடுப்பு மூலம் கட்சித் தலைமையை தெரிவு செய்வது ஜனநாயகப் பண்பை வரவேற்பதோடு இது நிலைத்திட வேண்டும்.

இலங்கை நாட்டின் உள்ளக அரசியல், பிராந்திய அரசியல் மற்றும் சர்வதேச சூழல் ஆகியன சிக்கல்மிக்கதாகக் காணப்படும் தற்போதைய சூழலில், தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்றிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் முன்னால் பாரிய கடப்பாடுகள் உள்ளது. வீழ்ச்சியடைந்திருக்கும் தமிழ்த் தேசிய அரசியலை பரந்துபட்ட மக்களின் பங்கேற்புடன் மீளவும் கட்டியெழுப்ப வேண்டும்.

உணர்ச்சிகரமான அரசியல் என்பது நாம் எமது சுய தேசிய உணர்ச்சிகளுக்கு தீனி போடுவது மாத்திரமேயாகும். இது தமிழ் தேசத்தை ஏனைய சமூகங்களிடமிருந்து அந்நியப்படுத்துவதுடன் தமிழ் தேசம் தனது நியாயாதிக்கத்தை சர்வதேச அளவில் இழக்கவும் காரணமாகிறது. தமிழ் தேசிய அரசியலை அறிவுபூர்வமான நவீன அரசியல் கொள்கைகளுடன் கூடிய அரசியலாக பரிணமிக்கச் செய்யவேண்டிய கடப்பாடு தமிழ் அரசியல் கட்சிகளுக்கு உள்ளது.

வடக்கு கிழக்கு பிரதேசத்தை தமது தாயகமாகக் கொண்ட தமிழ் மக்களுக்கும், அதேபோல் இப்பிரதேசத்தை தமது பூர்வீகமாகக் கொண்ட முஸ்லிம் மக்களுக்கும், சிறுபான்மையினராக பல காலமாக எல்லையோரக் கிராமங்களில் வாழந்து வரும் சிங்கள மக்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்த வேண்டிய கடப்பாட்டை தமிழ் அரசியல் கட்சிகள் கொண்டுள்ளன. எந்தவொரு சந்தர்ப்பத்திலும், தமிழ்த் தேசிய அரசியலையும் தழிழ் மக்களையும் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்கள் மற்றும் சிங்கள மக்களிடமிருந்து பிரிக்காதவாறு கொள்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

குறிப்பாக வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்கள் மத்தியில், தமிழ் தேசிய அரசியல் தலைமைத்துவங்கள் சார்ந்து சந்தேகங்கள் எழாதவாறு உறவுகளை வெளிப்படைத் தன்மையுடன் பேணவேண்டிய பொறுப்பு காணப்படுகிறது

வடக்கு கிழக்கு தமிழ் சமூகத்தில் காலங்காலமாகக் காணப்பட்டுவரும் ‘சமூக ஊனங்களான’ யாழ் மேலாதிக்கவாதம், பிரதேசவாதம், மத ரீதியான வெறுப்புணர்வுகள் மற்றும் புறக்கணிப்புகள், சாதிய அடக்குமுறை, ஆணாதிக்கம் ஆகிய பிற்போக்கான போக்குகளிலிருந்து தமிழ் சமூகத்தின் சிந்தனையை மாற்றி, சமூக சமத்துவ சிந்தனையைக் கட்டியெழுப்புவதன் மூலம் மாத்திரமே தனக்கான எதிர்காலம் குறித்து விஞ்ஞானபூர்வமாக சிந்திக்கும் ஆற்றல்கொண்ட உறுதியான தமிழ்த் தேசத்தை கட்டியெழுப்ப முடியும். அத்தகைய ஒரு மக்கள் சமூகத்தால் மாத்திரமே தனது அரசியல் இலக்குகளை அடையமுடியும். இதை அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் தமது அடிப்படைக் கொள்கையாக ஏற்க வேண்டும்.

சிங்கள இனவாத அடக்குமுறைகளின் காரணமாக வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்து வாழும் மலையகத் தமிழ்மக்களின் வழித்தோன்றல்கள் வடக்கு கிழக்கின் மக்கள் வாழ்வியலுடன் பிணைந்துவிட்டனர். இந்தப் பிணைப்பில் சிறு கீறல்கூட ஏற்படுத்தாவண்ணம் பொறுப்புடன் செயற்பட வேண்டிய கடப்பாடு தமிழ் அரசியல் தலைமைகளுக்கு உள்ளது.

தமிழரசுக் கட்சி அடங்கலாக அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளிலும் பெண்கள் மற்றும் இளையோரின் பங்கேற்புக்கு கதவுகள் அடைக்கப்பட்டே உள்ளன. தழிழ் அரசியல் தளத்தில் முற்போக்கான ஜனநாயகமான சிந்தனைகள் பரிணமிக்காது தமிழ்த் தேசிய அரசியல் தளம் முடங்கிக் கிடப்பதற்கு இது முக்கிய காரணமாகும். தமிழ்க் கட்சிகள் தமது அங்கத்துவ எண்ணிக்கையை உயர்த்தி மக்கள் மயப்பட்ட கட்சிகளாக தமது கட்சிகளை மாற்ற வேண்டும்.

புலம்பெயர் நாடுகளில் வாழும் பல்வேறு சக்திகளும் தமிழ் அரசியலில் தமது செல்வாக்கைச் செலுத்த முயல்கின்றனர். இவர்களின் ஆளுகைக்கு உட்படாது, வடக்கு கிழக்கு தாயகப் பிரதேசத்தில் வேரூன்றி தமது உரிமைக்காக அன்றாடம் போராடிக்கொண்டு வாழுந்துவரும் மக்களின் நலன்களையே தமிழ் அரசியல் கட்சிகள் பிரதிபலிக்க வேண்டும்.

அரச இனவாதத்துக்கு சரணடையாத கொள்கையைக் கொண்டிருக்க வேண்டும்,

தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரண்டு சிதறிக் கிடக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீளவும் பலப்படுத்த வேண்டும். ஆபிரிக்க தேசிய காங்கிரசில் காணப்பட்ட கூட்டுப் பலமே தென்னாபிரிக்க மக்களின் வெற்றிக்கு அடிப்படையாக அமைந்தது. இந்த உண்மையை தமிழ் அரசியல் கட்சிகள் ஏற்றாக வேண்டும்.

வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையான, ‘ஐக்கிய இலங்கைக்குள் இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு’ என்பதை தமது இலக்காகக் கொண்டு செயற்பட வேண்டும்.

இந்த 11 கோரிக்கைள் தொடர்பாக அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் இந்த கோரிக்கைகளை உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

# “மன்னாரின் வழங்களை அழிக்காதே” மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம்!

ஜனவரி 26, 2024

மன்னாரில் இடம்பெற்று வருகின்ற சுற்றுச்சூழலை அழிக்கும் சட்ட விரோத செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் மக்கள் நலமாக வாழ நாட்டின் வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பவற்றை வலியுறுத்தி மன்னாரில் இன்று வெள்ளிக்கிழமை (26) காலை மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

அத்தோடு, மன்னாரில் இடம்பெற்று வரும் பாரிய களிமண் அகழ்வு மற்றும் உயர்மின்வலு காற்றாடிகள் அமைக்கும் திட்டங்கள் காரணமாக மன்னார் தீவு மக்களது இருப்பில் பிரச்சினை, வாழ்வாதார பாதிப்பு, சட்டவிரோத காணி அபகரிப்பு, மரங்கள் அழிப்பு போன்றவற்றால் மன்னார் தீவு கடலுக்குள் அமிழப் போவதாகவும் இதன்போது போராட்டக்காரர்கள் எடுத்துரைத்தனர்.

மன்னார் பிரதான பாலத்தில் தொடங்கிய இந்த போராட்டம், சில மணிநேரங்கள் மாவட்ட செயலகத்தின் முன்னாலும் இடம்பெற்றது.

இப்போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ‘மனித உயிர்களை காவு கொள்ளுகின்ற மண் அகழ்வு, காற்றாலை நடவடிக்கைக்கு காணிகளை விற்காதே’, ‘மண் அகழ்வை நிறுத்தாவிடில் நன்னீர் மாசடைவதுடன் உப்புத் தன்மையும் அதிகரிக்கும்’, ‘மன்னாரின் சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைவோம்’, ‘கனியவள மண் அகழ்வு மன்னார் மக்களின் வாழ்வாரத்தை அழித்துவிடும்’ போன்ற வாசகங்கள் குறிப்பிடப்பட்டிருந்த பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பினர்.

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் எற்பாட்டில் நடைபெற்ற இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் மதத் தலைவர்கள், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், வடக்கு தெற்கு முக்கியஸ்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது வடக்கு, தெற்கு முக்கியஸ்தர்கள், இஸ்லாமிய மற்றும் கத்தோலிக்க மதத்தலைவர்கள், அரச சார்பற்ற அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள் என பலர் உரையாற்றினர்.




அதைத் தொடர்ந்து, மன்னார் மாவட்ட செயலகத்துக்கு சென்ற போராட்டக்காரர்கள், அங்கு மன்னார் மேலதிக அரசாங்க அதிபரிடம் (காணி) ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்குமாறு மகஜர் ஒன்றை கையளித்தனர்.













# நிகழ்நிலை காப்புச் சட்டத்திற்கு கண்டனம் தெரிவித்தும் யாழில் கவனயீர்ப்புப் போராட்டம்!

ஜனவரி 26, 2024




இலங்கை அரசினால் நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலை காப்பு சட்டத்திற்கு கண்டனம் தெரிவித்தும் ஊடக அடக்குமுறைகள் மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்திற்கு எதிரான நடவடிக்கைகளை கண்டித்து யாழில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இன்று (26) வெள்ளிக்கிழமையன்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் ஊடக அமைப்புக்களுடன் சிவில் அமைப்புக்களும் இணைந்திருந்தன.

ஊடக அடக்குமுறைகள் மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்திற்கு எதிரான நடவடிக்கைகளை கண்டித்து யாழ். ஊடக அமையத்தினால் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஊடக அமையத்துடன் இணைந்து தென்னிலங்கை முன்னணி ஊடக கூட்டமைப்பான உழைக்கும் பத்திரிகையாளர் சங்கமும் போராட்டத்தில் இணைந்திருந்தது.

யாழ்.பொது நூலகத்தில் இருந்து பேரணியாக யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு சென்ற போராட்டகாரர்கள் அங்கு ஆர்ப்பாட்டத்தில் குதித்திருந்தனர்

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்,வலிந்து காணாமல் ஆக்கபட்டோர் சங்கம்,அரசியல் கைதிகளை விடுதலைக்கான அமைப்பு,பல்கலைக்கழக ஊழியர் சங்கம் உள்ளிட்ட சிவில் அமைப்புக்களின் பங்கேற்புடனும் போராட்டமானது முன்னெடுக்கப்பட்டிருந்தது.










# கொக்கட்டிச்சோலை படுகொலையின் 37வது ஆண்டு நினைவேந்தல்!

ஜனவரி 28, 2024

மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலையில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று இடம் பெற்றது. இதன்போது மகிழடித்தீவில் அமைக்கப்பட்டுள்ள நினைவு தூபியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி உறுப்பினர்கள் சுடர் ஏற்றி இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தினர்.
கடந்த 1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி கொக்கட்டிச்சோலை பிரதேசத்தை சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் அங்கிருந்த அப்பாவி பொதுமக்கள் 152 பேரை கைது செய்து துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்தனர்.

இந்த நிலையில் 37 ஆவது நினைவு நினைவுநாளை தமிழ் தேசிய மக்கள் முன்னணி வெல்லாவெளி அமைப்பாளர் குமாரசிங்கம் தலைமையில் கட்சி உறுப்பினர்கள் உயிரிழந்தவர்களின் ஆத்ம சாந்தியடைய நினைவு தூபியில் சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தினர்.





# கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்களால் கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவேந்தல்!

ஜனவரி 28, 2024

சிறீலங்கா சிங்களப் படைகளால் அரங்கேற்றப்பட்ட கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவேந்தல் நிகழ்வு முழு அளவில் மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் சிறீலங்கா இராணுவத்தினால் 1987 ஆம் ஆண்டின் இதே நாளன்று 83 அப்பாவி தமிழ் உறவுகள் வெட்டி படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.
நினைவேந்தல் நிகழ்வானது கிழக்குப்பல்கலைக்கழக தமிழ் மாணவர்களால் நேற்று (28) பொங்கு தமிழ்த் தூபியின் முன்பாக ஈகைச்சுடரேற்றி மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதேவேளை கொக்கட்டிச்சோலை படுகொகொலை 37, வது ஆண்டு நினைவு வணக்கம் மகிழடித்தீவு சந்தி நினைவுத்தூபியில் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் உறுப்பினர்களால் சுடர் ஏற்றி மலர்வணக்கம் செலுத்தப்பட்ருந்தது.

முன்னதாக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளும் மகிழடித்தீவு சந்தி நினைவுத்தூபியில் நினைவேந்தலை முன்னெடுத்திருந்தன.









# சிறீலங்கா சுதந்திர நாளை வடக்கு, கிழக்கில் தமிழ் தாயகத்தில் கறுப்பு நாளாக பிரகடனம்!

ஜனவரி 29, 2024




பிரித்தானியப் பேரரசின் காலனித்துவ நாடாக 133 வருடங்கள் இருந்த இலங்கையின் 76ஆவது சுதந்திர நாளை வடக்கு கிழக்கு மாகாணங்கள் முழுவதும் 'கறுப்பு நாள்'ஆக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பெப்ரவரி 4 ஆம் திகதி கறுப்பு நாளாக பிரகடனப்படுத்தப்படுவதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியன அறிவித்துள்ளன.

தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வுக்கான முன்னேற்றகரமான வேலைத்திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் கு.துவாகரன் குறிப்பிட்டுள்ளார்.

"தமிழ் மக்களுக்கான உரிமைகள் மீறப்படுகின்றன. இருப்பு கேள்விக்குரியாகியுள்ளது. அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன. ஆட்சிகளும், ஆட்சியாளர்களும் மாறுகின்றார்கள். எனினும் தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு என்பது இன்று வரை முன்னேற்றகரமான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை. அது வெறும் பேசுப்பொருளாக மாத்திரமே இருக்கின்றது. பெப்ரவரி ஆகவே வடக்கு, கிழக்கு தழுவிய கரிநாளாக பிரகடனப்படுத்துகின்றோம்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் தீர்வு கிடைக்கும் வரை தமிழ் மக்கள் தொடர்ந்து போராட வேண்டும் என மாணவர் ஒன்றிய தலைவர் மேலும் வலியுறுத்தியிருந்தார்.

"அரசாங்கம் பல்வேறு புதிய சட்டங்கள் ஊடாக தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்களை தடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது. அரசியல் தீர்வு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் அத்துமீறிய குடியேற்றங்கள், நிலங்களை கைப்பற்றி விகாரைகளை அமைக்கும் செயற்பாடுகளாகள் என இவை தொடர்கின்றன. ஆகவே தமிழர்களின் தீர்வு எட்டப்படும் வரை போராடியே ஆகவேண்டும் என்பதே வரலாற்று உண்மை."

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய அம்பாறை மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி தம்பிராசா செல்வராணி, காணாமல் போனோர் அலுவலகம் (OMP) மற்றும் அரசாங்கத்தின் புதிய உண்மை ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் ஆணைக்குழு (TURC) என்பன தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காகவே எனத் தெரிவித்துள்ளார்.

"14 வருடங்களாக நாங்கள் எமது போராட்டத்தை முன்னெடுகத்துக்கொண்டிருக்கின்றோம். எத்தனை ஜனாதிபதி மாறி மாறி வந்தாலும். எனினும் எமக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை. எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை யாரும் கூறவில்லை. 220ற்கும் மேற்பட்ட தாய்மாரை நாம் இழந்துள்ளோம். இவ்வாறான ஒரு சூழலிலேயே நாம் சர்வதேச நீதியை கோரி நிற்கின்றோம். ஓஎம்பி, டிஆர்சி என அனைத்தும் பொய்களே. எம்மை ஏமாற்றுவதற்காகவே இவைகள். பிள்ளைகளுக்கு, பாடசாலை மாணவர்களுக்கு என எவருக்கும் சுதந்திரம் இல்லை. எமது உரிமைக்காக போராடுவதற்கு எமக்கு சுதந்திரம் இல்லை. ஆகவேதான் நாங்கள் பெப்ரவரி 4ஐ கரிநாளாக பிரகடனப்படுத்துகின்றோம்."

மட்டக்களப்பு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் செயலாளர் சஹராஜன் சுகந்தி, திருகோணமலை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி கே.செபாஸ்டியன் தேவி ஆகியோர் குறித்த ஊடக சந்திப்பில் பங்கேற்றனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் எட்டு மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பெப்ரவரி 4ஆம் திகதி மட்டக்களப்பில் கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்துவதற்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கம் தீர்மானித்துள்ளதாக இந்த ஊடக சந்திப்பில் அறிவிக்கப்பட்டது.

# ஈழத் தமிழரைக் காக்குமாறுகோரி தமிழ்நாட்டில் தீக்குளித்து உயிர் துறந்த ஈகைப் போராளி முத்துக்குமாரின் 15 வது நினைவேந்தல்! 29.01.2024







# முல்லைத்தீவில் பட்டத் திருவிழா; இளைஞனை விசாரணைக்குட்படுத்திய பொலிஸார்!

ஜனவரி 29, 2024

முல்லைத்தீவு கடற்கரையில் பட்டத்திருவிழா ஞாயிற்றுக் கிழமை (28) மாலை சிறப்புற இடம்பெற்றது.



வல்வெட்டித்துறையில் வருடாவருடம் பட்டத்திருவிழா மேற்கொள்ளுபவர்களால் முல்லைத்தீவு கடற்கரையில் ஞாயிற்றுக் கிழமை (28) பட்டத்திருவிழா முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது, வித்தியாசமான வடிவில் பட்டங்களை உருவாக்கி சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பட்டம் ஏற்றி மகிழ்ந்திருந்தனர்.

குறித்த பட்ட திருவிழாவில் முல்லைத்தீவினை சேர்ந்த இளைஞர் ஒருவர் பட்டத்தில் தமிழீழ வரைபடம், கார்த்திகை பூவின் பட அமைப்பில் உருவாக்கப்பட்ட பட்டத்தினை ஏற்றியுள்ளார்.

இதனை தாம், அவதானித்தாக கூறி முல்லைத்தீவு பொலிஸார் அவ் இடத்திற்கு சென்று குறித்த இளைஞனை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.



# கேப்பாபிலவில் தீர்வுகளின்றி தொடரும் இரு குடும்பங்களின் போராட்டம்!

ஜனவரி 30, 2024



கேப்பாப்பிலவு பகுதியில் வீட்டில் வசிப்பதற்கு பாதுகாப்பு இல்லை, பொலிஸார் நியாயமான நீதியை பெற்றுக்கொடுக்க வில்லை என கோரி நீதிவேண்டி இரு குடும்பங்கள் நான்காவது நாளாக தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

முல்லைத்தீவு கேப்பாபிலவு கிராமத்தில் சட்டவிரோத செயற் பாட்டில் ஈடுபட்டுவரும் அயல் வீட்டு குடும்பஸ்தரினால் குறித்த கிராமத்தில் வசிக்கும் இரு குடும்பங்களுக்கும் தொடர்ச்சியாக வாக்குவாதம் இருந்து வந்த நிலையில் அது தொடர்பாக பொலி ஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டும் எவ்வித நடவடிக்கை களும் இதுவரை எடுக்கப்படவில்லை. இந்நிலையிலேயே கேப்பாபிலவு மாதிரி கிராமம் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக நான்கு நாட்களாக தொடர்ச்சியான முறையில் இரு குடும்பங்களை சேர்ந்த 12 பேர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இன்றையநாள் நான்காவது நாளாக தொடரும் இவர்களின் போராட்டத்தினை குறித்த பகுதி கிராம அலுவலரோ, பொலி ஸாரோ கண்டுகொள்ளவில்லை. இதுவரை குறித்த போராட்டத் திற்கான நீதி கிடைக்காததனால் இரு குடும்பங்களும் வீட்டிற்கு செல்ல முடியாமலும், வீட்டில் இருக்க பாதுகாப்பற்ற நிலையிலும் வீதியிலேயே இருக்கின்றனர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபடும் இரண்டு குடும்பங்களை சேர்ந்தவர்கள் கருத்து தெரிவிக்கும் போது குறித்த பகுதி கிராம அலுவலரும் தம்மை கண்டு கொள்ளவில்லை எனவும், பொலிஸார் நேரடியாக நீதிமன்றத்துக்கே தம்மை அனுப்புவ தாகவும், தமக்கு குழந்தைகளும் இருப்பதனால் வீதியில் தொடர்ச்சியாக கொசுகடிக்குள் இருக்க முடியாது, வேலைக்கும் செல்ல முடியாது, வருமானமும் இல்லாமல் போக நாம் வீதி யிலையே இருக்கின்றோம். எம் பிள்ளைகள் வீதியிலே போகும் போது எதிராளிகள் துப்புகின்றனர். எல்லாவற்றிற்கும் ஆதாரம் இருக்கின்றது எனவும், எம் உயிர் போக முன்னமே சமா தானமாக வாழ நீதியை பெற்றுதருமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

இரு குடும்பத்தினரும் போராட்டத்தில் ஈடுபட்ட வேளை வீட்டில் தனிமையில் 14 வயதுடைய இரு சிறுவர்கள் இருந்தபோது பிரச்சினைக்குரிய அயல் வீட்டு குடும்பஸ்தர் அங்கு சென்று போதைப்பொருளை வைத்து விட்டு பொலிஸாரை அழைத்து வந்து குறித்த இரு சிறுவர்களையும் கைது செய்துள்ளனர். இச் சம்பவத்தினை கண்டித்தும், அடாவடியில் ஈடுபடும் அயல் வீட்டுக்காரர் மீது பொலிஸில் முறைப்பாடு செய்தும் நியாயம் கிடைக்கவில்லை எனவும் அதற்கான நீதி தமக்கு வேண்டும் எனவும், வீட்டில் இருப்பதற்கு தமக்கு பாதுகாப்பு இல்லை எனவும் கூறி இரு குடும்பங்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.

# விற்பனை செய்யப்படும் தமிழர் நிலப்பகுதிகள்!

ஜனவரி 30, 2024

பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் மத்தியில் மன் னாரில் காற்றாலை மின்னுற்பத்தி கருத்திட்டத்தை நடை முறைப்படுத்துவதற்கு இலங்கை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



மன்னார் தீவில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியின் கீழ் 47 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப் பட்டிருந்தது.

எனினும் பொருளாதார நெருக்கடி காரணமாக திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது தனியார் மன்னார் தீவில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையமொன்றை அமைக்க இலங்கை அமைச்சரவை அனுமதித்துள்ளது.

ஏற்கனவே பூநகரியில் கௌதாரிமுனை பகுதியிர்இந்திய தனியார் முதலீட்டாளர் அதானிக்கு காற்றாலைகளை அமைக்க இலங்கை அரசு அனுமதித்துள்ளது.

அதேபோன்று பூநகரியின் குடமுருட்டி பகுதியில் சுமார் 80 ஏக்கர் நிலப்பரப்பில் அவுஸ்திரேலிய நிறுவனமொன்றிற்கு சூரிய மின்சக்தி திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



எனினும் வழமையான கேள்வி கோரல்கள் இன்றி தன்னிச் சையாக தமிழர் பகுதிகள் தாரை வார்க்கப்பட்டுவருவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுவருகின்றமை குறிப் பிடத்தக்கது.

# சுதந்திர நாளன்று கரிநாள் பேரணிக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு!

ஜனவரி 31, 2024

இலங்கையின் சுதந்திர தினத்தை கறுப்பு நாளாக அனுஷ்டிப் பதுடன், அன்றைய தினம் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ள மாபெரும் கண்டனப் போரணியில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக அவர்கள் ஊடகங்களுக்கு அனுப் பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

பிரித்தானிய காலனித்துவத்தின் பிடியிலிருந்து இலங்கை சுதந்திரம் அடைந்த நாள் தமிழ்த் தேசிய இனம் திறந்தவெளி சிறையில் இடப்பட்ட நாள். ஒட்டுமொத்த நாட்டினுடைய இறைமை, ஆட்சியதிகாரம் அனைத்தும் தனித்தே சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கைகளிலே ஒப்படைக்கப்பட்டமை என்பது தமிழினம் மீதான தொடர்ச்சியான இன ஒடுக்கு முறைகளிற்கே வழிகோலியது என்பதோடு, 2009 ஆண்டு இனப்படுகொலை எனும் கோரமுகமாய் வெளிப்பட்டதென்பது யாவரும் அறிந்ததொன்றே.

இலங்கையின் சுதந்திரத்திற்கு முன்னர் இருந்தே தமிழர் தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பென்பது சிங்கள குடியேற்றத் திட்டங்கள், இராணுவமயமாக்கம் முதற்கொண்டு தொடங்கிய இனவழிப்புச் செயன்முறை, 2009 ஆண்டு ஈழப்போர் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழர் தாயகத்தை சூறையாடுவதில் மேலும் தீவிரநிலை கொண்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழலில் பெப்ரவரி 04ம் திகதியை கறுப்பு நாளாக பிரகடனப்படுத்தி, பின்வரும் கோரிக்கைகளை முன் வைத்து கறுப்புதினப் பேரணியினை முன்னெடுக்க அழைப்பு விடுக்கின்றோம்.

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதோடு, தமிழர் தாயகத்தின் மீதான திட்டமிட்ட சிங்கள பௌத்த குடியேற்றங்கள் உள்ளிட்ட ஆக்கிரமிப்புக்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு தமிழர் தாயகத்தின் நில ஒருமைப் பாடு பாதுகாக்கப்பட வேண்டும். குறிப்பாக தற்போது கையறு நிலையில் உள்ள கிழக்கு மாகாணம் மீதான ஆக்கிரமிப்புக்கள் தாமதமேதுமின்றி முடிவுக்கு கொண்டு வரப்படவும் வேண்டும்.

ஈழத்தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆள்வதற்கும் வழி நடத் துவதற்கும் சுயநிர்ணய உரிமை உடையவர்களாவர் என்பதை ஏற்று ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப் பட வேண்டும். தமிழ் மக்களிற்கான அரசியல்தீர்வு தொடர்பான முயற்சிகள் யாவும் திம்புக் கோட்பாட்டினை அடியொற்றியே முன்னெடுக்கப்பட வேண்டும். இலங்கை ஒற்றையாட்சி அரசிய லமைப்பிற்குட்பட்ட பதின்மூன்றாம் திருத்தத்தினை முற்றாக நிராகரிக்கின்றோம்.

தமிழர் தாயகத்தில் முடிவற்றுத் தொடரும் திட்டமிட்ட சிங்கள குடி யேற்றங்கள், இராணுவப் பிரசன்னம், சிங்கள பௌத்தமய மாக்கம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி, தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை போன்றவற்றிற்கான உரிய தீர்வுகள் தாமதமேதுமின்றி வழங்கப்பட வேண்டும் என்பதோடு, ஆக்கிரமிப்புக்களை முன்னின்று

நடாத்தும் அரச இயந்திரத்தையும் அதன் நிறுவனங்களையும் கண்டிக்கின்றோம். தமிழர் தேசத்தின் மீது நூற்றாண்டு கடந் தும் சூழ்ந்துள்ள பேரினவாதத்தீயிலிருந்து தமிழர் தாயகத்தை காத்திடவும், தலைமுறைகள் தாண்டிய இனத்தின் இருப்பிற் காகவும் எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி, கிளிநொச்சி இரணைமடு சந்தியிலிருந்து டிப்போச் சந்திவரை நடைபெறும் கரிநாள் பேரணியில் பங்குகொள்ள உணர்வுடனும் உரிமை யுடனும் அழைத்து நிற்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
JAFFNA UNIVERSITY STUDENTS' UNION

ஊடக வெளியீடு | Press Release

2024.01.31

**பெப்ரவரி 04 – தமிழர் தேசத்தின் கறுப்புநாளிற்கான அழைப்பு !**

பிரித்தானிய காலனித்துவத்தின் பிடியிலிருந்து சிறிலங்கா, 04.02.1948 ஆம் ஆண்டு விடுதலை பெற்ற நாள் தமிழ்த் தேசிய இனம் திறந்தவெளி சிறையில் இடப்பட்ட நாள். ஒட்டுமொத்த நாட்டினுடைய இறைமை, ஆட்சியதிகாரம் அனைத்தும் தனித்தே சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கைகளிலே ஒப்படைக்கப்பட்டமை என்பது தமிழினம் மீதான தொடர்ச்சியான இன ஒடுக்குமுறைகளிற்கே வழிகோலியது என்பதோடு, 2009 ஆண்டு இனப்படுகொலை எனும் கோரமுகமாய் வெளிப்பட்டதென்பதும் யாவரும் அறிந்ததொன்றே...

சிறிலங்காவின் சுதந்திரத்திற்கு முன்னர் இருந்தே தமிழர் தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பென்பது சிங்கள குடியேற்றத்திட்டங்கள், இராணுவமயமாக்கம் முதற்கொண்டு தொடங்கிய இனவழிப்புச் செயன்முறை, 2009 ஆண்டு ஈழப்போர் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழர் தாயகத்தை சூறையாடுவதில் மேலும் தீவிரநிலை கொண்டுள்ளது.

இவ்வாறானதொரு சூழலில் பெப்ரவரி 04, 2024 ஐ கறுப்புநாளாக பிரகடனப்படுத்தி, பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து கறுப்புதினப் பேரணியினை முன்னெடுக்க அழைப்பு விடுக்கின்றோம்.

1. வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதோடு, தமிழர் தாயகத்தின் மீதான திட்டமிட்ட சிங்கள – பௌத்த குடியேற்றங்கள் உள்ளிட்ட ஆக்கிரமிப்புக்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு தமிழர் தாயகத்தின் நில ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டும். குறிப்பாக தற்போது கையறு நிலையில் உள்ள கிழக்கு மாகாணம் மீதான ஆக்கிரமிப்புக்கள் தாமதமேதுமின்றி முடிவுக்கு கொண்டு வரப்படவும் வேண்டும்.
2. ஈழத்தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆள்வதற்கும் வழிநடத்துவதற்கும் சுயநிர்ணய உரிமை உடையவர்களாவர் என்பதை ஏற்று ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்.
3. தமிழ் மக்களிற்கான அரசியற்தீர்வு தொடர்பான முயற்சிகள் யாவும் திம்புக் கோட்பாட்டினை அடியொற்றியே முன்னெடுக்கப்பட வேண்டும். சிறிலங்கா ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்குட்பட்ட பதின்மூன்றாம் திருத்தத்தினை முற்றாக நிராகரிக்கின்றோம்.
4. தமிழர் தாயகத்தில் முடிவற்றுத் தொடரும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள், இராணுவப் பிரசன்னம், சிங்கள - பௌத்தமயமாக்கம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி, தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை போன்றவற்றிற்கான உரிய தீர்வுகள் தாமதமேதுமின்றி வழங்கப்பட வேண்டும் என்பதோடு, ஆக்கிரமிப்புக்களை முன்னின்று நடாத்தும் அரச இயந்திரத்தையும் அதன் நிறுவனங்களையும் கண்டிக்கின்றோம்.

தமிழர் தேசத்தின் மீது நூற்றாண்டு கடந்தும் சூழ்ந்துள்ள பேரினவாதத்தீயிலிருந்து தமிழர் தாயகத்தை காத்திடவும், தலைமுறைகள் தாண்டிய இனத்தின் இருப்பிற்காகவும் எதிர்வரும் **பெப்ரவரி 4, 2024 ஆம் நாள் கிளிநொச்சி இரணைமடு சந்தியிலிருந்து டிப்போச் சந்திவரை** நடைபெறும் கரிநாள் பேரணியில் பங்குகொள்ள உணர்வுடனும் உரிமையுடனும் அழைத்து நிற்கின்றோம்.

நன்றி




# கனடா அரசின் சார்பாக தமிழ் சமூகங்களுக்கு இனிய தைப் பொங்கல் வாழ்த்துக்கள்!

கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ

ஜனவரி 15. 2024

கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தைப்பொங்கலை முன்னிட்டு விசேட வாழ்த்துச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

கனடாவிலும் உலகம் முழுவதும் உள்ள தமிழ்ச் சமூகங்கள் அறுவடைத் திருவிழாவென்று அறியப்படும் தைப்பொங்கல் பண்டிகையை இன்று கொண்டாடுகின்றனர்.

தைப்பொங்கலின் போது அமோக விளைச்சலுக்கு நன்றி பாராட்டுவதற்கும் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளவும் உறவினர்களும் நண்பர்களும் ஒன்றுகூடுவார்கள்.

மகிழ்ச்சி, அமைதி, சமூகம் ஆகியவற்றுக்கான இந்தக் காலத்தில் பொங்கல் பொங்கப்படும் அரிசியும் பாலும் சேர்ந்த பாரம்பரிய உணவான பொங்கல் நல்வாய்ப்புக்கும், எதிர்வரும் ஆண்டின் செல்வச் செழிப்புக்கும் குறியீடாக விளங்கும். கனடாவில் ஜனவரி மாதம் மரபுத் திங்களாகவும் கடைபிடிக்கப்படுகின்றது.

தமிழ் கனடியர்களின் செழிப்பான வரலாறு, மீண்டெழும் தன்மை, வலிமை என்பன குறித்து சிந்திப்பதற்கான சந்தர்ப்பத்தை எம் அனைவருக்கும் வழங்குகின்றது.

மிகப்பெரும் புலம்பெயர் தமிழ் சமூகங்களில் ஒன்று கனடாவில் உள்ளது. அதன் தொடரும் பங்களிப்பு, பன்முகத்தன்மை மேலும் அதிகமானதும், மேலும் செல்வச் செழிப்பானதும், மேலும் அதிகம் அனைவரையும் உள்ளடக்கியதுமாக கனடாவை மாற்றுவதற்கு உதவுகின்றது.

தைப்பொங்கல் கொண்டாடும் அனைவருக்கும் கனடிய அரசின் சார்பாக மகிழ்ச்சியான பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.




இனிய தைப்பொங்கல் வாழ்துகள் என பிரதமர் ட்ரூடோ தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# உலகில் போக்குவரத்து நெரிசல் அதிகமான நகரங்களில் ரொரான்ரோ மூன்றாம் இடம்!

ஜனவரி 16, 2023

உலகில் போக்குவரத்து நெரிசல் அதிகமான நகரங்களில் கனடாவின் ரொரான்ரோ நகரம் முன்னணி வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போக்குவரத்து நெரிசல் அதிகமான நாடுகளின் உலக தர வரிசையில் ரொரான்ரோ மூன்றாம் இடத்தை வகிக்கின்றது.

லண்டன் மற்றும் டப்ளின் ஆகிய நகரங்கள் முதல் இரண்டு இடங்களையும் வகிக்கின்றன.

ரொரான்ரோவில் பத்து கிலோ மீற்றர் தூரத்தைக் கடப்பதற்கு சராசரியாக 29 நிமிடங்கள் தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, வட அமெரிக்காவில், அதிக போக்குவரத்து நெரிசல் கொண்ட நகரமாக ரொரான்ரோ அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

நியூயோர்க் மற்றும் மெக்ஸிக்கோ ஆகிய நகரங்களை பின்தள்ளி மிக மோசமான போக்குவரத்து நெரிசல் கொண்ட நகராக ரொரான்ரோ பட்டியலிடப்பட்டுள்ளது.

டொம் டொம் என்ற நிறுவனம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. வருடாந்த போக்குவரத்து நெரிசல் குறித்த அறிக்கையை இந்த நிறுவனம் வெளியிட்டு வருகின்றது.

கடந்த 2023ம் ஆண்டில் ரொரான்ரோ பிரஜைகள் போக்குவரத்து நெரிசல் காரணமாக 98 மணித்தியாலங்களை இழக்க நேரிட்டுள்ளது.




# கனடாவின் பணவீக்கம் அதிகரிப்பு!

ஜனவரி 17, 2023

கனடாவில் பணவீக்கம் அதிகரித்துள்ளதாக அந்நாட்டு மத்திய புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் வருடாந்த பணவீக்கமானது 3.4 வீதமாக காணப்பட்டது.

இதேவேளை, நவம்பர் மாதம் பணவீக்கமானது 3.1 வீதமாக காணப்பட்டது.

கடந்த 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் எரிபொருள் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியானது பணவீக்கத்தில் சாதக மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

கடந்த 2022ம் ஆண்டில் வருடாந்த பணவீக்க வீதம் 6.8 வீதமாக காணப்பட்டது.

2023ம் ஆண்டில் பணவீக்க வீதம் 3.9 வீதமாக குறை வடைந்துள்ளதாகவும் புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.




# கனடா ஒன்ராரியோ மாநில சட்டசபையில் தமிழ் மரபுத் திங்கள் விழா!

ஜனவரி 12, 2023



கடந்த வெள்ளிக்கிழமை 12.01.2024 அன்று ஒன்ராரியோ மாநில சட்டசபையில் போக்குவரத்து இணை அமைச்சரும், ஸ்காபரோ ரூஜ் பார்க்கின் ஒன்ராரியோ பாராளுமன்ற உறுப்பினருமான விஜய் தணிகாசலம் அவர்களின் தலைமையில் தைப்பொங்கல் மற்றும் தமிழ் மரபுத் திங்கள் விழா இடம் பெற்றது.

இவ்விழாவில் ஒன்ராரியோ பாராளுமன்ற அமைச்சர் மற்றும் உறுப்பினர்களான ரெய்மன்ட் சோ, அரிஸ் பபிக்கியன் மற்றும் டோன் கலகர் மேர்ஃபி ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் தமிழ்க் கனடியார்களின் பங்களிப்பு மற்றும் தமிழ் மரபுத் திங்களின் முக்கியத்துவத்துவத்தை நிலைநாட்டும் விதமாக பாடல், பரதநாட்டியக்கலையோடு தமிழினத்தின் தொன்மையான அடையாளமாகிய பறை இசை நிகழ்ச்சியும் மேடையேற்றப்பட்டது. மேலும் இதில் பல தமிழ் அமைப்புகள், தமிழ் மாணவர் சங்கங்கள், தமிழ் நலன்புரிச் சங்கங்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து விழாவை சிறப்பித்திருந்தனர்.



## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# கனடாவில் மாணவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த தீர்மானம்!

ஜனவர் 22, 2023

புதிய சர்வதேச மாணவர்களின் வருகையை குறைப்பதற்கான நடவடிக்கைகளை கனேடிய அரசு மேற்கொள்ளவுள்ளதாக கனடாவின் குடிவரவு மற்றும் குடியகல்வு அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், 2024ஆம் ஆண்டுக்கான புதிய சர்வதேச மாணவர்களின் வருகையானது 360,000ஆக குறைக்கப் படவுள்ளது.

புலம்பெயர் மாணவர்கள் கனடா நாட்டின், சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்பின் வளர்ச்சிக்கு கடந்த காலங்களில் பெரிதும் பங்காற்றி வந்துள்ளார்கள்.

ஆனால், அண்மைக்காலமாக கனடா நாட்டில் சர்வதேச மாண வர்களின் அதிகரித்துள்ள வருகையானது, கனேடிய அரசாங் கத்திற்கு பெரும் சவாளை வழங்கியுள்ளது.

கனடாவின் சில கல்வி நிறுவனங்கள், தமது வருமானத்தை அதிகரிப்பதற்காக அண்மைக்காலமாக அதிகளவிலான சர்வ தேச மாணவர்களை அனுமதித்து வருகின்றது.

இதில் பல மாணவர்கள் தமது கல்விப்பயணத்தை வெற்றிகர மாக நிறைவு செய்ய தேவையான வசதிகள் இன்றி கனடாவுக்கு வருகை தருவதால் அவர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள் கின்றனர்.

மேலும், தொடர்ச்சியாக அதிகரிக்கும் சர்வதேச மாணவர்களின் வருகையால், கனடாவில் தங்குமிட வசதிகள் மற்றும் மருத்துவ வசதிகளில் இறுகிய நிலை ஒன்று காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது போன்ற காரணங்காளால் கனேடிய அரசானது, சர்வதேச மாணவர்களின் வருகையை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.



# கனடாவுக்கு கல்வி பயில வரும் மாணவர்களின் விசா காலத்தில் மாற்றம்; கனடா அரசின் உத்தரவு!

ஜனவரி 23, 2023

கனடாவுக்கு கல்வி பயில வரும் மாணவர்களுக்கு வழங்கப் படும் விசா காலம் இரண்டு ஆண்டுகள் என கனடா அரசு நிர்ணயித்துள்ளது.



இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டு குடியேற் றத்துறை அமைச்சர் மார்க் மில்லர், "கனடாவுக்கு கல்வி பயில வரும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்கும் நோக் கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022-ம் ஆண்டு 8 லட்சத்துக்கும் மேற்பட்ட கல்வி விசாக்கள் வழங்கப்பட்டன.

2023-ம் ஆண்டு 5.60 இலட்சம் மாணவர் விசாக்கள் வழங்கப் பட்டன. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 35 சதவீதம் அள வுக்கு மாணவர் விசாக்களை குறைக்க முடிவெடுத்துள்ளோம்.

இதனால் இந்த ஆண்டு 3.64 இலட்சம் மாணவர்களுக்கு மட்டுமே விசாக்கள் வழங்கப்படும். இரண்டு ஆண்டுகள் வரை மட்டும் அந்த விசா செல்லுபடியாகும்" என தெரிவித்தார்.

மேலும், கனடாவில் தங்குவதற்கு வீடுகள் கிடைப்பதில் மாணவர்கள் பெரும் இன்னல்களை சந்திக்கின்றனர். கனடா வரும் மாணவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்வதே இந்த பிரச்சினைக்குக் காரணம்.

இதைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கனடா அரசு எடுத்துள்ள இந்த முடிவுக்கு மற்றொரு காரணமும் இருக்கிறது என தெரிவித்த மார்க் மில்லர், சில கல்வி நிறு வனங்களில் சேர்ந்தால் உடனடியாக வேலைவாய்ப்பு கிடைக் கும், நிரந்தர கனடா வாசியாக மாற முடியும் என்றெல்லாம் போலியான விளம்பரங்களை கொடுத்து மக்களை ஏமாற்றி வருவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.




இதைக் கட்டுப்படுத்தவும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரி வித்தார். கனடா அரசின் இந்த முடிவினால் இந்திய மாண வர்கள் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

# கனடாவின் வட்டி வீதம் குறித்து கனடிய மத்திய வங்கி அறிவிப்பு!

ஜனவரி 24, 2023

கனடாவின் வட்டி வீதத்தில் மாற்றமில்லை என கனடிய மத்திய வங்கி அறிவித்துள்ளது.




வங்கி வட்டி வீதம் தொடர்ந்தும் ஐந்து வீதமாக பேணப்படும் என மத்திய வங்கியின் ஆளுனர் ரிப் மெக்கலம் தெரிவித்துள்ளார்.

விலை ஸ்திரத்தன்மையை பேணும் நோக்கில் பல்வேறு நட வடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

பொருளாதார வளர்ச்சி வேகம் உள்ளிட்ட காரணிகளின் அடிப் படையில் வட்டி வீதம் மாற்றமின்றி பேணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், பணவீக்கம் தொடர்ந்தும் அதிகரித்தால் வட்டி வீதங்கள் உயர்த்தப்படும் என மத்திய வங்கியின் ஆளுனர் ரிப் மெக்கலம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.




# கனடாவில் களவாடப்பட்ட வாகனங்கள் இத்தாலியில் மீட்பு!

ஜனவரி 26, 2024

கனடாவில் களவாடப்பட்ட பெருந்தொகை வாகனங்கள் இத்தா லியில் மீட்கப்பட்டுள்ளன.

சுமார் 251 வாகனங்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது.

களவாடப்பட்ட வாகனங்கள் இத்தாலி வழியாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு கடத்தப்படவிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விலை அதிகமான மற்றும் உயர் பண்டக்குறிகளைக் கொண்ட வாகனங்களே இவ்வாறு களவாடப்பட்டுள்ளன.

இத்தாலிய பொலிஸார் இந்த வாகனங்களை மீட்டுள்ளனர். இன்டர்போல் மற்றும் கனடிய பொலிஸாரின் ஒத்துழைப்புடன் வாகனங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.




போலியான தகவல்களுடன் இந்த வாகனங்கள் கொள் கலன்கள் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விசா ரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.



# ரொரான்ரோவில் வீடு வீடாக சென்று இடம்பெறும் மோசடிக்கும்பல் தொடர்பில் காவல்துறை எச்சரிக்கை!

ஜனவர் 26, 2023

ஒன்ராரியோ - ரொறன்ரோவில் இடம்பெற்று வரும் மோசடி குறித்து பொலிஸார் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வீடு வீடாக சென்று ஒரு கும்பல் பாரியளவில் மோசடிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

சிக் கிட்ஸ் (SickKids Foundation ) என்ற அறக்கட்டளைக்காக நிதி திரட்டும் போர்வையில் இந்த மேசாடி இடம்பெற்று வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

போலியான கும்பல் ஒன்று நன்கொடைகளை திரட்டி வருவதாக பொலிஸார் பொதுமக்களை எச்சரித்துள்ளனர்.

மெய்யாயன சிக் கிட்ஸ் அமைப்பின் உறுப்பினர்கள் தங்களது பெயர், அடையாள இலக்கம் மற்றும் கியூ.ஆர் இலக்கம் என்பனவற்றை சமர்ப்பிப்பார்கள் என தெரிவித்துள்ளனர்.

கியூ.ஆர் கோர்ட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் விபரங்களை அறிந்து கொள்ள முடியும் என அறிவித்துள்ளனர்.

வீடுகள், பொதுமக்கள் குடியிருப்புக்களில் தமது நிறுவனம் நிதி திரட்டப் போவதில்லை எனவும் அதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்

நிறுவனத்தின் இணைய தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்கு இடமான நபர்கள் தொடர்பில் 416-808-2222 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும் என




பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கனடா மீண்டும் துருக்கிக்கு ஆயுத ஏற்றுமதி!

ஜனவரி 27, 2023

துருக்கிக்கு மீண்டும் ஆயுதங்களை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக கனடா அறிவித்துள்ளது.




ட்ரோன் உதிரிப் பாகங்கள் உள்ளிட்ட பல்வேறு ஆயுதங்கள் ஏற்றுமதி செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேட்டோ அமைப்பில் சுவீடன் மற்றும் பின்லாந்து என்பன உள்வாங்கப்படுவதற்கு அண்மையில் துருக்கி இணக்கம் வெளியிட்டது.

இதனைத் தொடர்ந்து துருக்கிக்கு ஆயுதங்கள் விற்பனை செய்ய கனடிய அரசாங்கம் தனது இணக்கப்பாட்டை வெளியிட்டுள்ளது.

இதன்படி விரைவில் துருக்கிக்கு கனடா ஆயுத ஏற்றுமதிகளை தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும், தற்போதைக்கு துருக்கிக்கான ஆயுத ஏற்றுமதி தடை நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



துருக்கிக்கு ஆயுத ஏற்றுமதி செய்வது குறித்த தீர்மானம் தொடர்பில் கனடிய வெளிவிவகார அமைச்சு அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

# ரொரான்ரோவில் வரி அதிகரிப்பு குறித்து வெளியான அறிவிப்பு!

ஜனவரி 30, 2023

ஒன்ராரியோ - ரொரான்ரோவில் வரி அதிகரிப்பு தொடர்பில் நகர மேயர் ஒலிவியா சொள தெரிவித்துள்ளார்.

ரொரான்ரோவில் பாரியளவில் வரி அதிகரிக்கப்படாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரொரான்ரோவில் இந்த வாரம் மேயர் சௌ, வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க உள்ளார்.

வாடகை வீடுகளின் குடியிருப்பாளர்களுக்கு ஏற்படக் கூடிய தாக்கத்தை கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக முன்னதாக அறிவிக்கப்பட்ட தொகையில் வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்படாது என அவர் குறிபிட்டுள்ளார்.

சொத்துக்களுக்கான வரி 10.5 சதவீதமாக அதிகரிக்கப்படும் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

வரி அதிகரிப்பினை காரணம் காட்டி வாடகைத் தொகைகள் அதிகரிக்கப்படுவதனை தவிர்க்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.




# கனடிய பிரதமர் தொடர்பில் அதிருப்தி வெளியிட்ட முஸ்லிம் அமைப்பு!

ஜனவரி 30, 2024

கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ மீது பலஸ்தீன முஸ்லிம் அமைப்பு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

கனடிய முஸ்லிம்களுக்கான தேசிய பேரவை இந்த அதிருப்தியை வெளியிட்டுள்ளது.



பலஸ்தீன மக்களை பாதுகாப்பதற்கு ட்ரூடோ அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றம் சுமத்தியுள்ளது.

இதனால் பிரதமருடனான சந்திப்பினை ரத்து செய்வதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

ட்ரூடோவுடனான சந்திப்பில் எவ்வித பயனும் கிடைக்கப் போவதில்லை என பேரவையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்டீவன் பிறவுண் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2015ம் ஆண்டு தேர்தல் காலத்தில் முஸ்லிம் சமூகத்திற்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளை பிரதமர் நிறைவேற்றத் தவறியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

காசா போரின் போது பலஸ்தீன மக்களை பாதுகாப்பதற்கு கனடா உரிய பங்களிப்பினை செய்யத் தவறியதாக அவர்



சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான பின்னணியில் பிரதமரை சந்திப்பதில் பயனில்லை எனவும் இதனால் சந்திப்பினை ரத்து செய்வதாகவும் அறிவித்துள்ளார்.

**Oshawaப் பகுதியில் வீட்டு வேலைக்கு பெண் வேலையாள் தேவை**

**நல்லச்சம்பளம் மற்றும் உணவு தங்குமிடம் வழங்கப்படும்!**

*மேலதிக தொடர்புக்கு: 416-616-6005*

# தமிழக செய்திகள்



# மன்னாரில் 18 தமிழக கடற் தொழிலாளர்கள் கைது!

ஜனவரி 16, 2023

மன்னார் தாழ்வுபாடு கடல் பகுதியை அண்மித்த கடற்பரப் புக்குள் இரண்டு படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்ட 18 தமிழக மீனவர்கள் சிறீலங்கா கடற்படையினரால் கைது செய்யப் பட்டனர்.

கைதான 18 மீனவர்களும் அவர்கள் பயன்படுத்திய இரண்டு டோலர் படகுகளும் கடற்படையினரால் தாழ்வுபாடு கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டன.

அதன்பின்னர் கைதான 18 மீனவர்கள், மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.





குறித்த மீனவர்களின் படகுகளில் இருந்து பல ஆயிரக்கணக் கான கிலோ எடை கொண்ட குஞ்சு மீன்கள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஈழ இனவழிப்புக்கான நீதி உலகத் தமிழர்களின் தன்மானத்தில் தங்கியுள்ளது!

## கனடா நாட்டின் ஒன்ராரியோ மாநில சட்டமன்ற உறுப்பினர் திரு. லோகன் கணபதி

ஜனவரி 13, 2024

ஈழ இனவழிப்புக்கான நீதியை வென்றெடுப்பதில் உலகத் தமிழர்களின் தன்மானமும், பாதுகாப்பும் உறுதிசெய்யப்படும் என்ற வரலாற்றுப் பணிக்கு தமிழ்நாடு முதன்மையான பங் களிப்பை வழங்க வேண்டும் என கனடா நாட்டின் ஒன்ராரியோ மாநில சட்டமன்ற உறுப்பினர் லோகன் கணபதி தெரிவித் துள்ளார்.

கடந்த வார இறுதியில் இந்திய தமிழ்நாட்டில இடம் பெற்ற அயல் உறவு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் வ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழரின் தொன்மையைக் கீழடியும், கந்தரோடையும் பறை சாற்றிக் கொண்டிருக்கிறது. 2,500 ஆண்டுகளுக்கு முன்பே நகர நாகரிகம் கண்டு, எழுத்தறிவு பெற்ற மக்கள் கூட்டத்தின் வழிவந்தவர்கள்.

தமிழர்கள் கொத்துக் கொத்தாக கேட்பார் யாருமின்றி படு கொலை செய்யப்பட்டதன் குறியீடாக 'முள்ளிவாய்க்கால்' என்ற இடம் அமைந்துள்ளது.

உலகம் எங்கும் 700 கோடிபேர் தமிழர்கள் வாழ்ந்தாலும் இத் தாய் தமிழ்நாட்டில் தான் 2009 இல் முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையை தடுக்க வேண்டும் என்று 18 பேர் தீக்குளித்து தம்மை ஆகுதி ஆக்கினார்கள்.

அந்த நினைவுகள் நெஞ்சில் மிகுந்த கனத்த இதயத்துடன் சுமந்துகொண்டு தமிழ்நாட்டிற்கும் தமிழக மக்களுக்கும் உலக எங்கும் பரந்து வாழும் ஈழத் தமிழர்கள் சார்பில் எனது அன்பை நன்றியையும் பகிர்ந்து கொள்கின்றேன்.

நான் கனடா நாட்டு ஒன்ராரியோ மாகாண நாடாளுமன்ற உறுப் பினராக உங்கள் முன் இங்கே நின்று கொண்டிருந்தாலும் நான் பிறந்து வளர்ந்தது மேற்சொன்ன கந்தரோடையும், முள்ளி வாய்க்காலும் அமைந்திருக்கும் ஈழ தேசம் தான்.

எனது பூர்வீகம் என்று கம்பீரமாக செல்வதில பெருமை கொள் கின்றேன்.

இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கை தாயகமாகக் கொண்ட, அரைநூற்றாண்டுக்கும் மேலாக சபிக்கப்பட்டவர்களாக வாழ்ந் துவரும் இலட்சகணக்கான தமிழர்களில் நானும் ஒருவன்.

இன்றும் இன ஒடுக்குமுறைக்கு எதிராகவும், தமிழர் தேசத்திற் காகவும் தம் குரலை அணையவிடாமல் வைத்திருக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தில் 80 களில் மாணவத் தலைவர்களில் ஒருவராக நானும் இருந்து சிறீலங்கா அனசின் இனவழிப்பினால் நாட்டை விட்டு உலகம் முழுவதும் சிதறி ஓடிய இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்களில் நானும் ஒருவன்.

புலம்பெயர்ந்து கனடா தேசத்தில் தஞ்சமடைந்தேன் இன்று உங்கள் முன்னால் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக நிற்கும் நிலைக்கு கனடா எனக்காக அனைத்து உரிமைகளையும் அங்கீகரித்துள்ளது.

இது என்னொருவனின் கதையல்ல, என்னைப் போல் பல இலட் சக்கணக்கில் அகதிகளாக உலக நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள தமிழர்களின் கதையாகும். இந்த மண்ணிலும் நம் சகோதரர்கள் அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

அவர்கள் குடியுரிமை கேட்டு தலைமுறை தலைமுறையாக காத் திருக்கிறார்கள். அவர்களோடு ஒப்பிடும் போது ஒருவகையில் நான் ஆசிர்வதிக்கப்பட்டவன்.

கனடாவின் குடிமகனாகவும் மக்கள் பிரதிநிதியாகவும் உங்கள் முன் நிற்கிறேன்.

அகதி ஒருவர் மக்கள் பிரதிநிதியாக அமைச்சராக ஆக முடியும் என்ற அதியுன்னத செயற்பாட்டை முன்னெடுத்த உலகில் முதன்மையான சனநயாக நாடாக நீதியின் முகமாக உள்ள கனடா தேசத்தில் என் குரலை வெளிப்படுத்தி வருகிறேன்.

உலக வரலாற்றில் முதல் தடவையாக என்னைப் போன்ற கனடா வாழ் மக்கள் அனைவரதும் முயற்சியோடு தமிழ் மரபுத் திங்கள் கனடா தேசத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை உலகத் தமிழர்களுக்கு கிடைத்துள்ள வரலாற்று மிக்க அங்கீகாரமும் சாதனையுமாகும்.

அத்துடன் இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதை கனடா ஏற்றுக்கொண்டமைக்கு முன்னோடியாக தமிழ்நாடு சட்ட மன்ற தீர்மானத்திற்கு தமிழக மக்கள் கொடுத்த பேராதரவுக் கும் நமது தோழமை கலந்த நன்றி உணர்வை இந்தச் சிறப்பு நாளில் வெளிப்படுத்திக் கொள்கிறேன்.

விண்வெளி ஆராய்ச்சி, மருத்துவம், தகவல் தொழில்நுட்பம், தொழில், வணிகம், கலை, இலக்கிய, இசை என தமிழர்கள் கோலோச்சாத துறைகளே இல்லை உலகின் நான்கு திசை களிலும் தமிழர்கள் மலையென சாதனைகளைக் குவித்து வருகின்றனர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இந்தியாவிற்குள்ளும் சாதியப் பாகுபாடுகளுக்கு எதிராக சமூக நீதியைக் கடைப்பிடித்து ஒரு முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு தலைநிமிர்ந்து நிற்கிறது... தமிழ்நாடு அரசு சமூக நீதி அரசு என்று புகழாரம் சூட்டும் அளவுக்கு வளர்ச்சிப் பரவலாக்கத்திற்கு உழைத்து வருகிறது.

இந்த சாதனைகளையும், வெற்றிகளையும் தாண்டி 21 ஆம் நூற்றாண்டில் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட மக்கள் கூட்டமாகவும் நம் இனம் இருந்து வருகிறது

இது நமது தொன்மைக்கும் பண்பாட்டுச் செழுமைக்கும், நாக ரிகத்திற்கும், 100 மில்லியனுக்கும் மேற்பட்ட தமிழர்களினத் திற்கும் விடப்பட்டிருக்கும் சவால் ஆகும்.

உலக அரங்கிலே இனவழிப்புக்கு உள்ளானது மட்டுமின்றி அதற்கான நீதியை இன்னும் வென்றெடுக்காதவர்களாகவும் நாம் இருந்து வருகிறோம்.

ஆனால், நாம் நீதியின் பால் மிகுந்த பற்று கொண்ட ஓர் இனம். சிலப்பதிகார நாயகி கண்ணகியை தெய்வமாக வழிபடும் இனம். நீதியின் குறியீடாக அவள் சென்னை மெரினாவில் கண்கள் சிவக்க நின்று கொண்டிருக்கிறாள்

அந்த கண்ணகித் தாயின் வழிவந்த நாம், நம்மினத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட படுகொலைகளுக்கு நீதியைப் பெறத் தவறுவோமாயின் இந்தப் இந்த உலகில் வாழும் பிற சமூகத் தினர் தமிழர்களின் ஆளுமை பற்றி கேள்வி எழுப்புவார்கள்.

நான் பிறந்த மண்ணின் இன்றைய நிலையை சொல்லில் விவரிக்க முடியாது. தமிழினத்தின் பண்பாட்டு பெருமிதத்தோடு இந்த மாநாடு நடந்துக் கொண்டிருக்கும் இதே சமநேரத்தில் எமது தமிழர் தாயகத்தில் பண்பாட்டு படுகொலைகள் சத்தமின்றி அரங்கேறிவருகிறது.

இதற்கு அண்மைய சாட்சியாக முல்லைதீவு மாவட்ட நீதிபதி சரவணராசா அவர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் அவர் குடும்பத்தோடு தலைமறைவாகும் சூழல் உருவாகி இருக்கிறது .

தமிழ் நீதிபதிக்கு கூட அங்கு பாதுகாப்பு இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. மொத்தத்தில் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு எமது தாய்நாடு இரையாகிக் கொண்டிருக்கிறது.

தமிழன் சறுக்கி விழுந்தாலும் ஒன்றுபட்ட உணர்வுடன் பீனிக்ஸ் பறவை போல் எழுந்தான் என்ற வரலாற்றை நாம் படைக்க வேண்டும்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற தமிழ்நாட்டுப் புலவன் கணியன் பூங்குன்றனாரின் வரிகளுக்கு ஏற்ப உலகமெங்கும் சிதறி வாழ்கின்ற நாம் ஒரு நாடற்றவர்களாகி இனமழிந்து போகின்ற நிலைக்கு ஆளாவிடக்கூடாது.

அதற்கு எம் தாய் தமிழ்நாடு துணை நிற்க வேண்டுமென எமது தாய் நிலத்திலே கண்ணீரோடு காத்திருக்கும் எமது உற வுகளின் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

நான் தொடங்கிய இடத்திற்கே மீண்டும் வருகிறேன். தமிழ னுக்கு எங்கு அநீதி இழைத்தாலும் அவன் திரும்பிப் பார்க்கும் இடம் தமிழ்நாடு தான்.

இந்த மண் தமிழினத்திற்காக பன்னாட்டரங்கில் குரல் கொடுப் பதில் தான் உலகெங்கும் பரவிவாழும் தமிழர்களின் மாண்பும் பாதுகாப்பும் இருக்கிறது.

இனவழிப்புக்கு உள்ளான தமிழினம் நீதியை வென்றெடுப் பதில்தான் உலகத் தமிழர்களின் தன்மானமும் பாதுகாப்பும் உறுதிசெய்யப்படும். அந்த வரலாற்றுப் பணிக்கு தமிழ்நாடு முதன்மையான பங்களிப்பை வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்திய வாழ் இலங்கை அகதிகளுக்கு உலக அங்கீகாரமிக்க கடவுச்சீட்டு!

ஜனவரி 19, 2024

சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தில் தஞ்சம் புகுந்து அகதிவாழ்க்கை வாழ்ந்துவரும் இலங்கை வடக்கு – கிழக்கைச் சேர்ந்த அகதிகளுக்கு சர்வதேச கடவுச்சீட்டு இன்று வெள்ளிக்கிழமை (19) சென்னையில் வழங்கி வைக்கப்பட்டது என திரு. செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

பல்வேறு காலகட்டங்களில் இலங்கையில் ஏற்பட்ட அசாதாரண யுத்த சூழ்நிலைகளின்போது இந்திய மண்ணை நம்பி தஞ்சம் புகுந்த வடக்கு கிழக்கை சேர்ந்த கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக இந்தியாவின் பல்வேறு முகாம்களில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் இலங்கைக்குத் திரும்புவதாயினும் வெளிச்செல்லும் பாஸ்கள் மாத்திரமே வழங்கப்பட்டு வந்தன.

இந்த நிலையினை சிறீலங்கா ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு சென்ற போது, அவரது வழிகாட்டுதலின் கீழ், இந்தியவாழ் இலங்கை அகதிகளுக்கு உடன் அமுலுக்கு வரும்வகையில் இலங்கை அரசின் வரலாற்றில் முதல் தடவையாக சர்வதேச அங்கிகாரமிக்க கடவுச்சீட்டுகள் இன்று வழங்கி வைக்கப்பட்டன என திரு. செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

உலகில் வேறெங்கிலும் இதற்குமுன்னர் இலங்கை அரசால் இவ்வாறானதொரு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதுடன், சர்வதேச அங்கிகாரம் பெற்ற இலங்கைக் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதனூடாக உலகின் எப்பகுதிக்கும் செல்லும் தகுதியை இந்தியவாழ் இலங்கை அகதிகள் இன்று முதல் பெற்றுக்கொள்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இக்கடவுச் சீட்டுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஈடிணையற்ற தமது ஒத்துழைப்புகளை வழங்கிய ஜனாதிபதி செயலக அதிகாரிகள், பிரதம மந்திரி செயலக அதிகாரிகள், வெளியுறவுத்துறைச் செயலக அதிகாரிகள், இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஷேனுக செனவிரட்ன, சென்னைக்கான இலங்கை உதவி உயர்ஸ்தானிகர் வெங்கடேஸ்வரன் ஆகியோருக்கு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதுடன், மேலும் இக்கோரிக்கையை நிறைவேற்ற பவ வருடகாலமாக அவ்வப் போதைய அரசாங்கத்திடம் எம்மால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் அவை சாத்தியப்படாதிருந்த நிலையில் ஜனாதிபதியின் அனுமதியுடன் இவ்வகதிகளுக்கு அங்கிகாரம் கிடைத்திருப்பதானது சுமார் ஒரு இலட்சம் அகதிகளுக்கும் கிடைத்துள்ள மிகப்பெரிய வரப்பிரசாதமாகும் எனவும் திரு. செந்தில் தொண்டமான் மேலும் தெரிவித்தார்.

40 வருடங்களாக தாய் நாட்டை விட்டு வெளியேறியவர்களுக்கு அடைக்கலம் வழங்க உதவிய இந்திய அரசுக்கும் பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், மேலும், தமிழகத்திலுள்ள அனைத்து நலன்புரித் திட்டங்களுக்




குள் உள்வாங்கி அகதிமுகாம் என்ற சொல்லை மாற்றி மறுவாழ்வு நிலையம் என உருவாக்கிய தமிழக முதல்வருக்கும் அமைச்சர் செஞ்சி மஸ்தானுக்கும் இவ்விடத்தில் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவிக்கின்றோம்.

மேலும் இந்திய அகதி முகாமில் பிறந்த குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்குமாறு இரண்டு முறை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட பஜக தமிழகத் தலைவர் அண்ணாமலையிடம் கோரிக்கை முன்வைத்ததைத் தொடர்ந்து, இந்திய உள்துறை அமைச்சர் அமத்ஷா, வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரால் அவ்விடயம் தொடர்பான வேலைத் திட்டங்களுக்கான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் திரு. செந்தில் தொண்டமான் மேலும் தெரிவித்தார்.

# நாம் தமிழர் கட்சியின் தக்கலை ஒன்றியத் தலைவர் சேவியர்குமாரைப் படுகொலை செய்த கொலையாளிகளை உடனடியாகக் கைதுசெய்யாவிட்டால், மாநிலமெங்கும் போராட்டம் வெடிக்கும்!

ஜனவரி 22, 2024

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை ஒன்றிய நாம் தமிழர் கட்சியின் தலைவர் அன்புத்தம்பி சேவியர்குமார் அவர்கள் திமுகவின் வன்முறைக்கும்பலால் படுகொலை செய்யப்பட்ட செய்தியறிந்து பேரதிர்ச்சி அடைந்தேன். தம்பியின் உயிர்த் துணையான மனைவியையும், பெற்றெடுத்த இரு பெண் பிள்ளைகளையும் எப்படி தேற்றுவதெனத் தெரியாது மனம் கலங்கி நிற்கிறேன். நம்மோடு உறவாய் இருந்த தம்பியைப் பறிகொடுத்ததை எண்ணி, ஒவ்வொரு நொடியும் உள்ளம் பதைபதைக்கிறது. தம்பியை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும், நாம் தமிழர் சொந்தங்களுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்து, இக்கொடுந்துயர் சூழ்ந்திருக்கும் வேளையில் முழுமையாகத் துணைநிற்கிறேன். தம்பியின் மறைவு தனிப்பட்ட முறையில் எனக்கும், நாம் தமிழர் கட்சிக்கும் ஏற்பட்டப் பேரிழப்பாகும்.

தம்பி சேவியர்குமார் எளிய குடும்பப் பின்புலத்தைக் கொண்டிருந்தாலும் மண்ணின் மீதும், மக்களின் மீதும் கொண்ட அளப்பெரும் பற்றினால் தன்னையும், தன் குடும்பத்தாரையும் முழுமையாக நாம் தமிழர் கட்சியில் இணைத்துக் கொண்டு, இனத்தின் நலனுக்காக அயராது பணியாற்றினார். அநீதிகளுக்கெதிராகவும், சமூக அவலங்களுக்கெதிராகவும் சமரசமின்றி களத்தில் நின்ற ஒப்பற்றப் போராளியாகத் திகழ்ந்தார். அதுதான் எதிராளிகள் அவரது உயிரைப் பறிக்கவும் காரணமாகவும் அமைந்திருக்கிறதென்பது பெருங்கொடுமையாகும். தம்பி சேவியர்குமார் தான் உறுப்பினராக அங்கம் வகிக்கும் மயிலோடு கிராமத்திலுள்ள புனித மைக்கேல் கத்தோலிக்க தேவாலயத்தில் நடக்கும் முறைகேடுகளைக் கேள்விகேட்டதாலும், திமுகவினரின் மோசடித்தனங்களைத் தோலுரித்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டதாலும் திமுகவின் ஒன்றியச் செயலாளர் ரமேஷ்பாபு என்பவருக்கு இவர் மீது முன்விரோதம் ஏற்பட்டிருக்கிறது. திமுகவினர் செய்த நிர்வாகச் சீர்கேடுகளைத் தொடர்ச்சியாகத் தட்டிக்கேட்டதால் அவருக்கு அச்சுறுத்தல்களும், கொலை மிரட்டல்களும் விடுக்கப்பட்டுள்ளன. இது குறித்து தம்பி சேவியர்குமார் காவல்நிலையத்தில் புகாரளித்து தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறியும் ஆளும் கட்சியின் அதிகார அத்துமீறலால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதன் மூலம் அரச நிர்வாகத்தின் பாராமுகத்தை அறிந்துகொள்ளலாம்.

அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, பழிவாங்கும் நோக்கோடு தம்பி சேவியர்குமாரின் மனைவி எமிலியை ஏற்கனவே ஆசிரியர் பணியிலிருந்து இடைநீக்கம் செய்த நிலையில், கடந்த 10 நாட்களுக்கு முன்பு தம்பி சேவியர்குமாருக்கு ஆபாசமாகப் பேசியும், கொலைமிரட்டலும் விடுத் துள்ளார் திமுகவின் ஒன்றியச் செயலாளர் ரமேஷ்பாபு. இந்நிலையில், நேற்று தம்பி சேவியர் குமாரை அலைபேசியில் பேசி அழைத்து, திமுக ஒன்றியச் செயலாளர் ரமேஷ்பாபு, பங்குத்தந்தை ராபின்சன், ஜஸ்டஸ் ரோக், ஜெலிஸ், வின்சென்ட், வினோ, சோனிஸ் என்கிற அபிலாஷ், எட்வின் ஜோஸ் ஆகியோர் ராபின்சன் வீட்டில் வைத்து கொடூரமாகத் தாக்கி பச்சைப்படுகொலை செய்திருக்கின்றனர். அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டு கூட்டுச் சதியின் மூலம் அரங்கேற்றப் பட்ட இக்கொடூரமான படுகொலை குரூரத்தின் உச்சம்.

மாற்றுக்கருத்துக்கொண்டோரையும், அரசின் நிர்வாக அமைப்பின் மீது விமர்சனம் கொண்டோரையும் அச்சுறுத்துவது, மிரட்டுவது எனும் கொடுங்கோன்மை நீட்சியடைந்து, ஒரு படுகொலையில் முடிந்திருக்கிறது என்பது திமுக அரசின் அதிகாரத்திமிரையே காட்டுகிறது. திமுகவினரின் வெளிப்படையான அட்டூழியமும், அடாவடித்தனமும் நெடுநாள் நீடிக்கப் போவதுமில்லை ஆட்சியும், அதிகாரமும் திமுகவுக்கு நிரந்தரமும் இல்லை. அதிகாரம் தந்த மயக்கத்திலும், பதவிபோதை தந்த மமதையிலும் ஆட்டம் போட்டவர்கள் எல்லாம் அடங்கிப் போனது வரலாறு நெடுகிலும் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. அந்த நிலை திமுகவுக்கும் ஒருநாள் உறுதியாக வரும்.

பதினான்கு ஆண்டுகாலப் பயணத்தில் நாம் தமிழர் எனும் பெரும் படையைப் பொறுப்புணர்வுடன் கூடியக் கட்டுப்பாடோடும், மிகுந்தக் கட்டுக்கோப்போடும் வழிநடத்தி வருகிறேன். தமிழர்களது உரிமைகள் பறிக்கப்படும்போதும், அண்டை மாநிலங்களில் தமிழர்கள் இனவெறி கொண்டு தாக்கப்படும்போதும், அடக்குமுறைகள் ஏவப்படும்போதும், சனநாயக வழிமுறைகளையும், அறம்சார்ந்த போராட்ட வடிவத்தையுமே முன்மொழிந்திருக்கிறேன். இலக்கு நோக்கியப் பயணத்தில் கவனம் சிதறிவிடக்கூடாதெனும் ஒற்றை நோக்கமே என்னையும், எனது பிள்ளைகளையும் மிகுந்த சனநாயகவாதிகளாக இருக்கச் செய்கிறது. ஆனால், நாங்கள் சனநாயக





வாதிகளாக இருப்பதையே தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு, எங்கள் பிள்ளைகள் மீது கொடுந்தாக்குதல்களையும், வன்முறை வெறியாட்டங்களையும் ஏவிவிட்டால், அதற்குப் பணிந்துபோகிறவர்கள் நாங்கள் இல்லை. 'துன்பத்தை அதைத் தந்தவனுக்கே திருப்பிக் கொடு' என்பதுதான் எங்கள் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் எங்களுக்குப் கற்பித்தப்பாடம். எங்கள் பொறுமைக்கும், சகிப்புத்தன்மைக்கும் ஒரு எல்லை உண்டு. எங்கள் குடும்பத்தில் மிகப்பெரிய இழப்பு நேர்ந்திருக்கிறது. தம்பி சேவியர்குமாரை இழந்து பரிதவித்து நிற்கிறோம். எங்களது சனநாயக உணர்வையும், அரசியல்ரீதியிலான அணுகுமுறையையும் ஒருநாளும் குறைத்து மதிப்பிட வேண்டாம். அவ்வாறு மதிப்பிட்டால், அது பெரும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும்.

ஆகவே, இவ்விவகாரத்தில் தமிழ்நாட்டு முதல்வர் ஐயா ஸ்டாலின் அவர்கள் தலையிட்டு, தம்பி சேவியர்குமார் படுகொலைக்குக் காரணமான கொலையாளிகள் அத்தனைப் பேரும் கைதுசெய்யப்பட்டு, உடனடியாகக் சிறைப்படுத்தப் படுவதை உறுதிசெய்ய வேண்டும் என தமிழ்நாடு அரசை நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன். அதனைச் செய்யத் தவறினால், மாநிலம் முழுமைக்கும் பெரும் போராட்டம் வெடிக்குமென எச்சரிக்கை விடுக்கிறேன்.

– செந்தமிழன் சீமான்
தலைமை ஒருங்கிணைப்பாளர்
நாம்தமிழர் கட்சி

# சாந்தனின் உயிருக்கு ஆபத்து!

ஜனவர் 24, 2023

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலையாகி தற்போது திருச்சி சிறைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சாந்தனின் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதாக சிறைக்கைதிகள் உரிமை மையம் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

சாந்தனிற்கு கல்லீரல் சிறுநீரகபாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சிறைக் கைதிகள் உரிமை மையம் தெரிவித்துள்ளது.

திருச்சி சிறப்பு முகாமில் சாந்தனிற்கு உரிய சிகிச்சை அளிக்கப்படவில்லை இதனால் அவரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது இதனால் சென்னை பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை வழங்கவேண்டும் என சிறைக் கைதிகள் உரிமை மையம் தமிழக முதல்வருக்கு கடிதம் எழுதியுள்ளது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று தற்போது விடுதலையான சாந்தன் இலங்கைக்கு திரும்புவதற்காக விசா போன்றவற்றை பெற்றுக்கொள்வதற்காக காத்திருக்கின்றார், திருச்சி முகாமில் அடைக்கப்பட்டுள்ள சாந்தனிற்கு சிறுநீரக பாதிப்பு எற்பட்டுள்ளதால் அவருக்கு உரிய சிகிச்சை வழங்குவதற்கான நடவடிக்கைகள் திருச்சி சிறப்பு முகாமில் எடுக்கப்படாததால் அவரின் உயிரை காப்பாற்றுவதற்காக தமிழக முதல்வர் உரிய நடவடிக்கைளை எடுக்கவேண்டும் என சிறைக் கைதிகள் உரிமைகள் மையம் தனது கடிதத்தில் தெரிவித் துள்ளது.



சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் கால்கல் வீங்கியுள்ளன கல் லீரலும் பாதிக்கப்பட்டுள்ளது எனினும் இரண்டு மாதங்களாக உரிய சிகிச்சைகள் வழங்கப்படவில்லை இதனால் அவர் உயிருக்கு போராடுகின்றார் என்பதால்அவரை காப்பாற்ற வேண்டும் என சிறைக்கைதிகள் மையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# சித்த மருத்துவம் குறித்து விழிப்புணர்வு; ஆயுஷ் அமைச்சகத்துக்கு அன்புமணி வலியுறுத்தல்!

ஜனவரி 26, 2024

இந்தியாவில் உள்ள 600-க்கும் மேற்பட்ட மாவட்டத் தலைநகரங்களிலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் 20 ஆயிரத்துக்கும் கூடுதலான மக்கள்தொகை கொண்ட நகரங்களிலும் சித்த மருத்துவம் குறித்த விழிப்புணர்வு முகாம்களையும், சித்த மருத்துவத்தின் தன்மையை மக்கள் அனுபவித்து புரிந்து கொள்ள மருத்துவ முகாம்களையும் நடத்த மத்திய அரசின் ஆயுஷ் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில், சித்த மருத்துவத்தின் சிறப்புகள் மற்றும் நன்மைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக சித்த ஆரோக்கியம் மற்றும் விழிப்புணர்வு (Siddha Wellness & Awareness Campaign) என்ற தலைப்பிலான விழிப்புணர்வு இரு சக்கர ஊர்தி பேரணியை டெல்லியில் தொடங்கி கன்னியாகுமரி வரை தேசிய சித்த மருத்துவ நிறுவனம் ஏற்பாடு செய்து நடத்தி வருகிறது. சித்த மருத்துவம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான இந்த முயற்சி மிகவும் பாராட்டத்தக்க ஒன்றாகும்.

புதுடெல்லியில் கடந்த 24-ம் நாள் புதன்கிழமை தொடங்கப்பட்ட இந்த இரு சக்கர ஊர்திப் பயணத்தில் 17 சித்த மருத்துவர்கள் உள்ளிட்ட 20 பேர் பங்கேற்கின்றனர். மொத்தம் 20 நாட்களுக்கு நடைபெறவிருக்கும் 3333 கி.மீ நீள விழிப்புணர்வு பயணம் மொத்தம் 8 மாநிலங்கள் மற்றும் அந்த மாநிலங்களில் உள்ள 21 நகரங்கள் வழியாக பயணிக்கவிருக்கிறது. தமிழ்நாட்டில் சென்னை, மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருச்சி, மதுரை, நெல்லை, கன்னியாகுமரி மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட 21 நகரங்களிலும் விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்தவுள்ளனர்.

பல்லாயிரம் ஆண்டு பழமையும், சிறப்புகளும் கொண்ட சித்த மருத்துவம் குறித்து இந்தியாவின் பெரும்பான்மையான பகுதிகளில் விழிப்புணர்வும், புரிதலும் இல்லை. சித்த மருத்துவத்தின் சிறப்புகளில் முதன்மையானது அது நோயின் அறிகுறிகளுக்கு மருத்துவம் செய்வதில்லை நோயின் அடிப்படை என்ன? என்பதைக் கண்டறிந்து அதற்கு தீர்வு காண்கிறது என்பது தான். சித்த மருத்துவத்தின் இந்த சிறப்பு குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் சித்த மருத்துவத்தை மேலும் பரவலாக்க முடியும்.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சராக நான் பதவி வகித்த போது, சென்னையில் உருவாக்கிய தேசிய சித்த மருத்துவ நிறுவனம் இந்த விழிப்புணர்வு பயணத்தை ஏற்பாடு செய்திருக்கிறது. சற்று தாமதமானது என்றாலும் மிகச்சிறப்பான முயற்சி இதுவாகும். அதற்காக தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தையும், அதன் சார்பில் இந்த பயணத்தை ஏற்பாடு செய்தவர்களையும் நான் பாராட்டுகிறேன். இந்த பயணம் வெற்றி பெறவும், அதன் நோக்கத்தை எட்டிப் பிடிக்கவும் வாழ்த்துகிறேன்.



அதேநேரத்தில் இந்தியாவின் மூலை முடுக்குகளிலும், உலகின் பிற நாடுகளிலும் சித்த மருத்துவத்தை கொண்டு செல்ல இந்த முயற்சி மட்டும் போதுமானதல்ல. இதை ஒரு நல்லத் தொடக்கமாக வைத்துக் கொண்டு இந்தியாவில் உள்ள 600-க்கும் மேற்பட்ட மாவட்டத் தலைநகரங்களிலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் 20 ஆயிரத்துக்கும் கூடுதலான மக்கள்தொகை கொண்ட நகரங்களிலும் சித்த மருத்துவம் குறித்த விழிப்புணர்வு முகாம்களையும், சித்த மருத்துவத்தின் தன்மையை மக்கள் அனுபவித்து புரிந்து கொள்ள மருத்துவ முகாம்களையும் நடத்த மத்திய அரசின் ஆயுஷ் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" என்று அவர் பதிவிட்டுள்ளார்.

# இசைஞானி இளையராஜாவின் மகளின் உடல் நல்டக்கம்!

ஜனவரி 28, 2023

இசையமைப்பாளர் இளையராஜாவின் மகள் பவதாரிணி உடல் நலக்குறைவு காரணமாக காலமானார். அவர் பித்தப்பை புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார்.

இலங்கையில் அவர் பித்தப்பை புற்றுநோய்க்காக சிகிச்சை பெற்று வந்தார். அது கடைசி நிலையிலேயே கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவந்தது.

25.01.2024 மாலை 5:20 மணியளவில் பவதாரிணி உயிரிழந்தார்.

இசையமைப்பாளர் இளையராஜாவின் மகள் பவதாரிணி (47). திரைப்படப் பின்னணிப் பாடகியான இவர் 1984-ல் வெளியான ஹமை டியர்குட்டிச் சாத்தான்' படத்தில் குழந்தைப் பாடகியாக அறிமுகமானார். தொடர்ந்து, பல படங்களில் பாடல்களைப் பாடியுள்ளார்.

'பாரதி' என்ற திரைப்படத்தில் 'மயில்போல பொண்ணு ஒன்னு, கிளி போல பேச்சு ஒன்னு'என்ற பாடலைப் பாடியதற்காக பவதாரிணிக்கு சிறந்த பின்னணிப் பாடகிக்கான தேசிய விருது வழங்கப்பட்டது.

அவரது உடல் நேற்று முன்தினம் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு, இளையராஜா வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர், தேனி மாவட்டத்துக்கு கொண்டுவரப்பட்டது.

தேனி லோயர்கேம்ப் குருவனூத்து பாலம் அருகே இளையராஜாவுக்குச் சொந்தமான பங்களா உள்ளது. அங்கு நேற்று காலை கொண்டு வரப்பட்ட பவதாரிணியின் உடல் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இறுதிச் சடங்கில், ஓதுவார்கள் திருவாசகம் ஓதினர். தொடர்ந்து, பவதாரிணியின் உடலை உறவினர்கள் சுமந்து சென்றனர். அப்போது, 'மயில் போல பொண்ணு ஒன்னு, கிளி போல பேச்சு ஒன்னு' என்ற பாடலை உறவினர்கள் அனைவரும் பாடியபடி சென்றனர்.

அதன்பின் பவதாரிணியின் உடல் தேனி அருகே நேற்று



அடக்கம் செய்யப்பட்டது.

இந்த வளாகத்தில்தான் இளையராஜாவின் தாயார் சின்னத்தாய், மனைவி ஜீவா ஆகியோரது உடல்கள் அடக்கம் செய்யப்பட்டு, மணிமண்டபங்கள் கட்டப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# சாந்தனின் தாயாரின் கடிதத்தை மேற்கோள்காட்டி தமிழக முதல்வருக்கு சிறீதரன் கடிதம்! தமிழ்நாடு என்ன செய்ய போகிறது?

ஜனவரி 29, 2024

இராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ள இலங்கை தமிழர்களை விடுவிக்குமாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு, சாந்தனின் தாயாரின் கோரிக்கைக் கடிதத்தை மேற்கோள்காட்டி நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.




கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது

மறைந்த பாரதப்பிரதமர் இராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டு 32 வருடங்கள் சிறைத்தண்டனையின் பின்னர் கடந்த 2022-11-11 அன்று இந்திய உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட சாந்தன் அவர்களின் தாயாரால் எனக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள உருக்கம் நிறைந்த கோரிக்கை கடிதம் மீதான தங்களின் கரிசனையையும் கவனத்தையும் கோரிநிற்கின்றேன்.

32 வருடகால சிறைத்தண்டனையின் பின்னர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டு ஒருவருடம் கடந்துள்ள நிலையில் விடுதலையான இலங்கை பிரஜைகளான சாந்தன், முருகன், ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய நால்வரையும் இலங்கைக்கு வரவழைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட எந்த முயற்சிகளும் பலனளிக்காததால் இன்றுவரை அவர்கள் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்பதை கரிசனையோடு தெரிவித்துக்கொள்ளவிரும்புகின்றேன்.

இந்நிலையில் தனது இளமைக்காலம் முழுவதையும் சிறையில்



கௌரவ. சி.சிறீதரன்,
தலைவர்,
தமிழரசுக்கட்சி.

தில்லையம்பலம் மகேஸ்வரி,
நொங்கியோடை,
வல்வெட்டி மத்தி,
வல்வெட்டி.

29.01.2024

மகனை இலங்கைக்கு அழைத்து வரல் தொடர்பானது

பெரு மதிப்பிற்குரியவருக்கு வணக்கம்,

எனது பெயர் தில்லையம்பலம் மகேஸ்வரியாகும் (வயது 77), எனது மகனான சாந்தன் அவர்கள் இந்திய முன்னாள் பிரதமர் கொலை வழக்கில் 1991 ம் ஆண்டு கைது செய்யப்பட்டு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டதுடன் 2014 ம் ஆண்டு அத்தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டு, 32 ஆண்டுகள் சிறைத் தண்டனையின் பின்னர் கடந்த 11.11.2022 அன்று இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் கடந்த ஓராண்டுக்கு மேலாக திருச்சி சிறப்பு முகாமில் தனி அறை ஒன்றில் வைக்கப்பட்டிருந்த எனது மகனிற்கு தற்போது சிறுநீரக மற்றும் கல்லீரல் பிரச்சனையால் சென்னையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

77 வயதையுடைய நான் கடந்த 33 வருடங்களாக எனது மகனை கண்டது கூட இல்லை. எனது இறுதிக் காலத்திலாவது எனது மகனை ஒரு தடவை உயிருடன் பார்க்க விரும்புகின்றேன். இலங்கை வெளியுறவு அமைச்சகத்தின் அனுமதி கிடைக்காமையே எனது மகன் நாடு திரும்புவதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாக அறிகின்றோம். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சருக்கும் பல முறை கடிதங்கள் எழுதியும் பயனில்லை.

ஆகவே தாங்கள் இவ்விடயத்தில் கரிசனை செலுத்தி ஆவன செய்துதரும்படி பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

எனது மகனின் தனிப்பட்ட விபரங்கள்
முழுப் பெயர் - தில்லையம்பலம் சுதேந்திரராஜா
அ.அ.இல - 691190587 V
கடவுச் சீட்டு இல - No K0081220
முகவரி - நொங்கியோடை,
வல்வெட்டி மத்தி,
வல்வெட்டி.

நன்றி

இங்ஙனம்
உண்மையுள்ள



சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed., B.A, PGDE (Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
இல. 882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
shritharanmp@gmail.com

பார்லிமேன்துவ
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed., B.A, PGDE (Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District,
No. 882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
www.shritharan.com

2024.01.29.

எனது இல .: MP/JF/KN/Si.Sh/Gen/2023

மாண்புமிகு.மு.க.ஸ்டாலின்
தமிழக முதல்வர்,
தமிழ்நாடு அரசு,
தமிழ்நாடு, இந்தியா

மாண்புமிகு ஐயா;

பொருள் : இலங்கைக்கு திருப்பி அனுப்பக் கோரல்.

மேற்படி விடயம் தொடர்பில், மறைந்த பாரதப் பிரதமர் கௌரவ.ராஜீவ் காந்தி அவர்களின் கொலைவழக்கில் கைதுசெய்யப்பட்டு, 32 வருட சிறைத்தண்டனையின் பின் கடந்த 2022.11.11 அன்று இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட சாந்தன் (திரு.தில்லையம்பலம் சுதேந்திரராஜா) அவர்களின் தாயாரால் எனக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள உருக்கம் நிறைந்த கோரிக்கைக் கடிதம் மீது தங்களின் மேலான கவனத்தையும், கரிசனையையும் கோரிநிற்கிறேன்.

32 ஆண்டுகால சிறைத்தண்டனையின் பின்னர் உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டு ஒருவருடம் கடந்துள்ள நிலையில், அவ்வழக்கிலிருந்து விடுதலையான இலங்கைப் பிரஜைகளான திரு.சாந்தன், திரு.முருகன், திரு.ரொபேட்பயஸ், திரு.ஜெயக்குமார் ஆகிய நால்வரையும் இலங்கைக்கு வரவழைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட எந்த முயற்சிகளும் பலனளிக்காததால் இன்றுவரை அவர்கள் நால்வரும் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை தாங்கள் கரிசனையோடு அணுகுவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

இந்நிலையில் தனது இளமைக்காலம் முழுவதையும் சிறையில் கழித்து, முதுமைக்காலத்தில் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய சிறுநீரகப் பாதிப்பு, கல்லீரல் பாதிப்பு என்பவற்றால் மிகக்கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள சாந்தன், தற்போது சென்னை மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த 33 ஆண்டுகளாகத் தனது மகனைக் காணாது பரிதவித்திருக்கும் சாந்தனின் தாயார், 77 வயது நிரம்பிய தனது முதுமை நிலையில் ஒருதடவையாவது தனது மகனை நேரில் பார்வையிட வேண்டும் எனவும், அவரை இலங்கைக்கு வரவழைக்க ஆவனசெய்யுமாறும் மிக உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றதிலிருந்து ஈழத்தமிழர்கள் விடயத்தில் அதீத கரிசனை கொண்டிருக்கும் தாங்கள், இவ்விடயத்தை மனிதாபிமான அடிப்படையில் அணுகி நோய்வாய்ப்பட்டிருக்கும் சாந்தனின் உடல்நிலை கருதியும், அவரது குடும்பத்தினரின் உணர்வுநிலைப்பட்ட எதிர்பார்ப்பைக் கருத்திற்கொண்டும் சாந்தன் உள்ளிட்ட நால்வரையும் இலங்கைக்கு அனுப்பிவைக்க ஆவனசெய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இங்ஙனம்,
மக்கள் பணியிலுள்ள,

சிவஞானம் சிறீதரன்.
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.

சிவஞானம் சிறீதரன்.
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
இல.882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

கழித்து முதுமைக்காலம் முழுவதையும் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய சிறுநீரக கல்லீரல் பாதிப்பினால் மிகக்கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள சாந்தன் தற்போது மருத்துவமனையில் தீவிரசிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 33 ஆண்டுகளாக தனது மகனை காணாது பரிதவித்திருக்கும் சாந்தனின் தாயார் தனது 77 வயதில் மகனை ஒரு தடவையாவது நேரில் பார்வையிடவேண்டும் எனவும் அவரை இலங்கைக்கு வரவழைக்க ஆவண செய்யுமாறும் உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளார்.

தமிழக முதல்வராக பொறுப்பேற்றதிலிருந்து ஈழத்தமிழர்கள் விடயத்தில் அதிக கரிசனை கொண்டு செயற்பட்டுவரும் நீங்கள் இவ்விடயத்தை மனிதாபிமான அடிப்படையில் அணுகி நோய்வாய்பட்டிருக்கும் சாந்தனின் உடல்நிலை கருதியும் அவரது குடும்பத்தினரின் உணர்வுநிலைப்பட்ட எதிர்பார்ப்பை கருத்தில் கொண்டும் சாந்தன் உள்ளிட்ட நால்வரையும் இலங்கைக்குஅனுப்பிவைக்க ஆவண செய்யவேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

# உலக செய்திகள்

## சிறீலங்காவின் போர்க் குற்றவாளிகளுக்கு எதிராக மாக்னிட்ஸ்கி தடை!

### பிரித்தானியாவில் பெருகும் ஆதரவு...

ஜனவரி 15, 2024

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக மாக்னிட்ஸ்கி தடைகளை விதிக்குமாறு தற்போதைய சிறீலங்கா அரசாங்கத்திடம் பிரித்தானியாவின் தொழிற்கட்சி கோரியுள்ளது.

அதேநேரம், இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எதிராக தொடரும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள், முற்றாக நிறுத்தப்பட வேண்டுமெனவும் அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் சுகாதார மற்றும் சமூக விவகாரங்களுக்கான நிழல் செயலாளர் வெஸ் ஸ்ட்ரீடிங் வலியுறுத்தியுள்ளார்.

தைத்திருநாளை முன்னிட்டு வெஸ் ஸ்ட்ரீடிங் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் இதனை தெரிவித்துள்ளார். இது குறித்து அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, பிரித்தானியா மற்றும் உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கு எனது தைத்திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அறுவடை திருநாளில், குடும்பங்கள் ஒன்றிணைந்து தமிழ் கலாச்சாரத்தின்படி கொண்டாட்டங்களை முன்னெடுப்பார்கள்.

இந்த நிலையில், எமது பொருளாதார வளர்ச்சியில் தமிழர்களின் பங்களிப்பை நினைவு கூற விரும்புவதோடு, நன்றி தெரிவிக்கவும் கடமைப்பட்டுள்ளேன். இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான போரினால் பாதிக்கப்பட்ட பலர் பிரித்தானியாவுக்கு குடிபெயர்ந்தார்கள்.

இலங்கையில் மனித உரிமைகளை மீறும் வகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் கடந்த காலத்துடன் மட்டுப்படுத்தப்படவில்லை. இதனால் நான் தமிழ் மக்களுக்காக தொடர்ந்தும் குரல் கொடுத்து வருகிறேன்.

உண்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நீதிக்காக தொடர்ந்தும் குரல் கொடுப்பேன். அத்துடன், தமிழ் மக்களுக்கான சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்காகவும் பணியாற்றுவேன். எமது நாடாளுமன்றத்திலும் ஜெனிவாவிலும்



இந்த விடயம் தொடர்பில் நான் குரல் கொடுப்பேன்.

உலக தமிழ் மக்கள் அனைவரும் தைத்திருநாள் கொண்டாட்டங்களை முன்னெடுக்கும் இந்த தருணத்தில், நாம் தொடர்ந்தும் உங்களுடன் இருப்போம் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## ஜேர்மனியில் விவசாயிகள் போராட்டம்!

ஜனவரி 15, 2024

ஜேர்மனி விவசாயிகள் இன்று திங்கட்கிழமை பெர்லின் நகரின் புகழ்பெற்ற பிராண்டன்பேர்க் நுழைவாயிலைச் சுற்றியுள்ள வீதிகளில் ஆர்ப்பாட்டங்களுக்காக ஒன்றுகூடினர்.

விவசாய நடவடிக்கைகளுக்கான வரியை உயர்த்தும் திட்டம் குறித்து முழுமையாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஜேர்மனி முழுவதிலுமிருந்து 5,000 உழவூர்திகள் மற்றும் பாரவூர்திகளுடன் சுமார் 10,000 விவசாயிகள் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஜேர்மனியின் நிதி மந்திரி கிறிஸ்டியன் லிண்ட்னர் பிராண்டன்பர்க் கேட் வெளியே ஆயிரக்கணக்கான விவசாயிகள் முன்னிலையில் மேடைக்கு வந்தார்.

கூட்டாட்சி பட்ஜெட்டில் இருந்து கூடுதல் மாநில உதவிகளை நான் உங்களுக்கு உறுதியளிக்க முடியாது என்று லிண்ட்னர் கூட்டத்தில் கூறினார். ஆனால் நீங்கள் அதிக சுதந்திரத்தையும் உங்கள் பணிக்கு மரியாதையையும் அனுபவிக்க நாங்கள் ஒன்றாகப் போராடலாம் என்றார்.

எங்களிடம் வரத் தயாராக இருக்கும் ஒவ்வொரு அரசியல்வாதி மீதும் எனக்கு மரியாதை உண்டு என்று விவசாயிகள் சங்கத் தலைவர் ஜோகிம் ருக்வீட் கூறியதாக ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அமைச்சரின் வருகையால் விவசாயிகள் மகிழ்ச்சியடையவில்லை. சில எதிர்ப்பாளர்கள் அவரைப் பார்த்து "பொய்யர்" என்று கோசங்களை எழுப்பினர். விவசாயிகள் இந்த அரசாங்கத்தை வெளியேற்ற வேண்டும் என்று அழைப்பு விடுத்தனர்.

என்னைப் பொறுத்தவரை, அரசாங்கம் பதவி விலக வேண்டும் செ அவர்களால் இனி எங்களை வழிநடத்த முடியாது"என்று பெர்லினின் தென்கிழக்கில் உள்ள பால் பண்ணை விவசாயியான 73 வயதான பால் ப்ரெஜின்ஸ்கி பிரெஞ்சு செய்தி நிறுவனமான AFP இடம் கூறினார்.

இன்றைய பேரணியானது ஒரு வாரத்திற்கும் மேலாக நீடித்த போராட்டங்களின் உச்சகட்டமாகும். விவசாயிகள் நகரங்களுக்கு வெளியே நெடுஞ்சாலை நுழைவாயில்களை அடைத்தும் அவற்றுள் முக்கியப் பாதைகள் விவசாயிகள் அடைத்துப் போராட்டத்தை நடத்தினர்.



70 ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறையில் உள்ள விவசாய டீசல் மீதான வரிச் சலுகையை படிப்படியாகக் குறைக்கும் அரசாங்கத் திட்டமே சர்ச்சையின் மையமாகும்.

ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்த மானியங்களை ஒரேயடியாக ஒழிப்பதற்குப் பதிலாக, படிப்படியாக அந்த மானியங்களை அகற்றுவதாக பெர்லின் கூறுகிறது.

மற்ற சலுகைகளில், விவசாயிகளுக்கான மோட்டார் வாகன வரி விலக்கு மற்றும் புதிய வாகனங்களுக்கான வரிச் சலுகைகளை அரசாங்கம் ஏற்கனவே திட்டமிட்டு இரத்து செய்துள்ளது.

## ஹமாஸ்'க்கு எதிரான யுத்தத்தில் 25 ஆயிரத்தை தொடும் காசா உயிரிழப்பு!

ஜனவரி 19, 2023

கடந்த வருடம் அக். 7 முதல் காசாவில் ஹமாஸ்'க்கு எதிராக இசுரவேல் தாக்குதல் நடத்தி வரும் நிலையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 24,620-ஆக அதிகரித்துள்ளது.

இது குறித்து காசா சுகாதாரத் துறை அமைச்சகம் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஹமாஸ் இற்கு எதிராக இசுரவேல் இராணுவம் நடத்தி வரும் தாக்குதலில் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 172 பேர் உயிரிழந்ததுடன் 326 பேர் காயமடைந்தனர்.

இதுவரை 24,620 பேர் உயிரிழந்ததுடன் 61,830 பேர் காயமடைந்துள்ளனர் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஹமாஸ் அமைப்பினார் இசுரவேலுடன் அடிக்கடி மோதலில் ஈடுபட்டு வந்தனர்.

அந்த மோதலின் உச்சகட்டமாக, இசுரவேல் மீது சரமாரியாக ஏவுகணைத் தாக்குதல் நடத்திய அவர்கள் அந்த நாட்டுக்குள் தரை, கடல், வான்வழியாக நுழைந்து சுமார் 1,200 பேரை படுகொலை செய்ததுடன் 250 பேரை அங்கிருந்து அவர்கள் பிணைக் கைதிகளாகக் கடத்திச் சென்றனர்.

அதையடுத்து ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழித்துக் கட்டப்போவதாக சூளுரைத்த இசுரவேல், காஸா பகுதியை



முற்றுகையிட்டு அங்கு வான் வழியாகவும், தரைவழியாகவும் தாக்குதல் நடத்தி வருகிற நிலை யில் உலக நாடுகள் போரிநிறுத் துமாறு இரு தப்பிடமும் கோரிக் கை விடுத்து வருகின்றன.

# காசாவில் 16க்கும் மேற்பட்ட மயானங்கள் இசுரவேலியப் படையினரால் அழிப்பு!

ஜனவரி 20, 2023

காசாவில் இசுரவேலிய படையினர் 16க்கும் மேற்பட்ட மயானங்களை அழித்துள்ளதை காண்பிக்கும் வீடியோக்கள் கிடைத்துள்ளதாக சிஎன்என்னின் விசாரணைகளின் போது இது தெரியவந்துள்ளது.



கல்லறைக்கற்கள் அழிக்கப்பட்டுள்ளன மண் கிளறப்பட்டுள்ளது சில சந்தர்ப்பங்களில் உடல்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன என சிஎன்என் தெரிவித்துள்ளது.

இந்த வாரம் மோதல்கள் தீவிரமடைந்துள்ள கான்யூனிசில் இசுரவேலிய படையினர் மயானத்தை அழித்து உடல்களை தேடியுள்ளனர்.

ஹமாசினால் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டவர்களை கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கையின் ஒருபகுதியாக இதனை முன்னெடுத்துள்ளதாக இசுரவேலிய பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

கல்லறைகள் அழிக்கப்பட்டுள்ளதை காண்பிக்கும் செய்மதி படங்களையும் சமூக ஊடக படங்களையும் ஆராய்ந்துள்ளதாக தெரிவித்துள்ள சிஎன்என் இசுரவேலிய படையினருடன் அவர்களின் வாகனதொடரணியில் பயணித்தவேளை இதனை அவதானித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

காசாவை நோக்கி முன்னேறும் போது திட்டமிட்ட முறையில் இதனை இசுரவேலிய படையினர் முன்னெடுத்துள்ளமை தெரியவருவதாக சிஎன்என் குறிப்பிட்டுள்ளது.

கல்லறைகள் மயானங்களை அழிப்பது சர்வதேச சட்டங்களை மீறும் நடவடிக்கை என்பதையும் சிஎன்என் சுட்டிக்காட்டியுள்ளது. சட்டநிபுணர்கள் இசுரவேலின் நடவடிக்கை யுத்தகுற்றங்களிற்கு சமமானது என தெரிவிக்கின்றனர் என சிஎன்என் தெரிவித்துள்ளது.

16 மயானங்கள் அழிக்கப்பட்டமைக்கு பொறுப்பேற்க முடியாது



என தெரிவித்துள்ள இசுரவேலிய பாதுகாப்பு படை பேச்சாளர் சிலவேளைகளில் ஹமாஸ் இராணுவநோக்கங்களிற்காக பயன்படுத்தும் மயானங்களை அழிப்பதை தவிரவேறுவழியில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

பணயக்கைதிகளை மீட்பதும் அவர்களின் உடல்களை கண்டுபிடிப்பதும் தங்களின் முக்கியமான நோக்கம் இதன் காரணமாகவே மயானங்களில் தேடுகின்றோம் என இசுரவேலிய பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

பணயக்கைதிகள் உடைய உடல்கள் இல்லை என தீர்மானிக்கப்பட்ட உடல்களை உரிய மரியாதையுடன் மீண்டும் புதைக்



கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இசுரவேலிய படையினர் மயானங்களை இராணுவ நோக்கங்களிற்காகவும் பயன்படுத்தியுள்ளனர். இசுரவேலிய படையினர் பெருமளவு மயானங்களை புல்டோசர்களை கொண்டு அழித்து புதிய நிலைகளை ஏற்படுத்தி அங்கு தங்களை பலப்படுத்திக்கொண்டுள்ளதை செய்மதி படங்கள் காண்பித்துள்ளன எனசிஎன்என் தெரிவித்துள்ளது.

காசாவின் சஜாயா பகுதியில் முன்னர் மயானங்கள் காணப்பட்ட பகுதியில் இசுரவேலின் இராணுவவாகனங்கள் காணப்படுகின்றன மயானத்தின் மத்திய பகுதி யுத்தத்திற்கு முன்னரே துப்பரவு செய்யப்பட்டது என உள்ளுர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன

ஆனால் புதிதாக அங்கு புல்டோசரை பயன்படுத்தி துப்புரவு இடம்பெற்றுள்ளதையும் இசுரவேலிய படையினர் காணப்படுவதையும் செய்மதி படங்கள் காண்பித்துள்ளன என சிஎன் என் தெரிவித்துள்ளது.

# நிலவின் மேற்பரப்பை அடைந்த உலகில் 05வது நாடு சந்திரனில் வெற்றிகரமாக தரையிறங்கிய ஜப்பான் விண்கலம்!

ஜனவரி 21, 2024

ஜப்பான் நாட்டின் விண்கலமான 'ஸ்லிம்' நிலவின் மேற்பரப்பில் வெற்றிகரமாக தரையிறங்கியது. இதன்மூலம், நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கிய உலகில் ஐந்தாவது நாடு என்ற வரலாற்றை ஜப்பான் உருவாக்கியுள்ளது.



நிலவை ஆய்வு செய்வதற்காக 'ஸ்லிம்' என்ற விண்கலனை கடந்த செப்டம்பர் மாதம் 7ம் தேதி வெற்றிகரமாக விண்ணில் ஏவியது ஜப்பான். நிலவை 120 முதல் 180 நாட்களில் இந்த விண்கலன் அடையும் வகையில் அதன் பயணம் திட்டமிடப்பட்டிருந்தது.

அந்நாட்டின் தனேகஷிமா விண்வெளி மையத்தில் HII-A லாஞ்சர் (ராக்கெட்) மூலம் நிலவை ஆய்வு செய்வதற்கான SLIM எனும் ஸ்மார்ட் லேண்டர் மற்றும் XRISM எனும் செயற்கைக்கோள் மூலம் பேரண்டம் குறித்தும் ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இதன் மூலம் பேரண்டத்தின் தோற்றம் குறித்து அறிந்து கொள்ள முடியும் என ஜப்பான் விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இந்த பணியில் ஜப்பான் விண்வெளி ஆய்வு முகமைக்கு அமெரிக்காவின் நாசா உதவும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, இன்று வெற்றிகரமாக 'ஸ்லிம்' விண்கலம் நிலவின் மேற்பரப்பில் வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டது. இதன்மூலம் அமெரிக்கா, ரஷியா, சீனா, இந்தியாவுக்கு அடுத்தபடியாக நிலவில் வெற்றிகரமாக விண்கலத்தை தரையிறக்கிய 5-ஆவது நாடு என்ற பெருமையை ஜப்பான் பெற்றது. நிலவின்




மேற்பரப்பில் வெறும் 100 மீட்டர் பரப்புக்குள் துல்லியமாகத் தரையிறங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதால் இந்த விண்கலம் 'நிலவின் ஸ்னைப்பர்' என்று அழைக்கப்படுகிறது. வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டாலும், லேண்டர் விரைவாக



சக்தியை இழந்தது. இதனால், இந்த மிஷன் குறைந்தபட்ச வெற்றியை பெற்றுள்ளது எனக் கூறியுள்ளது ஜப்பான்.

விண்கலத்தின் சூரிய மின்கலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யாததால், பணி முன்கூட்டியே முடிவடையும் என்று அச்சம் உள்ளது என்றும் ஜப்பான் தெரிவித்துள்ளது. எனினும், தற்போது லேண்டரிலிருந்து ஒரு சிக்னல் கிடைத்து வருவதாகவும், அது எதிர்பார்த்தபடி தொடர்புகொள்வதாகவும் ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# இசுரவேலின் இனப்படுகொலை வழக்கில் இடைக்கால தீர்ப்பை வழங்கும் சர்வதேச நீதிமன்றம்!

ஜனவரி 26, 2023





காசா மீது இசுரவேல் நடத்தும் இனப்படுகொலைக்கு எதிராக நெதர்லாந்தில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா வழக்குத் தொடுத்துள்ள நிலையில் இசுரவேலுக்கு எதிரான தற்காலிக நடவடிக்கைகளுக்கான தென்னாப்பிரிக்காவின் கோரிக்கைக்கு இன்று வெள்ளிக்கிழமை தீர்ப்பு.

நீதிமன்றத் தலைவர் ஜோன் டோனோகு, காஸாவில் ஏற்பட்ட உயிரிழப்புகளால் நீதிமன்றம் மிகவும் கவலையடைந்துள்ளது என்றார்.

இந்தப் பிராந்தியத்தில் வெளிவரும் மனித அவலத்தின் அளவை நீதிமன்றம் நன்கு அறிந்திருக்கிறது மற்றும் தொடர்ச்சியான உயிர் இழப்புகள் மற்றும் மனித துன்பங்கள் குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது என்று அவர் கூறினார்.

நீதிமன்றத்தின் பார்வையில், காசாவில் இசுரவேலின் சில நடவடிக்கைகள் ஐநாவின் இனப்படுகொலை மாநாட்டின் விதிகளுக்குள் அடங்கும் என்று நீதிபதி கூறினார்.

வழக்கை பொது பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்ற இசுரவேலின் கோரிக்கையை நீதிமன்றம் ஏற்க முடியாது" என்று Donogue கூறினார்.

இனப்படுகொலையை தடுக்க இசுரவேல் தனது அதிகாரத்திற்கு உட்பட்டு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக நீதிபதி கூறினார்.

இசுரவேல் தனது இராணுவ நடவடிக்கைகளை இடைநிறுத்த கட்டாயப்படுத்தும் உத்தரவு உட்பட ஒன்பது நடவடிக்கைகள் மீது ஹேக் அடிப்படையிலான நீதிமன்றம் தீர்ப்பளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பாலஸ்தீனப் பகுதியில் இசுரவேல் இனப்படுகொலை செய்கிறதா என்ற தென்னாப்பிரிக்காவின் முக்கிய குற்றச்சாட்டை இந்த தீர்ப்பு கையாளாது. அதற்கு பதிலாக, தென்னாப்பிரிக்கா கோரும் நடவடிக்கைகள் பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்கு தீங்கு விளைவிப்பதில் இருந்து பாதுகாக்க இனப்படுகொலை வழக்கு முயல்கின்றன.

தென்னாப்பிரிக்காவால் கோரப்பட்ட தற்காலிக நடவடிக்கைகள் – இனப்படுகொலையைத் தவிர்க்க இசுரவேல் என்ன செய்கிறது என்பது குறித்த அறிக்கைகளை நீதிமன்றத்திற்கு வழங்க வேண்டும்.

முக்கியமாக அவசரகால உத்தரவு, இது முக்கிய வழக்கின் இறுதித் தீர்ப்புக்கு முன் வைக்கப்பட ஆண்டுகள் எடுக்கும்.

ICJ இன் தீர்ப்புகள் அனைத்து தரப்பினரையும் கட்டுப்படுத்தும் அதே வேளையில், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு எந்த வழிமுறையும் இல்லை.

தென்னாப்பிரிக்கா என்ன சொல்கிறது…

"இசுரவேலின் நடவடிக்கைகள் ஐக்கிய நாடுகளின் இனப்படுகொலை விதிமுறைகளை மீறியுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளது. பாலஸ்தீனிய தேசிய, இன மற்றும் இனக்குழுவின் கணிசமான பகுதியை அழிப்பதற்காக" திட்டமிட்டுள்ளதாகவும் தென்னாப்பிரிக்கா வாதிட்டது.

காசாவில் பாலஸ்தீனியர்களைக் கொல்வது, அவர்களுக்கு உடல் மற்றும் மனரீதியாக கடுமையான தீங்கு விளைவிப்பது மற்றும் அவர்களின் உடல் ரீதியான அழிவைக் கொண்டு வருவதற்காக கணக்கிடப்பட்ட வாழ்க்கை நிலைமைகளை அவர்கள் மீது சுமத்துவது ஆகியவை கேள்விக்குரிய செயல்களில் அடங்கும் என்று தென்னாப்பிரிக்காவின் ரிட் கூறுகிறது.

இனப்படுகொலையைத் தடுக்கத் தவறிய மற்றும் இனப்படுகொலை வெளிப்படையாக மீறி இனப்படுகொலை செய்து வரும் இசுரவேலுக்குச் செயல்கள் அனைத்தும் காரணம் என்று தென்னாபிரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

இதன் அடிப்படையில் காசாவில் பாலஸ்தீனியர்களுக்கு எதிரான இனப்படுகொலை நடவடிக்கைகளைத் தடுக்கவும், பொது மக்களுக்கு மேலும் பல உதவிகளைச் செய்யவும் இசுரவேலுக்கு ஐநாவின் சர்வதேச நீதிமன்றம் (ICJ) வெள்ளிக்கிழமை உத்தரவிட்டது.

பாலஸ்தீன பிரதேசத்தில் ஹமாஸ் போராளிகளுக்கு எதிரான போரில் அரசு தலைமையிலான இனப்படுகொலை நடந்ததாக கூறப்படும் நிலையில், இசுரவேலுக்கு எதிரான தற்காலிக நடவடிக்கைகளுக்கான தென்னாப்பிரிக்காவின் கோரிக்கைகளுக்கு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

எனினும் தென்னாப்பிரிக்கா கோரியபடி போர்நிறுத்தத்தை உறுதியாக தெரிவிக்காமல் மேலோட்டமாக தெரிவித்தது.

பிராந்தியத்தில் வெளிவரும் மனித அவலத்தின் அளவை நீதிமன்றம் நன்கு அறிந்திருக்கிறது. தொடர்ச்சியான உயிர் இழப்புகள் மற்றும் மனித துன்பங்கள் குறித்து ஆழ்ந்த கவலையில் உள்ளது என்று நீதிமன்றத்தின் தீர்ப்பைப் படித்த நீதிமன்றத் தலைவர் ஜோன் டோனோக் கூறினார்.

நீதிமன்றத்தின் பார்வையில், தென்னாப்பிரிக்காவால் முன்வைக்கப்பட்ட காஸாவில் இசுரவேலின் சில நடவடிக்கைகள் ஐநாவின் இனப்படுகொலை மாநாட்டின் விதிகளுக்குள் அடங்கும் என்று நீதிபதி கூறினார்.

வழக்கை பொது பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்ற இசுரவேலின் கோரிக்கையை நீதிமன்றம் ஏற்க முடியாது என்று ஜோன் டோனோக் கூறினார்.

காசாவில் இசுரவேல் தனது இராணுவ நடவடிக்கைகளை இடைநிறுத்த கட்டாயப்படுத்தும் உத்தரவு உட்பட ஒன்பது நடவடிக்கைகளில் தீர்ப்பளிக்க ஹேக் அடிப்படையிலான நீதிமன்றம் கேட்கப்பட்டது.

பாலஸ்தீன பகுதியில் இசுரவேல் இனப்படுகொலை செய்கிறதா என்ற தென்னாப்பிரிக்காவின் முக்கிய குற்றச்சாட்டை இந்த தீர்ப்பு கையாளவில்லை. மாறாக, தென்னாப்பிரிக்காவால் கோரப்பட்ட நடவடிக்கைகள் இனப்படுகொலையின் கீழ் பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்கு தீங்கு விளைவிப்பதில் இருந்து பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டது.

தென்னாப்பிரிக்காவால் கோரப்பட்ட தற்காலிக நடவடிக்கைகள், முக்கிய வழக்கின் இறுதித் தீர்ப்புக்கு முன் வைக்கப்பட வேண்டிய கோரிக்கைகளாகும், அதற்கு பல ஆண்டுகள் ஆகலாம்.

சர்வதேச நீதிமன்றம் ICJ இன் தீர்ப்புகள் அனைத்து தரப்பினரையும் கட்டுப்படுத்தும் அதே வேளையில், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு எந்த வழிமுறையும் இல்லை.

# பிரான்ஸ் தலைநகரை முற்றுகையிட்ட விவசாயிகள்!

ஜனவரி 29, 2024





பிரான்ஸ் முழுவதும் விவசாயிகள் உழவூர்திகள் மற்றும் பாரவூர்திகளைப் பயன்படுத்திச் சாலைகளைத் தடுத்து போக்குவரத்தை முடக்கினர்.

இன்று திங்கட்கிழமை பிற்பகல் பாரிஸுக்குச் செல்லும் எட்டு நெடுஞ்சாலைகள் விவசாயிகளால் முற்றுகையிடப்பட்டு தடுக்கப்பட்டன.

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் 15,000 காவல்துறையினரையும், துணை இராணுவப் படையினரையும் அணிதிரட்டியுள்ளது.

பிரான்ஸ் தலைநகரில் புதிய உணவு சந்தை மற்றும் விமான நிலையங்களில் ஆயிரக்கணக்கான காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஆத்திரமடைந்த விவசாயிகள் பிரான்ஸ் தலைநகரை நோக்கிச் செல்வதாக அச்சுறுத்தும் நிலையில் இன்று ஆயிரக்கணக்கான காவல்துறையினர் பாரிஸில் பாதுகாப்புப் பணியில் நிறுத்தப்பட்டனர்.

இப்போராட்டத்திற்குப் பின்னர் ஒரு மணி நேரம் கழித்து முக்கிய விவசாய சங்கங்கள் பிரஞ்சுப் பிரதமர் கேப்ரியல் அட்டலைச் சந்தித்தனர்.

லூவ்ரே அருங்காட்சியகத்தில் உள்ள மோனாலிசா ஓவியத்தைப் பாதுகாக்கும் கண்ணாடி மீது காலநிலை ஆர்வலர்கள் சூப் வீசினர்.

பிரெஞ்சு விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு சிறந்த ஊதியம், குறைவான சுற்றுச்சூழல் சிவப்பு நாடா மற்றும் மலிவான இறக்குமதியிலிருந்து பாதுகாப்பு போன்ற கோரிக்கைகளுக்கு பதிலளிக்குமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கின்றனர்.

# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

305 Milner Ave, Unit 301
Toronto ON M1B 3v4
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4




RE/MAX HALLMARK FIRST GROUP REALTY | RAISING THE BAR

1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# “சுதந்திரம் இல்லையேல் நிம்மதியாக வாழமுடியாது”

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் புரட்சிகர அரசியல் பாதை. கல்லும் முள்ளும் நிறைந்த கடினமான பாதை. வியர்வை சிந்தி, கண்ணீர் சிந்தி, இரத்தம் சிந்தி, தாங்கொணாத் துன்பத்தின் பரிசாகப்பெறுவதுதான் சுதந்திரம். சுதந்திரம் இல்லாமல் மனித வாழ்வில் அர்த்தமே இல்லை. நாகரீகம் தோன்றிய காலம் தொட்டு இன்று வரை சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக ஒடுக்கப்பட்ட மனித சமூகங்கள் போராட்டங்களை நடாத்தி வருகிறது; யுத்தங்கள் புரிந்து இருக்கிறது. புரட்சிகள் செய்து இருக்கிறது. சுதந்திரப் போராட்டங்களாகவே மனித வரலாறு அசைகிறது. இந்த சுதந்திரத்தை வென்றெடுக்காது போனால் நாம் நிம்மதியாக வாழமுடியாது. சமாதானமாக வாழமுடியாது. சந்தோசமாக வாழ முடியாது. சுதந்திரத்தை வென்றெடுக்காதுபோனால் நாம் அடிமைகளாக வாழவேண்டும். தன்மானம் இழந்து தலைகுனிந்து வாழவேண்டும். பயந்து பயந்து பதற்றத்துடன் வாழவேண்டும். படிப்படியாக அழிந்துபோக வேண்டும். ஆகவே சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறுவழி எதுவும் இல்லை.

இளைஞர்கள் இருக்கிறார்கள், அவர்கள் போராடித் தமிழீழம் பெறுவார்கள்; அல்லாவிடில் இந்தியா இருக்கிறது, எமக்கு சுதந்திர தனியரசு பெற்றுத்தரும் என்ற வகையில் நாம் சும்மா இருந்துவிட்டால் எமக்குச் சுதந்திரம் கிடைக்கப்போவதில்லை. பொதுமக்களாகிய உங்களின் நேரடிப்பங்களிப்பின்றி எமது தேசிய சுதந்திரப் போராட்டம் வெற்றியளிக்கப் போவதில்லை. சுதந்திரப் போராட்டம் என்பதே மக்கள் போராட்டம். பரந்துபட்ட வெகு சனங்கள் ஒன்று திரண்டு ஒரு ஐக்கிய தேசமாக எழுச்சி கொண்டு போராட்டத்தில் பங்களித்தால்தான் எமக்கு வெற்றி நிச்சயம். எமது எதிரியோ தனது ஆயுதப்படைகளை எமக்கு எதிராக ஏவிவிட்டதுமன்றி சிங்கள வெகுசனத்தையும் தமிழருக்கு எதிராக அணிதிரட்டுகிறான். சிங்கள மக்களுக்கு இன வெறியூட்டி, போர் வெறியூட்டி ஆயுதம் தரித்த ஒரு இன யுத்தத்திற்கு தயார்ப்படுத்துகின்றான். இந்த அதர்ம யுத்தத்திற்கு சிங்கள மக்களிடம் இருந்து நிதி திரட்டுகிறான். சிங்கள மக்களும் கோடிக் கணக்கில் பாதுகாப்பு நிதியென்று வாரி வழங்குகிறார்கள். முழுச்சிங்கள சேதமுமே ஒரு இன யுத்தத்திற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டு வருகிறது. ஆனால், தமிழராகிய எமது நிலைதான் என்ன?

இன ஒழிப்பின் விளிம்பில் நாம் தள்ளப்பட்டும் எமக்கு இன்னும் விடுதலைக்கான விழிப்புணர்ச்சியோ, வீரோ வேச உணர்ச்சியோ தோன்றவில்லை. பசியும் பஞ்சமுமாக தாங்கொணாத் துன்பங்கள் ஏற்பட்டும் நாம் இன்னும் போராடத் தயாராகவில்லை. இனியும் நாம் பயந்து பயந்து, ஒழிந்து ஒழிந்து, செத்துக்கொண்டிருப்பதில் அர்த்தமே இல்லை. ஏதோ எங்கிருந்தோ எமக்குப் புறம்பான சக்திகள் கைகொடுத்து உதவும் என்று காத்துக்கொண்டிருப்பது அசட்டுத்தனம். நாம் போருக்குத்தயாராக வேண்டும். அடிமைகளாக வீழ்வதை விடப்போராடி வாழ்வதே மேன்மையானது என்ற இலட்சிய உணர்வோடு நாம் போராட்டத்துக்கு தயாராக வேண்டும். ஈழத் தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் விடுதலை வேங்கைகளாக, வீரப் புலிகளாக மாறவேண்டும். தாழ்ந்து போன தமிழ் இனம் வீரப்புலி இனமாக மாற வேண்டும். விடுதலை என்பது ஒரு தேசியக் கடமை. இதில் ஒவ்வொருவருக்கும் பங்களிப்புண்டு. இந்த நெருக்கடியான காலகட்டத்தில், முழுச்சமுதாயமுமே பேரழிவை எதிர்நோக்கிய இச்சூழ்நிலையில், எம்மத்தியில் சுயநல உணர்வுகள் களையப்பெற்று சமூக உணர்வும் பிறக்க வேண்டும். பணத்தை முடக்காமல், உணவுப்பண்டங்களைப் பாதுக்காமல், தான் வாழ்ந்தால் போதும் என்ற தன்னலங் கருதாமல் வசதி படைத்தோர் வசதியற்றோருக்கு உதவ வேண்டும். பணம் படைத்தோர் பட்டினி கிடப்பவர்களுக்கு உதவவேண்டும். இது ஒரு தேசிய நெருக்கடி. இந்நெருக்கடியால் பிறக்கும் துன்பத்தை முழுத்தேசிய இனமுமே பகிர்ந்து கொள்ள வேண்டும்.

(“எனது மக்களின் விடுதலைக்காக“ நூலிலிருந்து)


மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லஷ்மி பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


PSP
PSP MOTORS
QUALITY USED CARS
Dealers in all kinds of used Motor Vehicles
பல வருடம் அனுபவம் கொண்ட நம்பிக்கையான ஸ்தாபனம்
தரமான பாவித்த ஜப்பானிய வாகனங்கள்
நியாயமான விலையில் கிடைக்கும்
WE'LL BUY YOUR USED VEHICLE EVEN IF YOU DON'T WANT TO BUY OURS!
T. Udayakumar
PSP MOTORS 416.871.0450
30 Old Kennedy Road Unit B Markham ON. L3R 0L6
www.pspmotors.com I info@pspmotors.com


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


நான் பெரிது நீ பெரிது என்று
வாழாமல்
நாடு பெரிது என்று
வாழவேண்டும்
தமிழீழத் தேசியத் தலைவர்
தமிழீழம்
விடியலை நோக்கி



# வெளிக் கிளரும் ஒரு மௌனக் குமறல்

பாதுகாப்பற்ற
எம் பூமிக்குள்ளிருந்து
எழுகின்ற சாக்குரல்களை
மேவியொலிக்கிறது என் ஓலம்.
அநியாயமாய்ப் போனதற்காக
வெம்பி அழுகிறது என் ஆன்மா.
கற்றுயர்ந்து வாழ்வதற்கான வேகமும்
கன்னிப் பருவத்துக் கனவுகளும்
தீயிலிடப்பட்டு துடித்திறந்தன.

என் உள்ளத்துள்ளிருந்து
உரைக்கின்றேன்.
கற்பதைத் தவிர இம்
மண்ணிலிருந்து
எதையும் நான் செய்யவில்லை.
துப்பாக்கி முழக்கத்தின்
தூரத்திலேயே
எப்போதும் இருக்க விரும்பினேன்.
துயரச்சுமைகளை எம் சந்ததி
சுமந்த போது
என் தோள் மாற்றி
இளைப்பாற விடவேண்டும்
என்ற எண்ணம் ஒரு போதும்
உதிக்கவில்லை.

என் விருப்புகள்
படிப்பு ... படிப்பு...
பட்டம்... தொழில்... திருமணம்...
என்ற திசைகளை நோக்கியே
சிறகடித்துப் பறந்தன.

வேலிக்கு வெளியே
தலை நீட்டிப் பார்ப்பதை
ஏற்கமுடியாத என்னூரின்
காவலிடப்படாத நாட்களில் – நான்
களவாடப்பட்டேன்.
உயரத்தில் பறக்க முனைந்த
என் சிறகுகள் வெட்டுண்டு
பூமியினடியில் புதையுண்டு போயின.

எப்படிச் செத்தேன்.
ஓ... அந்தக் கொடுமையை உரைக்க
என்னால் முடியாது.
பெண்ணென்று வாழ்ந்த என்னால்
உயிர் உதறிய பின்னும்
அக்கொடுமைகளை
வாய் கொண்டுரைத்தல் இயலாது.
மானம் பெரிதென வாழ்ந்த குலமரபில்
நான் கசக்கப்பட்டிறந்தேன்
என்று எவர்க்குச் சொல்ல?

நரக வெளிகளில்
பல மிருகக் கரங்களால்
குதறப்பட்ட பின்பு
மரணவலியில் துடித்திறந்த
என்னிதயம் ஓலமிட்ட உண்மைகள்
இங்கு எவர்க்குமே கேட்கவில்லை.
ஒலியடங்கி ஒலியடங்கி
மெல்ல மெல்லச் செத்துப் போவது
எப்படியென்று பார்த்து ரசித்த
'புண்ணியவான்களுக்காக'
ஒரு பாவமுஞ் செய்யாது
என்னைப் பலிகொடுத்தேன்.

யுத்தத்தின் கோர முகம்
கண்டொளித்த
என் வழிகள்
அமைதிக்காகவே
பிடுங்கியெறியப்பட்டன?
கொலைப்பாவம் செய்வதை
ஏற்க முடியாத என்னுயிர்
சமாதானத்திற்காகவா
பறிக்கப்பட்டது?
போரொலிகள் நடவில்
துயர் மறந்து
துணிந்து பற்றிய கருவி நழுவிவிழ
சிதறிப்போன பின்பும்
கடமைநிறைவேற்றிய களிப்போடு
உலா வந்து
அறுதி மரியாதை விதைப்பில்
மண்ணுள் அடங்கும்
அந்தவாழ்வை நினைத்துப்
பொறாமையும் என்னால்
இப்போதெதுவும்
செய்ய முடியாது.
அவலப்பட்டு இறந்த நாட்களை
அசைமீட்டு அசைமீட்டு
அமைதி பெறாது
அலைகிறது என் ஆன்மா.
சமாதானத் தூதர்களின்
தூக்குக் கயிற்றில் என் ஆவி
துடித்ததை அறியாதோரே!
நன்றாக உற்றுக் கேளுங்கள்
உப்புக் காற்றின் 'ஊ' வென்ற இரைச்சலில்
கலந்து சிதறும்
என் மௌனக் குமுறல்களை
உணர்ந்து பாருங்கள்.

எம் நிணங்கலந்து சிதறிய
மண்ணுக்குள்ளிருந்து
கிளரும் வேகத்துடன் இடியெழுப்புங்கள்.
சாபமிடப்பட்ட எம் வாழ்வுக்கு
மீட்சி தாருங்கள்

– அம்புலி – களத்தில் 11.02.1999




# 'பரந்தன் சமர்' இனவாதப் பூதத்தின் தொண்டையைக் கிழித்த சமர்! 09.01.1997

முல்லைப் பெருஞ்சமருக்குப் பின் நடைபெற்ற பெருஞ்சமராக 1997 ஜனவரி மாதம் 09ம் திகதி நடைபெற்ற பரந்தன் சமர் வர்ணிக்கப்படுகிறது. முல்லைப் பெருஞ்சமரினைப் போல் எட்டு நாட்களுக்கு நீடிக்காமல் ஒரு நாளிலேயே முடிவுக்கு வந்த சமராகப் பரந்தன் சமர் அமைகிறது.

இராணுவத் தரப்பு ஆள் இழப்பு, மற்றும் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் பெறுமதி ஆகியவை முல்லைப் பெருஞ்சமரில் அதிகமாக இருப்பினும் பரந்தன் சமர் முல்லைப் பெருஞ்சமரினை விட முக்கியத்தும் வாய்ந்ததாக சில இராணுவ ஆய்வாளர்கள் கணிப்பிடுகின்றனர். "முல்லைப் பெருஞ்சமருக்கு, இராணுவ வெற்றி ஈட்டித் தந்த அரசியல் பலம் மகுடம் சேர்ப்பது போல பரந்தன் சமரின் முக்கியத்துவம் சிறீலங்கா அரசின் எதிர்காலத் திட்டங்களுக்குக்கொடுக்கும் பலத்த அடியில் வெளிப்பாடுகிறது" என என்னிடம் கருத்துத் தெரிவித்தார் இராணுவ ஆய்வாளர் ஒருவர்.

பரந்தன் சமர் எவ்வாறு நடைபெற்றது? எவ் வகையில் இச்சமர் முக்கியத்துவம் பெறுகின்றது? பரந்தன் சமரின்பின் சிறீலங்கா தரப்பு சந்திக்கப் போகும் நெருக்கடிகள் எத்தகையானவையாக அமையும்?

பரந்தன் சமரின் களம் இரு பாரிய இராணுவத் தளங்களுக்கிடையில் இமைந்திருந்தது. படைத்தரப்பிடம் இருந்து வெளியாகும் தகவல்களின் படி, 03 பட்டாலியன்களுக்குக் குறையாமல் ஏறத்தாழ 2500 இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த ஆனையிறவுப் படைத்தளத்திற்கும் 04 பட்டாலியன்களைக் கொண்ட 3000க்கும் குறையாத இராணுவத்தினரைக் கொண்ட கிளிநொச்சி இராணுவத்திற்கும் இடையில் நீண்ட தொடர்ச்சியான இராணுவ வேலிகளுக்கு மத்தியில் பாதுகாப்பான முறையில் பரந்தன் படைத்தளம் அமைந்திருந்தது. ஏறக்குறைய 1000 இராணுவத்தினர் வரை இப்பகுதியில் நிலைகொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. உண்மையான தொகை இதனைவிடக் கூடுதலாக இருக்கும் எனக் கருத இடம் உண்டு.




எதிர்கால இராணுவ நடவடிக்கைகளுக்குப் பரந்தன் பகுதி முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இராணுவத் தரப்பு கணிப்பிட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. கிளிநொச்சிப் பகுதியில் இருந்து வவுனியா நோக்கிய தரைவழிப் படையெடுப்புத் திட்டத்திற்குத் தேவையான 'ஆட்டிலறித் தாக்குதல்களை' பரந்தன் பகுதியிலிருந்தே மேற்கொள்ளும் திட்டம் சிறீலங்கா இராணுவத்திடம் இருந்ததாகவும், பரந்தனில் அமைக்கப்பட்டிருந்த 'அட்டிலறி மையம்' மாங்குளம் வரையில் தாக்குதல் நடத்தக்கூடிய சக்தியினைக் கொண்டிருந்ததாகவும் அறிய வருகிறது. வட பகுதியில் சிறீலங்கா இராணுவத் தரப்பின் பாவனையில் இருந்த 36 ஆட்டிலறிகளில் கணிசமானவை பரந்தன் பகுதியினை நோக்கி நகர்த்தப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரு பாரிய படைத்தளங்களுக்கு இடையில் மிகுந்த பாதுகாப்புடன் அமைக்கப்பட்டிருந்த இராணுவ வேலிகளை ஏறத்தாழ 16-20 கிலோ மீற்றர் தூரம் வரை உடைத்தெறிந்து பரந்தன் பிரதான கட்டளை மையம் தாக்கியழிக்கப்பட்டதுடன் அப் பகுதியினை விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கின்றனர்.

09.01.1997 அன்று அதிகாலை 3:30 மணியளவில் பரந்தன் படைத்தளத்தின் கிழக்குப் பகுதியின் ஊடாகவும் மேற்குப் பகுதியினூடாகவும் தாக்குதலை ஆரம்பித்த விடுதலைப் புலிகள், உக்கிரமான சண்டையின் பின் பரந்தன் பகுதியினைக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்து ஆனையிறவு முகாம் மீதும் தாக்குதலினைத் தொடுத்தனர்.

பரந்தன் பகுதியுடன் இருந்த வானொலித் தொடர்பு அறுந்த நிலையில், கிளிநொச்சிப் படைத்தளத்தில் இருந்த படையினருக்குக் கிலி பிடிக்கத் தொடங்கியிருக்கிறது. முல்லைத்தீவுப் படைத்தளம் தாக்கி அழிக்கப்பட்டது போல கிளிநொச்சிப் படைத்தளமும் தாக்கி அழிக்கப்பட்டு விடுமோ என்ற அச்சமே இக் கிலிக்குக் காரணமாம். கொழும்பில் இருந்து வானொலிக் கட்டுப்பாட்டு அறையில் நிலைமைகள் பற்றிய தகவல்களை அறிந்து கொண்டிருந்த இராணுவ உயர் அதிகாரிகளையும் இவ் அச்சம் பிடித்தாட்டியிருக்கிறது. ஜனாதிபதி சந்திரிகாவும் இராணுவ வானொலிக் கட்டுப்பாட்டு மையத்திற்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அறிந்து கொள்ள முன்வந்ததில் இருந்தே இத் தாக்குதல் சிங்கள ஆட்சிபீடத்தை எப்படிப் பிடித்து ஆட்டியிருக்கிறது என்பதனை உணர முடியும். பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை, இராணுவத் தளபதி ரோஹான் தலுவத்த உட்பட உயர் அதிகாரிகளின் உலங்கு வானூர்தி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில், இயந்திரக் கோளாறு காரணமாகத் தரையிறங்கியபோது பதட்டத்துடன் கட்டுப்பாட்டு அறையை நோக்கி ஓடிய சந்திரிகா, இப்போது இரண்டாவது தடவையாகவும் பரந்தன் சமரினால் ஓடியிருக்கின்றார்.

இச்சமரின் போது, சிறீலங்காப் படையினரின் 11 ஆட்டிலறிகள் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டுள்ளன. 122 மி.மீ. ஆட்டிலறிகள் ஒன்பதும், 130 மி.மீ. ஆட்டிலறிகள் இரண்டுமே இவ்வாறு தகர்க்கப்பட்டவையாகும். இவ் ஆட்டிலறிகளை தாமே அழித்ததாக இராணுவத் தரப்பு அறிவித்திருந்த போதும், அவை விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டமைக்கு ஆதாரங்கள் வெளியாகியுள்ளன. ஆட்டிலறிகள் தகர்க்கப்படுவதற்கு முன்னர் எடுக்கப்பட்ட படங்களும் ஆட்டிலறிகள் தகர்க்கப்பட்ட பின்னர் எடுக்கப்பட்ட படங்களும் "ஈழநாதம்" பத்திரிகையில் வெளியானவுடன் இராணுவத் தரப்புப் புழுகு எட்டுநாள் கூட நிற்கவில்லை.

இராணுவத்தின் ஆயுத பலத்தினைத் தாக்கி அழிக்கும் நோக்கும். இத்தாக்குதலுக்கு இருந்ததாக வெளிப்படுத்தியிருந்தனர். எனினும் சமரினை நுணுக்கமாக ஆராயும் இராணுவ நிபுணர்கள் விடுதலைப் புலிகள், சிறீலங்கா அரச படைகளின் 'ஆட்டிலறிப் பலத்தின்' மீது கண்வைத்துள்ளார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றன. நவீன யுத்தத்தில், தரை நகர்வின் போது ஆட்டிலறிகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. வளைகுடா யுத்தத்திலும் இவை கணிசமான பங்காற்றியிருக்கின்றன. யாழ். குடா நாட்டினைக் கைப்பற்றும் சிறீலங்காப் படைகளின் தரைநகர்வின் போது ஆட்டிலறிகள் சிங்களத் தரப்புக்கு பெரிதும் துணை நிற்கின்றன.

சிறீலங்காவின் இன்றைய யுத்த களத்தில் 'ஆட்டிலறிகள்' வகிக்கும் முக்கிய பாத்திரம் காரணமாக ஒரு ஆட்டிலறி அரை பட்டாலியனியன் படையினரைக்குச் சமன் என இராணுவ தொடர்பான ஆய்வுகளில் இராணுவ வல்லுனர்கள் கணிக்கின்றனர். சிறீலங்கா இராணுவத்தினரைப் பொறுத்தவரை, அவர்களது ஒரு பட்டாலியன் ஏறத்தாழ 800 படையினரைக் கொண்டதாக இருக்கிறது. இதனால், சிறீலங்காப் படையினரைப் பொறுத்தவரை ஒரு ஆட்டிலறியின் இழப்பு ஏறக்குறைய 400 படையினரின் இழப்புக்குச் சமனாகக் கணிக்கப்படலாம். இதனால் பதினொரு ஆட்டிலறிகளை படையினர் இழந்தமையினால் படையினர் இழந்த மையினால் ஏற்பட்ட இழப்பினை இராணுவ வலு ஆய்வுக் கண்ணோட்டத்தில் பார்ப்போமாயின் 4400 படையினரின் இழப்புக்குச் சமனாகக் கருதலாம்.

சிறீலங்காப் படையினரின் ஆட்டிலறிப் பலத்தினைத் தமதாக்கிக் கொள்ளுவது மட்டுமல்ல அதனைத் தாக்கி அழிப்பதும் எதிரிக்கு பாரிய இழப்பினை ஏற்படுத்தும் என்பதோடு யுத்த தந்திரோபாயத்தில் தாக்கிச் செயலிழக்கச் செய்யப்பட வேண்டிய முக்கிய இலக்காகவும் ஆட்டிலறித்தளம் இமைந்துள்ளதை இனங்கண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் புலிகளால் இத்தாக்குதல் நடாத்தப்பட்டிருப்பதாகவும் இராணுவ நிபுணர்களால் கருதப்படுகின்றது.



பரந்தன் ஆனையிறவுத் தளங்கள் மீதான தாக்குதலின் இழப்பு விபரங்களை, படைத்தரப்பு அதிகரித்துச் செல்லும் 'கிரிக்கட்' ஓட்ட எண்ணிக்கையினைப் போலப் படிப்படியாகத் தான் அறிவித்தது. ஒன்பதில் ஆரம்பித்து இருநூற்று முப்பத்தியிரண்டில் முடிவடைந்த இவ் எண்ணிக்கை உண்மையான இழப்பை விட மிகக் குறைவானது என்றே நம்பப்படுகிறது. இராணுவத்



தரப்பால் வெளியிடப்பட்ட ஆயுத இழப்பு - 4 கோடி பெறுமதியான இழப்பாகவே அறிவிக்கப்பட்டபோதும் உண்மையான இழப்பு அதிகமாக இருக்கும் என்றும் கருதப்படுகின்றது. இராணுவத் தரப்பு, புலிகள் தரப்பு இழப்பு என்று குறிப்பிட்ட 500க்கு மேற்பட்ட எண்ணிக்கைக்கு மாறாக 140 போராளிகள் வீரச்சாவடைந்த தாக விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தியிருந்தனர். இச்சமரில் விழுப்புண் அடைந்து பின்னர் விருச்சாவினை அடைந்து கொண்ட இரு போராளிகளையும் சேர்த்து விடுதலைப் புலிகள் தரப்பு இழப்பு 142 ஆகக் கணக்கிடப்படலாம்.

பரந்தன் சமர், சிறீலங்கா தரப்பின், கிளிநொச்சியிலிருந்து வவுனியா நோக்கி தரைப்பாதை அமைக்கும் திட்டத்திற்கு மரண அடியாகவே விழுந்துள்ளது. ஆனையிறவில் இருந்து கிளிநொச்சி வரையிலான சிறிய பகுதியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட இராணுவத் தொடர் வேலிப் பகுதிகளையே காப் பாற்ற முடியாமல் போன போது வவுனியா வரையிலான நீண்ட பிரதேசத்திற்கு வேலி போட்டுத் தரைப் பாதையினை அமைக் கும் முயற்சி தற்கொலைக்கு ஒப்பானதாகப் போய்விடுமா எனற் அச்சமும் இராணுவத்தரப்பில் ஏழாமல் போகாது.

அதேவேளை, தரைப்பாதை அமைக்காது யாழ். குடாநாட்டில் இராணுவத்தினருக்கும் இராணுவப் பிடியில் சிக்கியுள்ள பொது மக்களுக்கும் தேவையான உணவு வகை மற்றும் ஆயுத தள பாட விநியோகத்திற்கு கடலையும் வானையும் தங்கியிருப்பது பெரும் செலவீனத்தை ஏற்படுத்தி வருவதுடன் அப்பாதைகள் மூலமான விநியோகங்களின் சீரான தன்மை பாதிக்கக்கூடிய அபாயங்களையும் படையினர் உணரத் தலைப்பட்டுள்ளனர். 1996ம் ஆண்டிலே இலங்கை விமானப் படையினர் 20,000 மணித்தியாலங்கள் வானிலே பறந்துள்ளனர் எனவும், அதற்கு முந்திய ஐந்து வருடங்களில் மொத்தமாக 16,000 மணித்தி யாலங்களே பறந்துள்ளனர் எனவும் அண்மையில் The Sunday Times (26.01.1997) பத்திரிகையில் விமானப் படைத் தளபதி ஏயார் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க வெளிப்படுத்திய தகவல், குடாநாட்டுப் படையினர் வான் வழி விநியோகத்தில் எவ்வளவு தூரம் தங்கியுள்ளனர் எனப்தனையே வெளிப்படுத்துகிறது. வான்படைத் தளபதி, நாளாந்தம் வான்படையினர் 2000 படை யினரையும் 50 தொன் பொருட்களையும் யுத்த பிரதேசத்திற்கு ஏற்றிச் செல்வதாக வெளிப்படுத்தியமை குடாநாட்டுப் படையின் வான்வழித் தங்குநிலையினை மேலும் உறுதி செய்கிறது.



கடல் வழியும், வான்வழியும் புலிகளின் தொடர்ச்சியான தாக் குதல் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருவதும், அதிகரித்து வரும் விநியோகச் செலவும் தரைவழிப் பாதை ஒன்றினை எவ்வளவு விரைவாகச் செய்ய வேண்டும் எனப் படையினரைத் தூண் டுகிறது. இத்தகையதொரு சூழலில் படையினரின் ஆட்டிலறிப் பற்றாக்குறை பாரிய பிரச்சினையாக உணரப்பட்டிருக்கிறது. வவுனியா வரையிலான பாதை அமைப்பதற்கு மேலதிகமாக 30,000 படையினர் தேவைப்படுவர் எனக் கணிப்பிட்டிருந்த படைத்தரப்பு, அத்தொகையினைத் தேடித் திரட்டுவதை பாரிய பிரச்சினையாக முன்னர் கணித்தது. இப்போது பரந்தன் சமரின் பின், அத்தகைய தொகையினைத் திரட்ட முடிந்தாலும் கூட பாதையினைத் தக்க வைத்துக்கொள்ள முடியுமா என்ற சந் தேகம் படைத்தரப்புக்கு எழாமல் இருக்கமுடியாது.

சிறீலங்கா படைத்தரப்பின் தற்போதைய யுத்த தந்திரோ பாயத்தில் அடிக்கடி புலிகளை நோக்கிய தாக்குதல்களை முன் னெடுத்தல் முக்கியம் பெறுகிறது. இவ்வாறு தாக்குதல் மூலம் புலிகள் தம்மீது தாக்குதல் செய்வதனைக் குறைக்கலாம் என்பது இதற்கு ஒரு காரணம். இராணுவ நடவடிக்கை என்னும் பெய ரில் மக்கள் மத்தியில் இயல்பு வாழ்வுக்கு என உருவாக்கப்பட் டிருக்கும் உட்கட்டுமானங்களை உடைத்து நொறுக்கி விடு வதன் ஊடாக, மக்களை மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாக்கி 'யுத்தக் களைப்பினை' மக்களுக்கு ஏற்படுத்துதல் மற்றைய காரணம். இத்தகைய தொடர்ச்சியான தாக்குதல் முன்னெடுப் புக்களைச் செய்துகொண்டே இருக்கும் இராணுவத்தின் தந்தி ரோபாயத்திற்கு 'பரந்தன் சமர்' ஒரு பதிலடியாகவே அமைந்து விடுகிறது.

உதாரணமாக, ஜனவரி மாதம் 10ம் திகதி மணலாற்றில் இராணுவத்தினர் மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த இராணுவ நடவடிக்கை 9ம் திகதி விடுதலைப் புலிகள் நடாத்திய பரந்தன் சமர் மூலம் தடங்கலுக்கு உள்ளாகி விட்டது. மேலும் தமது நிலைகளைப் பலப்படுத்துவதில் படையினர் கூடுதலான கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தினைப் பரந்தன் சமர் வெளிப்படுத்தியமையால் 'தாக்குதல் முன்னெடுப்புக்களை' வேகமாகச் செய்யமுடியாமல் போய்விடுகிறது.

இருந்தபோதும், இக்கட்டுரையினை எழுதிக்கொண்டிருக்கும் போது படையினர் இராணுவ நடவடிக்கைக்குத் தயாராவ தாகவும் அத்தகைய ஒரு இராணுவ நடவடிக்கை 200,000 க்கும் மேற்பட்ட மக்களை ஏதிலிகளாக்கும் என்ற தகவல் கிடைத்தது. மக்களைக் கொடுமைப்படுத்தி சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தினைத் தமிழ் மக்கள் மீது திணிக்க முயலும் சிங்கள இனவெறிப் பூதத்தினை சாய்த்து விழுத்த பரந்தன் போன்ற இன்னும் பல சமர்களை தமிழ்த் தேசிய இனம் புரிய வேண்டி வரலாம். அப்போது சிங்களத் தேசிய இனத்தின் இழப்பு பாரியதாக இருக்கலாம்.

பெப்ரவிரி 1997 — எரிமலை




# உருத்திரபுரம் கூழாவடிச்சந்திப் படுகொலை 04.02.1992



கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உருத்திரபுரக் கிராமம் அமைந்துள்ளது. இப்பிரதேச மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் காணப்படுகிறது. இந்தப் பகுதியில் அமைந்துள்ள சிவன் கோயில் இக்கிராமத்திற்குச் சிறப்பைக் கொடுக்கின்றது. உருத்திரபுரம் வடக்கு, உருத்திரபுரம் மற்றும் சிவநகர்ப் பிரதேச மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு உருத்திரபுரம் வடக்கு கூழாவடிச் சந்தியில் சந்தை, வாசிகசாலை, கூட்டுறவுச்சங்கம் கமநல நிலையம், விளையாட்டுக்கழகம், கடைகள் என்பன அமைந்துள்ளன.

04.02.1992 அன்று சிறீலங்காவின் நாற்பத்து நான்காவது சுதந்திரநாள். தமிழர்கள் வாழும் பகுதியான வடக்குக் கிழக்குத் தவிர்ந்த ஏனைய இடங்களில் சுதந்திரநாள்க் கொண்டாட்டங்கள் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டன. முற்பகல் 11:00 மணியளவில் விமானப்படையின் இரண்டு “பொம்பர்” விமானங்கள் உருத்திரபுரம் பகுதியை ஐந்து நிமிடங்களாக வட்டமிட்டன. அப்போது கூழாவடிப் பகுதியில் மக்கள் சந்தையில் அதிகளவில் கூடிநின்றனர். இவ் விமானங்களின் இரைச்சலினால் மக்கள் செய்வதறியாது அங்குமிங்கும் ஓடினர். சந்தியில் நின்ற பாரிய கூழாமரத்தின் கீழும், சந்தியிலுள்ள மதகின் கீழும் பாதுகாப்புத் தேடி ஒளிந்துகொண்டனர். இந்த நேரத்தில் குண்டுவீச்சு விமானங்கள் நான்கு குண்டகளை அப்பகுதி மீது அடுத்தடுத்து வீசின. அதில் ஒரு குண்டு வெடிக்கவில்லை ஏனைய குண்டுகள் மதகின் அருகில் வீழ்ந்து வெடித்தன.

இச்சம்பவத்தின் போது மதகினுள் பாதுகாப்புக்காகத் தஞ்சம் புகுந்திருந்த பொதுமக்கள் பதினொரு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பாலானோரின் உடல்கள் சிதைந்த நிலையிற் காணப்பட்டன. கால்வாயில் பாய்ந்து கொண்டிருந்த நீர் இவர்களின் இரத்தமும் கலந்து சிவப்பாக ஓடியது. இந்த சம்பவத்தின்போது இரண்டு பேர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் ஈமச்சடங்குகள் மறுநாள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொதும் “பொம்பர்” விமானங்கள் இந்தப் பகுதியல் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

உயிரிழந்தவர்களின் நினைவாக இப்பிரதேச மக்களாலும், பொது அமைப்புக்களினாலும் கூழாவடிச் சந்தியில் 2002 ஆம் ஆண்டு நினைவாலயம் திறக்கப்பட்டுள்ளது.

உருத்திரபுரத்தைச் சேர்ந்த டாக்டர் கே.வி.கே. திருலோகமூர்த்தி அகில இலங்கை சமாதான நீதவான், திடீர் மரண விசாரணை அதிகாரி சம்பவம் பற்றி தெரிவிக்கையில்.

“திடீர் மரண விசாரனை அதிகாரியாகவும், வைத்தியராகவும் உள்ள நான் 1991 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிளிநொச்சி உருத்திரபுரம் கூழாவடிச்சந்தியில் தனியார் மருத்துவ மனையையும். அத்தோடு எனது அலுவலகத்தையும் நடத்தி வந்தேன். 1992 பெப்ரவரி மாதம் நான்காம் திகதியும் வழமை போல எனது வைத்தியசாலையைத் திறந்து நடத்திக்கொண்டிருந்தேன். அன்றைய நாள் சிறீலங்கா சுதந்திரம் அடைந்த நாள் என்பதால், பாடசாலை, அரச திணைக்களகங்கள் எல்லாவற்றிற்கும் விடுமுறை நாள். கூழாவடிச் சந்தியில் தான் சந்தையும் இருக்கின்றது. நேரம் நண்பகல் 11:00 மணியிருக்கும் சந்தையில் நிறையச் சனக்கூட்டமாக இருந்தது. அதுமட்டுமல்லாமல் பாடசாலை விடுமுறை என்பதால், பாடசாலை மாணவர்கள் அங்கு நின்று விளையாடிக்கொண்டும் நின்றார்கள். அந்த நேரம் சிறீலங்கா விமானப் படையினருடைய பொம்பர் விமானங்கள் வானில் வட்டமிட்டன. முதல் ஒரு குண்டு அடிச்சவன் ஒருத்தருக்கும் தேசமில்லை. சனங்கள் எல்லாப்பக்கத்தாலயும் பதற்றத்துடன் ஓடினார்கள். நான் ஒரு வைத்தியர் என்பதால் அங்குள்ள எல்லோரையும் எனக்கு நன்றாகத் தெரியும் சிலர் பாலத்துக்குக் கீழ் ஓடினார்கள் டொக்ரர் வாங்க என்று சொல்லி என்னையும் கூப்பிட்டவர்கள் தான் நான் துவிச்சக்கர வண்டியிலே சிவநகர்ப் பக்கமாக ஓடி விட்டேன். இரண்டாவது குண்டு பாலத்துக்குள்ள விழுந்து வெடிச்சதால சம்பவ இடத்திலேயே ஒன்பது பேரும் உயிரிழந்தார்கள, இருவருக்கு காயம் ஏற்பட்டது. காயமடைந்த இருவருக்கும் நான் தான் மருந்து கட்டிவிட்டேன்.”

04.02.1992 அன்று உருத்திரபுரம் கூழாவடிச்சந்திப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:

1. நாகலிங்கம் தயாபரன் (மாணவன் - 14)
2. கணபதிப்பிள்ளை ஜெயலிங்கம் (மாணவன் - 08)
3. பாலசிங்கம் ஜெயதீஸ்வரன் (மாணவன் - 15)
4. பஞ்சலிங்கம் பாலேந்திரன் (வியாபாரம் - 23)
5. முருகேசு தர்மலிங்கம் (தொழிலாளி – 38)
6. கோபாலசிங்கம் ஜெயகோபால் (வியாபாரம் - 20)
7. பேனாட்சோ தயாபரன் (மாணவன் - 12)
8. சுந்தரலிங்கம் சந்திரகுமார் (மாணவன் - 16)
9. விநாயகமூர்த்தி கருணாகரன் (தொழிலாளி – 29)

காயமடைந்தவர்களின் விபரம்

1. கணபதிப்பிள்ளை இராசன் (மாணவன் - 16)
2. கணேசன் தவநேசன் (மாணவான் - 18)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

# குமரபுரம் படுகொலை 11.02.1996

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் குமரபுரம் என்ற இந்தக் கிராமம் இருக்கின்றது. திருகோணமலை மாவட்டத்தில் பாரதிபுரத்திற்கும் கிளிவெட்டிக்கும் இடையிலுள்ள இக்கிராமத்திலிருந்த குடும்பங்கள் பெரும்பாலும் விவசாயத்தை தொழிலாக கொண்டவர்களாவார்கள்.

குமரபுர கிராமத்தின் எல்லைகள் பின்வருமாறு:-
கிழக்கு: பிரசித்தி பெற்ற நீர்ப்பாசனத் திட்டமாகிய அல்லைக் குளம்
வடக்கு: இக்கிராமத்தின் வடக்கு எல்லையிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் ஒரு இராணுவ முகாம் இருக்கின்றது.
மேற்கு: மேற்கு எல்லையில் ஒரு சிறிய விளையாட்டு மைதானமும் பாற்பண்ணையும் இருக்கின்றது.
தெற்கு: இக்கிராமத்தின் தெற்கு எல்லை கிளிவெட்டித் துறை முகமாகும்.

இது ஒரு விவசாய தமிழ்க் கிராமம் ஆகையால் இங்கு பெருமளவிலான ஓலைக்குடிசைகளும் ஆங்காங்கே சில கல் வீடுகளும் காணப்படுகின்றன. மூதூர் நகரத்திலிருந்து வெருகல்முகத்துவாரம் வரை நீண்டுசெல்லும் பிரதான வீதி இக்கிராமத்தின் ஊடாகவே ஊடறுத்துச் செல்லுகிறது.

இங்கு பல இன மக்கள் வாழ்கின்ற போதிலும் அவர்களுக்கிடையிலான இன உறவுகள் பாதிப்படைந்திருக்கவில்லை. 1995ம் ஆண்டிற்குப் பின்னர் இராணுவக் கெடுபிடிகள் அதிகரித்திருந்ததன் காரணமாக மக்கள் இராணுவத்தினருக்கு அஞ்சி வாழும் நிலையேற்பட்டது. இவ்வாறான ஒரு இராணுவக் கெடுபிடியின் விளைவாகத்தான் 11.02.1996 அன்று இந்தப் படுகொலை சம்பவம் இடம்பெற்றது.

அன்று மாலை 4 மணியளவில் வெடிச்சத்தங்கள் கேட்டன. மக்கள் பயத்தால் இக்கிராமத்தின் கிழக்கு எல்லையான அலைக்குளத்திற்கு அருகே நெடுக உயர்ந்து அடர்த்தியாக வளர்ந்திருந்த கிளிக்கண்ணா மரக்கூடலுக்குள் ஒளிந்து கொண்டாரகள் வேறு சிலர் வீட்டிலேயே இருந்தார்கள். அவ்வாறு வீட்டில் இருந்தவர்களில் அழகுதுரை என்பவரது வீட்டில் எட்டுப் பேர் இருந்தார்கள். அந்த எட்டுப் பேரும் இராணுவத்தால் வீட்டுக்குள்ளேயே சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இந்த ஊர்த் தலைவர் தமது சாட்சியத்தில் தன்னுடைய வீட்டில் தன்னுடன் கதைத்துக்கொண்டிருந்த இராசேந்திரம் கருணாகரன் என்பவர் தன் கண் முன்னாலேயே சூடுபட்டு இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்ததைத் தான் பார்த்ததாகச் சொன்னார். இந்த இராணுவத்தினரின் அடாவடித்தனமான சூட்டில் தொழிலாளியான நாகராசா என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒரு கண்ணை முழுமையாக இழந்தார். மறுகண்ணில் பார்வைக் குறைபாட்டோடு இன்றும் அவர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.



இந்தப் படுகொலைச் சம்பவத்தின்போது தனது எட்டு வயதுச் சகோதரனான அன்ரனி ஜோசெப் என்ற சிறுவனை வீதிவழியாக கிளிவெட்டிக்கு சைக்கிளிற் கூட்டிக்கொண்டு சென்ற அருமைத்துரை தனலட்சுமி கீதா என்ற பதினாறு வயதுப் பாடசாலை மாணவி துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டு கடை ஒன்றுக்குள் தனது தம்பியுடன் தங்கியிருந்தபோது சிறிலங்கா இராணுவத்தினரால் வெளியே இழுத்துச் செல்லப்பட்டு ஒரு பாற்பண்ணைக் கட்டடத்துக்குள் வைத்து பல இராணுவச் சிப்பாய்களினால் பாலியல்வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டார். கடைசியில் கோப்ரல் குமார் என்ற இராணுவச் சிப்பாய் அவரைத்தானே சுட்டுக்கொன்றதாக நீதிமன்றத்தில் ஒத்துக் கொண்டார். ஏன் சுட்டுக்கொன்றாய் எனக் கேட்கப்பட்டபோது அந்தச் சிறுமி பல இராணுவச் சிப்பாய்களால் பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கப்பட்ட போது உடம்பு முழுவதும் ககடிகாயங்களுக்கு உள்ளாகியிருந்தாள். அவள் அணிந்திருந்த ஆடைகள் பல துண்டுகளாகக் கிழித்து வீசப்பட்டிருந்தன. அவள் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தாள் அவளின் பரிதாபகரமான நிலையைப் பார்த்தே சுட்டேன் என்றான்.

இந்தப் படுகொலையின்போது எல்லாமாக இருபத்தாறு தமிழர்கள் ஆண், பெண் என்ற வேறுபாடின்றியும் முதியவர், குழந்தைகள் என்ற வேறுபாடின்றியும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இருபத்திரண்டு பேர் சுட்டுப் படுகாயப்படுத்தப்பட்டார்கள். இறந்த எல்லோருடைய மரண அத்தாட்சிப் பத்திரங்கள் துப்பாக்கிச் சூட்டு காயங்களினாலும் நீண்ட நேரம் உரிய சிகிச்சை அளிக்கப்படாது கவனிப்பாரற்று விடப்பட்டமையாலும் ஏற்பட்ட மரணங்களென எழுதப்பட்டிருந்தன. அப்போது மூதூர் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றிய பொன்னையா சுவர்ணராச் இம்மரணங்களை அத்தாச்சிப்படுத்தியுள்ளார்.

இந்த படுகொலை தொடர்பாக ஒன்பது படையினர் கைது செய்யப்பட்டார்கள். பத்து ஆண்டுகளாக இந்தக்கொலை தொடர்பான வழக்கு திருகோணமலை நீதிமன்றில் நிலுவையிலுள்ளது. இந்த வழக்குடன் சம்பந்தப்பட்ட சான்றுப் பொருட்களும் தடையப் பொருட்களும் மூதூர் நீதவான் நீதிமன்றத்தினால் கொழும்பு அரசாங்க பகுப்பாய்வுக் கூடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன. ஆனால், அவையாவும் 2005ம் ஆண்டு ஏற்பட்ட விபத்தின் போது எரிக்கப்பட்டுவிட்டன. இந்நிலையில் இந்த வழக்கின் அடுத்த கட்ட நகர்வு என்ன என்பதே நீதித்துறை வட்டாரத்தில் எழுப்பப்படும் கேள்வியாகும்.

11.02.1996 அன்று குமரபுரம் இனப்படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:

01. இராமஜெயம்பிள்ளை காமலேஸ்வரன் (வயது 14 – மாணவன்)

# குமரபுரம் படுகொலை 11.02.1996

02. இராசேந்திரம் கருணாகரன்
03. கனகராசா சபாபதிராசா (வயது 16 – கமம்)
04. கிட்டினர் கோவிந்தன்
05. பாக்கியராசா வசந்தினி
06. தங்கவேல் கலாதேவி (வயது 11 – மாணவி)
07. ஆனந்தன் அன்னம்மா (வயது 28)
08. அமிர்தலிங்கம் ரஜனிக்காந்
09. அழகுதுரை பரமேஸ்வரி (வயது 27)
10. அருமைத்துரை வள்ளிப்பிள்ளை
11. அருமைத்துரை தனலெட்சுமி (வயது 16 – மாணவி)
12. அருணாசலம் கமலாதேவி
13. அருணாசலம் தங்கவேல்
14. சோமு அன்னலட்சுமி
15. செல்லத்துரை பாக்கியராசா (வயது 26 – தொழிலாளி)
16. சுந்தரலிங்கம் பிரபாகரன் (வயது 13)
17. சுந்தரலிங்கம் சுபாசினி (வயது 04 – மாணவன்)
18. சுப்பிரமணியம் பாக்கியம்
19. சுப்பையா சேதுராசா (வயது 72 – தொழிலாளி)
20. சிவக்கொழுந்து சின்னத்துரை (வயது 58 – கமம்)
21. சிவபாக்கியம் பிரசாந்தினி
22. சண்முகநாதன் நிதாகரன் (வயது 11 – மாணவன்)
23. வடிவேல் நடராசா (வயது 27 – தொழிலாளி)
24. விநாயகமூர்த்தி சுதாகரன் (வயது 13 – மாணவன்)

காயமடைந்தோர் விபரம்:

01. இராசதுரை சாத்தியப்பிரியா (வயது 24 – சுயதொழில்)
02. இராசதுரை சின்னவன்
03. நாகராசா கிருபைராணி (வயது 35 – வீட்டுப்பணி)
04. நாகராசா சுதாகரன்
05. குலேந்திரன் தவமணிதேவி (வயது 24 – வீட்டுப்பணி)
06. கிட்ணன் (வயது 04)
07. கணபதிப்பிள்ளை நிரோஜன் (வயது 04 – குழந்தை)
08. கணபதிப்பிள்ளை குகதாசன் (வயது 12 – சிறுவன்)
09. கணபதிப்பிள்ளை குமுதினி
10. பாக்கியராசா (வயது 35)
11. பழனிவேல் யோகராணி
12. தம்பிப்பிள்ளை சிற்றம்பலம்
13. திருப்பதி மஞ்சுளா (வயது 12 – சிறுமி)
14. மாரிமுத்து செல்லாச்சியார்
15. மகேஸ்வரன் குவேந்தினி (வயது 06 – சிறுமி)
16. மகேஸ்வரன் வனஜா
17. அழகுதுரை சர்மி (வயது 12 – சிறுமி)
18. அரசரட்ணம் நாகராஜா
19. மோசஸ் அன்ரனி யோசப் (வயது 02 – குழந்தை)
20. சித்திரவேல் வேல்நாயகம்
21. சிற்றம்பலம் கோணேஸ்வரன்
22. ராஜா இன்பமலர் (வயது 24)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# தம்பலகாமம் – பாரதிபுரம் படுகொலை – 01.02.1998



சிறீலங்கா சுதந்திரமடைந்த நாளில் இருந்து, தமிழ்மக்கள் எதிர்கொண்ட, அவர்களை உலுக்கியெடுத்தபடுகொலைகள் ஏராளம். அதிலும் கிழக்கு மாகாணம்படுகொலைகளின் களமாகவே இருந்தது. காரணம் சிறீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் அத்து மீறிய குடியேற்றங்களும் கிழக்கு மாகாணத்தை வசப்படுத்த முற்பட்டமைதான். தமிழர் பிரதேசங்களில் படுகொலைகளை நிகழ்த்தி விரட்டியடிப்பதன் மூலம் சிங்களமயமாக்கலைச் செய்வதை உத்தியாகக்கொண்டிருந்தனர். நில அபகரிப்பிற்காக, கிராமப்படுகொலைகள் சத்தமின்றி நடந்தேறின. பாலம்போட்டாறு, ஜெயபுர ஆனதும்ம முதலிக்குளம் மொறவெவ ஆனதும் இப்படித்தான். இதன் தொடர்ச்சியாக, தம்பலகாமம் வடக்கில் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் தமது எல்லைகளை விரிவு படுத்தும் பொருட்டு தம்பலகாமத்தின் ஏனைய பகுதிகளை நோக்கித் தாக்குதல்களை ஆரம்பித்தனர்.அதில்தான், 01.02.1998 அன்று பாரதிபுரத்தில் நடந்தேறியது அந்தக் கோரச்சம்பவம்.

பொதுவாக, எல்லைக் கிராமங்களில் நடக்கும் படுகொலைகள், தாக்குதல்களை சிங்கள-தமிழ் மக்களிடையேயான இனக்கலவரம் என வரையறைப்படுத்தி, சிறீலங்கா அரசு அதைக் கண்டு கொள்வதேயில்லை. இது சிங்களத் தாக்குதலாளிகளுக்கு வாய்ப்பாக இருந்தது மட்டுமன்றி, அரசின் ஊக்குவிப்பாகக்கூட அமைந்தது. ஆனால் தம்பலகாமத்தில்நடந்த படுகொலையில் காடையர்களுடன் காவல்துறையும் சேர்ந்து கொண்டது தான் மிகப்பெரிய அவலம்.

தம்பலகாமம், திருகோணமலை மாவட்டத்தில், விவசாயக் கிராமங்களைக் கொண்ட பிரதேசம். திருகோணமலை நகரத்திலிருந்து பன்னிரண்டுமைல் தொலைவில் அமைந்துள்ளது. சம்பந்தரால் பாடல் பெற்ற தலமான திருக்கோணேசரத்துடன் தொடர்புடைய ஆதிகோணேசுரர் ஆலயத்தைக் கொண்டமைந்த சிறப்புப் பெற்றது. பாரதிபுரம், தம்பலகாமத்தின் பசுமையான கிராமங்களில் ஒன்று. கந்தளாய்க்குளத்தின் நீரப்பாசனத்தால் விவசாயத்தில் தன்னிறைவைக் கொணடிருந்த வளமான கிராமம். இதன் காரணமாகவே சிங்களவர்களின் இலக்காக மாறியது.

1990களின் பிற்பகுதியில் தம்பலகாம உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்த அத்தனை தமிழ்க்கிராமங்களும் இனத் தாக்குதலுக்கு உள்ளாகின. மனிதாபிமானமற்ற தாக்குதல்களால் அப்பிரதேசம் ஒட்டுமொத்தமான, பாரிய இடப்பெயர்வைச் சந்தித்தது. பெருமளவு மக்கள் வடபுலம் நோக்கி ஓடிவந்தனர். எஞ்சியோர் அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்தனர். கிராமத்து மண்ணையே தமது சீவனோபாயத்திற்காக நம்பியிருந்த மக்களால் சிலகாலங்கள் கூட நீடிக்க முடியவில்லை. பசி, பஞ்சம், வறுமை வாட்டியெடுக்கத் தொடங்கியதால் உயிரைப் பணயம் வைத்து தமது சொந்த இடங்களுக்குச் திரும்பவும் செல்லத் தொடங்கினர். இனவாத அட்டகாசங்கள்சற்றே தணிந்திருந்ததால், சிங்களவர்களால் பறிக்கப்பட்ட கிராமங்கள் போக, மீதி இடங்களில் தமது இருப்பிடங்களை அமைத்துக்கொண்டனர்.

அவ்வாறு மீளக்குடியமர்ந்த கிராமங்களான புதுக்குடியிருப்பு, பொற்கேணி, பாரதிபுரம் போன்றவற்றை இலக்கு வைத்துப் பேரினவாதிகள் மீண்டும் தாக்கத்தொடங்கினர். அதன் உச்சக்கட்டமாக, தமிழர்களை அச்சமுறுத்தும் நோக்கில் ஒரு கோரப்படுகொலையை பாரதிபுரத்தில் நிகழ்த்தி முடித்தது சிறீலங்கா காவல்துறை.

01-02-1998 அன்று காலை, மெதுவாக இருள் அகன்று கொண்டிருந்த வைகறை நேரத்தில் துயிலெழுந்த கிராமம் தனக்கான அன்றைய பணிகளுக்காக தயாராகிக்கொண் டிருந்தது. ஏறக்குறைய 5.00 மணிக்கும் 6.00 மணிக்கும் இடைப்பட்ட அந்த விடியல் பொழுதில், காவல்துறை நிலையத் திலிருந்த காவல்துறையினரும் ஊர்காவல் படையினரும், அப்பகுதிகளில் வயல் வெளிக்கும், பணிக்கும் சென்று கொண்டிருந்தவர்களை விசாரணை எனக் கூட்டிச் சென்று காவலரனின் முன்னால் நிற்கவைத்தனர். காரணம் ஏதுமின்றி இழுத்துச் செல்லப்பட்ட அப்பாவிகள் நிதானிக்கும் முன்பு, சுற்றி நின்று சுட்டுத் தள்ளினர். மொத்தமாக எட்டு உடல்கள், சில கணங்களில் பிணமாகச் சரிந்தன. தொடர்ந்து நாலாபக்கமும் இலக்கின்றிச் சுட்டதில் பதினேழு பேர் படுகாயமடைந்தனர். உயிரிழந்த எட்டுப்பேரில், நான்கு பேர் பள்ளிப்படிப்பை முடிக் காத மாணவர்கள். அவர்களில் இருவர் பதின்ம வயதில் இருந்த சகோதரர்கள்.

சுட்டுக்கொன்ற பின்னும் கொலைவெறி அடங்காத காவல் துறை, பிணங்களை உதைத்தும் குத்தியும் உருக்குலைத்தது. உயிரிழந்த ஆறுமுகன் சேகர் என்பவரின் ஆண் உறுப்பை வெட்டி அவரது வாய்க்குள் திணித்துவிட்டுச் சென்றது.

அதிகாலை வேளையில் நடந்த கோரக் கொலையால் தமபல காமம் மீண்டும் ஒருமுறை கதிகலங்கியது. பிணமாகப் பிள்ளையைப் பார்த்த பெற்றோர், தந்தையைப் பார்த்த குழந்தைகளின் கதறல், அந்த வைகறைப் பொழுதை அதிரவைத்தது. அவர்களின் கண்ணீரில் அந்தக் கிராமமேநனைந்தது. அடுத்து என்ன நடக்கப்போகின்றதோ என்ற அச்சத்தில் பலர் உறைந்து போயிருந்தனர். அன்று விழுந்த பேரிடியால், மீண்டும் தமது கிராமத்தை விட்டு இடம் பெயரத்தொடங் கினார்கள்.

வழமையாக இத்தகைய தாக்குதல்களை இனவாதம் என முடிச்சிடும் சிறீலங்கா அரசு, இம்முறை காவல்துறையின் அடாவடி நேரடியான சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டதால், கண்துடைப்பாக ஒருவிசாரணையை மேற்கொண்டது. விசாரணையில் பத்துக்கும் மேற்பட்ட காவல்துறையினரும் ஊர்காவல் படையினரும் சம்பந்தப்பட்டிருப்பதாக நிறுவப்பட்டபோதும், இதுவரை அந்தக் குற்ற அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுமில்லை, குற்றவாளிகள் தண்டிக்கப் படவுமில்லை.

பாரதிபுரம் 01.02.1998 அன்றைய சம்பவத்தில் அநியாயமாகக் கொல்லப்பட்ட அப்பாவிகள் விபரம்

01. அமிர்தலிங்கம் சுரேந்திரன் (மாணவன் - 14)
02. அமிர்தலிங்கம் கஜேந்திரன் (தொழிலாளி - 18)
03. முருகேசு ஜனகன் (மாணவன் - 17)
04. நாதன் பவளநாதன் (தொழிலாளி – 45)
05. சுப்பிரமணியம் திவாகரன் (-)
06. குணரத்தினம் சிவராஜன் (-)
07. ஆறுமுகம் சேகர் (கமம் )
08. பொன்னம்பலம் கனகசபை (கமம்)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விரபங்களையும் பெறமுடியவில்லை

# தமிழின அழிப்புக்கள் பெப். 04. 1948...!

01. இங்கினியாகலை இனப்படுகொலை - 05-06-1956
02. 1958ஆம் ஆண்டு இனக்கொலை
03. தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை - 10.01.1974
04. 1977ஆம் ஆண்டு இனக்கொலை
05. 1979 அவசரகாலச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைகள்
06. 1981ஆம் ஆண்டு இனப்படுகொலை
07. 1983ஆம் ஆண்டு இனப்படுகொலை
08. திருநெல்வேலி படுகொலை - 24,25.07.1983
09. சுன்னாகம் காவற்றுறை நிலையப்படுகொலை - 08.01.1984
10. சுன்னாகம் சந் தைப் படுகொலை - 28.03.1984
11. மதவாச்சி - ரம்பாவ படுகொலை 1984 செப்ரெம்பர்
12. ஒதியமலை படுகொலை - 01.12.1984
13. செட்டிக்குளம் படுகொலை - 02.12.1984
14. குமுழமுனை படுகொலை - 02.12.1984
15. தென்னமரவடி படுகொலை - 03.12.1984
16. மன்னார் - முருங்கன் வீதிப் படுகொலை - 04.12.1984
17. கொக்கிளாய் - கொக்குத்தொடுவாய் படுகொலை 1- 5.12.1984
18. வங்காலைப் பங்குத்தந்தை வணபிதா மேரி பஸ்ரியன் மற்றும் பொதுமக்களின் படுகொலை - 06.01.1985
19. முள்ளியவளைப் படுகொலை - 16.01.1985
20. வட்டக்கண்டல் படுகொலை - 30.01.1985
21. புதுக்குடியிருப்பு ஐயன் கோயிலடிப் படுகொலை - 21.04.1985
22. குமுதினிப் படுகொலை - 15.05.1985
23. நற்பிட்டிமுனை படுகொலை - 17.05.1985
24. திரியாய்த் தாக்குதல்கள் - 1985
25. வவுனியா பூந்தோட்டச்சந்திப் படுகொலை - 10.08.1985
26. திம்பு பேச்சுவார்த்தை கால படுகொலை
27. கள்ளம்பற்றைச் சந்திப் படுகொலை - 10.08.1985
28. துவரங்காடு (வரோதயநகர்)ப் படுகொலை - 17.08.1985
29. வயலூர்ப் படுகொலை - 24.08.1985
30. நிலாவெளி படுகொலை - 16.09.1985
31. திருமலைப் படுகொலைகள் யூன், ஓகஸ்ட், செப்ரெம்பர் - 1985
32. பிரமந்தனாற்றுப் படுகொலை - 02.10.1985
33. மூதூஉ கடற்கரைச் சேனைப் படுகொலை - 1985
34. தம்பலகாமம் தாக்குதல்கள்
35. கந்தளாய் படுகொலை - 09.11.1985
36. சம்பூர்ப் படுகொலை - 27.11.1985
37. திருகோணமலைப் படுகொலைகள் - 1985
38. கிளிநொச்சி தொடருந்து நிலையப் படுகொலை - 25.01.1986
39. உடும்பன்குளம் படுகொலை - 19.02.1986
40. தங்கவேலாயுதபுரம் படுகொலைகள் - 19.02.1986
41. ஈட்டிமுறிஞ்சான் படுகொலை - 19,20.03.1986
42. பெரியபுல்லுமலைக் கிராமப் படுகொலை - 1986
43. உப்புவெளிப் படுகொலை - 02.06.1986
44. ஆனந்தபுரம் படுகொலை - 04.06.1986
45. கந்தளாய் படுகொலை - 04,05.06.1986
46. மண்டைதீவுக் கடலில் நிகழ்ந்த படுகொலை - 10.06.1986
47. சேருவிற் படுகொலை - 12.06.1986
48. தம்பலகாமம் படுகொலை - 20.06.1986
49. பரந்தன் விவசாயிகள் படுகொலை - 28.06.1986
50. பெருவெளி அகதிகள் முகாம் படுகொலை - 15.07.1986 திருகோணமலை
51. தண்டுவான் படுகொலை - 17.07.1986
52. மூதூர்-மணற்சேனைப் படுகொலை - 18.07.1986
53. அடம்பன் படுகொலை - 12.10.1986
54. பெரியபண்டிவிரிச்சான் படுகொலை - 15.10.1986
55. கொக்கட்டிச்சோலைப் படுகொலை - 28.01.1987
56. பட்டித்திடல் படுகொலை - 26.04.1987
57. தோணிதட்டாமடுப் படுகொலை - 27.05.1987
58. அல்வாய் வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலயம் மீதான எறிகணை வீச்சு - 29.05.1987
59. கொக்குவில், பிரம்படி, பொற் பதி வீதிப் படுகொலை 1987. ஒக்ரோபர். 2ம் வாரம்
60. புதுக்காட்டுச் சந்திப்படுகொலை - 11.10.1987
61. யாழ். போதனா வைத்தியசாலைப் படுகொலை - 21,22.10.1987
62. அராலித்துறைப் படுகொலை - 22.10.1987
63. கொக்குவில் இந்துக்கல்லூரிப் படுகொலை - 24.10.1987
64. அளவெட்டி ஆச்சிரமப் படுகொலை - 26.10.1987
65. சாவகச்சேரி சந்தைப் படுகொலை - 27.10.1987
66. மூளாய் வைத்தியசாலைப் படுகொலை - 05.11.1987
67. நெடுங்கேணிச் சந்திப் படுகொலை 1- 1.11.1987
68. மட்டக்களப்பு பொதுச் சந்தைப் படுகொலை - 1987.12.27
69. காத்தார் சின்னக்குளப் படுகொலை - 17.01.1989
70. வல்வை மண்ணில் இந்தியப் படையின் படுகொலைகள் - 02,03,04.08.1989
71. கிழக்குப் பல்கலைக்கழகப் படுகொலை - 23.05.1990
72. சம்மாந்துறைப் படுகொலை - 10.06.1990
73. சித்தாண்டிப் படுகொலை - 20,27.07.1990
74. வீரமுனைப் படுகொலை - 20.06.1990 - 15.08.1990
75. பரந்தன் சந்திப் படுகொலை - 24.07.1990
76. பொத்துவில் படுகொலை - 30.07.1990



77. திராய்க்கேணிப் படுகொலை - 06.08.1990
78. துறைநீலாவணைப் படுகொலை - 12.08.1990
79. ஏறாவூர் வைத்தியசாலைப் படுகொலை - 12.08.1990
80. கோறாவெளி, ஈச்சையடித்தீவுப் படுகொலை 1- 4.08.1990
81. மட்டக்களப்பு - புதுக்குடியிருப்புப் படுகொலை - 21.09.1990
82. மண்டைதீவில் கைது செய்து காணாமற்போனவர்கள் - 25.08.1990 - 23.09.1990
83. மட்டக்களப்பு-சோனகன் வெட்டைப் படுகொலை - 26.08.1990
84. நெல்லியடிச் சந்தைப் படுகொலை - 29.08.1990
85. சத்துருக்கொண்டான் படுகொலை - 09.09.1990
86. ஒட்டுசுட்டான் படுகொலை - 27.11.1990
87. புதுக்குடியிருப்புச் சந்திப் படுகொலை - 30.01.1991
88. வந்தாறுமூலைப் படுகொலை - 08.06.1991
89. உருத்திரபுரம் கூழாவடிச்சந்திப் படுகொலை - 04.02.1992
90. வங்காலைப் படுகொலை 17.02.1991
91. வட்டக்கச்சி அரச நெற்பண்ணை மீது நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சு - 28.02.1991
92. கொக்கட்டிச்சோலைப் படுகொலை - 12.06.1991
93. கிண்ணியடிப் படுகொலை - 12.07.1991
94. கரப்பொழை, முத்துக்கல் படுகொலை - 29.04.1992
95. வற்றாப்பளை படுகொலை - 18.05.1992
96. தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயப்படுகொலை - 30.05.1992
97. மைலந்தனை, புனானைப் படுகொலை - 09.08.1992
98. கிளாலிப் படுகொலைகள் - 02.01.1993 - 29.07.1993
99. மாத்தளன் படுகொலை - 18.09.1993
100. சாவகச்சேரி-சங்கத்தானை புக்காராக் குண்டுவீச்சு - 28.09.1993
101. கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயம் மீதான தாக்குதல் - 29.09.1993
102. யாழ்-குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீதான சுப்பசொனிக் விமானக் குண்டு வீச்சு - 13.11.1993
103. சுண்டிக்குளம் தொடுவை வாய்க்கால் மீனவர் படுகொலை - 18.02.1994
104. யாழ்.நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமானக்குண்டுவீச்சு - 09.07.1995
105. யாழ் வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பாடசாலைப் படுகொலை - 1995.09.
106. கொழும்பு புறநகர்ப் படுகொலை

107. செம்மணிப் புதைகுழிகள் - 1996
108. குமரபுரம் படுகொலை - 11.02.1996
109. நாச்சிக்குடாப் படுகொலை - 16.03.1996
110. தம்பிராய் சந்தை கிபீர் குண்டுவீச்சுச் சம்பவம் - 17.05.1996
111. மல்லாவி படுகொலை - 24.07.1996
112. பன்னங்கண்டிப் படுகொலை - 27.07.1996
113. கைதடி கிருசாந்திப் படுகொலை - 07.09.1996
114. வவுனிக்குளம் படுகொலை - 26.09.1996 மற்றும் 15.08.1997
115. கோணாவில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல் - 27.09.1996
116. முள்ளிவாய்க்கால் படுகொலை - 13.05.1997
117. மாங்குளம் படுகொலை - 08.06.1997
118. அக்கராயன் அரசினர் வைத்தியசாலை மீதான எறிகணைத்தாக்குதல் - 15.07.1997
119. தம்பலகாமம் - பாரதிபுரம் படுகொலை - 01.02.1998
120. பழைய வட்டக்கச்சி கிபீர் விமானக் குண்டுவீச்சு - 26.03.1998
121. சுதந்திரபுரம் படுகொலை - 10.06.1998
122. விசுவமடுப் படுகொலை- 25.11.1998
123. சுண்டிக்குளம் நல்லதண்ணித் தொடுவாய் மீதான கிபீர் குண்டுவீச்சுத் தாக்குதல் - 02.12.1998
124. புதுக்குடியிருப்பு மந்துவில் படுகொலை - 15.09.1999
125. பாலிநகர் படுகொலை - 03.11.1999
126. மடுத்தேவாலயப் படுகொலை - 20.11.1999
127. மிருசுவில் படுகொலை - 19.12.2000
128. பேசாலை படுகொலை - 23.12. 2005
129. திருகோணமலை தமிழ் மாணவர் படுகொலை - 02 01. 2006
130. மானிப்பாய் படுகொலை - 14.01. 2006
131. தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் கடத்தல் - 29 .01.2006
132. திருகோணமலை இனக்கலவரம் - 12.04. 2006
133. புத்தூர் படுகொலை - 18.04. 2006
134. திருகோணமலை மூதூர் படுகொலை - 25.04.2006
135. உதயன் பணிமனை படுகொலை - 02 .05.2006
136. நெல்லியடியி படுகொலை - 04.05.2006
137. மந்துவில் படுகொலை - 06.05.2006
138. அல்லைப்பிட்டி படுகொலை - 13.05. 2006
139. வடமுனை நெடுங்கல் படுகொலை - 07.06 2006
140. வங்காலை படுகொலை - 08.06.2006
141. கைதடி மனிதப் புதைகுழி - 06, 07, 08.06.2006
142. பேசாலைத் தேவாலயம் படுகொலை - 17.06. 2006
143. அக்சன்பெயம் தன்னார்வ நிறுவனம் படுகொலை - 05.08.2006
144. நெடுங்கேணி - சமளங்குளம் படுகொலை - 08.08.2006
145. கிழக்குப் படுகொலைகள் - 08 - 12. 2006
146. அல்லைப்பிட்டி செல்வீச்சு - 13.08. 2006
147. வள்ளிபுனம் செஞ்சோலை படுகொலை - 14.08. 2006
148. பொத்துவில் இரத்தன்குளம் படுகொலை - 17.09.2006
149. புதுக்குடியிருப்பு கைவேலி படுகொலை - 16.09.2006
150. கிளிநொச்சி மருத்துவமனை அருகாமை படுகொலை - 02.11. 2006
139. வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர் படுகொலை - 18.11.2006
140. படகுத்துறை படுகொலை - 02.01.2007
141. சிலாவத்துறை படுகொலை - 02.09.2007
142. பெரியமடு படுகொலை - 25.10. 2007
143. தருமபுரம் படுகொலை - 25.11.2007
144. ஐயன்குளம் படுகொலை - 27.11.2007
145. புலிகளின்குரல் வானொலி நிலையம் குண்டுவீச்சு - 27.11.2007
146. தட்சனாமடு படுகொலை - 29.01.2008
147. கிராஞ்சி படுகொலை - 22.02.2008
148. திருமுறிகண்டி கிளைமோர்த்தாக்குதல் - 23.05.2008
149. நாகதம்பிரானாலய அடியவர் கிளைமோர்த் தாக்குதல் - 02.06.2008
150. புதுக்குடியிருப்பு படுகொலை - 15.06.2008
151. புதுமுறிப்பு இடம் பெயர்ந்தோர் செல்விச்சு - 30.08.2008
152. குமரபுரம் குண்டுவீச்சு - 10.10.2008 .
153. உருத்திரபுரம் செல்வீச்சு - 24.10.2008
154. வள்ளிபுனம் குண்டுவீச்சு - 30.10.2008
155. உழவனூர் கொத்துக் குண்டு வீச்சு - 29.11. 2008
156. வட்டக்கச்சி குண்டுவீச்சுகள் - 1 - 20.12.2008
157. முரசுமோட்டை குண்டுவீச்சு - 31.12. 2008
159. 2009 இல் இடம்பெற்ற தமிழ் இன அழிப்பு
160. 2009 பின்னரும்...



# சிங்களப்பேரினவாதம் உருவாக்கிய பொய்யே "மகாவம்சம்"

# மகாவம்சம் இன்றும் எழுதப்படுகிறது

## இதுவரை சிங்களத்திலும் பாளி மொழியிலும் மட்டுமே அரசால் வெளியிடப்பட்டுள்ள மகாவம்சம் தொகுதிகள்

**தொகுதி 1 – இலங்கையின் பண்டைய கி.பி. 301 வரை– மகாநாம தேரரால் எழுதப்பட்டது.**
**தொகுதி 2 – கி.பி. 301 முதல் கி.பி. 1815 வரையான ஆங்கிலேயரின் முழுக் கட்டுப்பாடில் வரும் வரை.**
**தொகுதி 3 – 1815 முதல் 1936 வரை.**
**தொகுதி 4 – 1936 முதல் 1956 பண்டாரநாயக்க ஆட்சியேறும் வரை.**
**தொகுதி 5 – 1956 முதல் 1978 ஜே. ஆரின் இரண்டாவது குடியரசு ஆட்சி தொடங்கும் வரை.**
**தொகுதி 6 – 1978 முதல் 2010 தமிழீழ விடுதலைப் போராட்டம் முடிந்த மகிந்த மீண்டும் ஆட்சியேறும் வரை.**
**ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலப்பகுதி (1978 – 1989)**
**ஆர். பிரமதாச, டி.பி. விஜேதுங்க ஆட்சிக் காலப்பகுதி (1989 – 1994)**
**சந்திரிகா பண்டாரநாயக்க ஆட்சி காலப்பகுதி (1994 – 2005)**
**மகிந்த ராஜபக்ஷ ஆட்சிகாலப்பகுதி (2005 – 2010)**









# வீரவணக்கம்







நிலையுடன் பெயர்: தியாகி திருமலை நடராசன்
நிலையான பெயர்: திருமலை நடராசன்
வீரப்பிறப்பு:
நிலையான முகவரி: திருகோணமலை
நிகழ்வு: 04.02.1957 அன்று திருமலையின் மணிக்கூட்டு கோபுரத்தில் ஏற்றப்பட்டிருந்த சிறிலங்கா சிங்கக்கொடியயை சிங்கள இராணுவத்தின் எச்சரிக்கையை மீறி சிங்கக் கொடியை அறுத்து வீழ்திய போது சிங்கள பௌத்த இனவாத இராணுவத்தால் சுடப்பட்டு வீரச்சாவு



## ஈகையர் திருமலை நடராஜன்

**04.02.1957 அன்று**
**தமிழீழம் – திருகோணமலையின் மணிக்கூட்டு கோபுரத்தில் ஏற்றப்பட்டிருந்த சிறீலங்கா சிங்கக்கொடியயை சிங்கள இராணுவத்தின் எச்சரிக்கையை மீறி சிங்கக் கொடியை அறுத்து வீழ்திய போது சிங்கள பௌத்த இனவாத இராணுவத்தால் சுடப்பட்டு வீரச்சாவு**



# பெப் 4. சுதந்திரக் கேலிக்கூத்து: காலனித்துவத்திலிருந்து நவகாலனித்துவத்திற்கு...

காலனித்துவத்திலிருந்து நவகாலனித்துவத்துக்கு கைமாற்றும் சதியே நமது சுதந்திர நாள். ஆட்சியையும், அதிகாரங்களையும். பொறுப்புகளையும் தமிழர்களிடமிருந்து பறித்து சிங்களவர்களிடம் ஒப்படைத்த நாள் இது. தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தை நசுக்குவதற்கான அரச இயந்திரத்தை சிங்களவர்களிடம் கொடுத்த நாள் இது. இலங்கையின் சனத்தொகையில் 11 வீத இந்திய வம்சாவழித் தமிழர்களை நாடற்றவர்களாக ஆக்குவதற்காக வழங்கப்பட்ட லைசன்ஸ் இந்த சுதந்திரம்.



டொனமூர் யாப்பு தொடக்கம் இறுதி யாப்பு வரை தமிழர்கள் எதிர்த்தே வந்துள்ளனர். சோல்பரி யாப்பு மாத்திரம் விதிவிலக்கு. சுதந்திரத்துக்கு வித்திட்ட அந்த யாப்பு தமிழர்களை நசுக்க மட்டுமே பயன்பட்டது.

“சுதந்திரம்” என்பதை விட தமிழர்களுக்கு அது ஆங்கிலேயர்களும், சிங்களவர்களும் சேர்ந்து செய்த “தந்திரம்” மட்டுமே. சுதந்திர நாள் என்பது தமிழர்களுக்கு ஒரு கரி நாள். சட்டபூர்வமாக உரிமை பறிபோன நாள். அவ்வப்போது சற்று தணிந்தும், கொதித்தும் வந்த போதும் பண்பளவில் எந்த மாற்றமும் நிகழ்ந்ததில்லை. யுத்தத்திற்குப் பின்னர் தமிழ் மக்கள் தரப்பிலும் சுதந்திர தினத்தில் தம்மையும் இணைத்து அனுஷ்டிக்கும் போக்கு ஆங்காங்கு காண முடிகிற போதும். உணர்வு பூர்வமான பங்களிப்பாக அது இல்லை என்பதே நிதர்சனம். அகதிகளாகவும், ஆனாதரவாகவும், குடும்பங்கள், சொத்துக்கள் இழந்தவர்களாகவும், அரசியல் உரிமைகளையும் அடிப்படை உரிமைகளை பறிகொடுத்தவர்களாகவும் இருக்கும் அரசியல் அனாதைகளுக்கு சுதந்திரம் ஒரு கேடா என்கிற நிலை. சமத்துவமும், சக வாழ்வும், சமவுரிமையும் சகல மக்களுக்கும் கிடைக்கக் கூடிய நாளே இலங்கைக்கு உண்மையான சுதந்திர நாள்.

## (சு)தந்திரம் கைமாறிய கதை

இலங்கையில் காலனித்துவத்தின் இறுதிக் காலப்பகுதியில் அரசியல் சீர்திருத்தத்துக்கு வழிகோலிய உடனடி பின்புலக் காரணியாக இருந்தது இரண்டாம் உலக மகா யுத்தமே. இதன் போது பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் ஆட்சிக்குட்பட்டிருந்த நாடுகளில் வெளிக்கிளர்ந்த சுதந்திரப் போராட்டங்களும் உக்கிரம் பெற்றுக் கொண்டிருந்தது. இலங்கையின் அண்மைய நாடான இந்தியாவிலும் சுயராஜ்யப் போராட்டம் வேக முற்றுக் கொண்டிருந்த போது இலங்கையர்களும் இலங்கைக்கான சீர்திருத்தக் கோரிக்கைகளை உயர்த்திப் பிடித்தனர்.

அன்று அரசாங்க சபையில் அங்கம் வகித்து வந்த உயர் மத்திய தர வர்க்கத் தலைவர்கள் டொனமூர் திட்டம் தொடர்பாகவும் அதிருப்தியுற்றிருந்தனர். அது போதுமானதல்ல என்றும், அதற்கு மாற்றாக மேலதிகமாக சீர்திருத்தக் கோரிக்கைகளையும் வேண்டி நின்ற போது அதனை கருத்திற் கொள்ளாமலிருக்க பிரித்தானியருக்கு இயலவில்லை.

வெறும் சீர்திருத்தவாத கோரிக்கைகளை மாத்திரமே முன்வைத்து வந்த இலங்கையை தமது காலனித்துவ நாடுகளிலேயே சிறந்த “மாதிரிக் காலனி” (Model Colony) என்றே பிரித்தானியா அழைத்து வந்தது. எனவே சீர்திருத்தக் கோரிக்கைகளில் ஓரளவானதை வழங்கி இலங்கையரை திருப்திப்படுத்தி விட பிரித்தானியாவும் தயாராக இருந்தது. என்ற போதும் 1939 செப்டம்பரில் ஆரம்பித்த இரண்டாம் உலக மகா யுத்தத்தைக் காரணம் காட்டி அச் சீர்திருத்தக் கோரிக்கைகளைக் கூட பின்போட்டு வந்தது. 1940ம் ஆண்டு பிரித்தானிய அரசு தமது அறிக்கையொன்றின் மூலம் போர் நிலை காரணமாக அரசாங்க சபையின் காலத்தை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிப்பதாக அறிவித்தது. அதன் காரணமாக 1941ம் ஆண்டு நடத்தப்படவிருந்த பொதுத்தேர்தலும் பின்போடப்பட்டது. இப்படிப் பின்போட்டமைக்கு இன்னொரு காரணமும் சொல்லப்படுவதுண்டு. அப்போது மிக வேமாக வளர்ச்சியுற்று வந்த இடதுசாரிகளின் செல்வாக்கானது தமது இருப்புக்கு அச்சுறுத்தலாதென்றும் சீர்திருத்தவாத தேசிய சக்திகளை தமக்கு சாதகமாகத் தயார்படுத்துவதற்கான அவகாசத்தை ஏற்படுத்துவதற்காகவுமே இத்தேர்தல் பின்போடப்பட்டதும் ஒரு காரணம்.



1941ம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கம் இன்னொரு அறிவித்தலையும் விடுத்தது. யுத்தம் முடிவடைந்தவுடனேயே அரசியல் சீர்திருத்தம் இடம் பெறும் என்பதே அது. சீர்திருத்தவாதத் தலைவர்கள் இம்முறை சீர்திருத்தக் கோரிக்கைகளுடன் மாத்திரம் நின்று விடாது “டொமினியன்” அந்தஸ்தைக் கோரி நின்றனர்.

உலக மகா யுத்தம் பல நாடுகளுக்குப் பரவி தீவிரமடைந்து கொண்டிருந்த போது பிரித்தானியா தமது நற்குணத்தைக் காட்ட வேண்டியதன் அவசியம் இருந்தது. இந்நிலையில் 1943இல் இன்னொரு அறிக்கையைப் பிரித்தானியா வெளியிட நேரிட்டது.

அதன்படி யுத்தம் முடிந்ததன் பின் பொறுப்புடன் கூடிய அரசியலமைப்பொன்று வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது. அவ் ஆட்சி முறையானது பிரித்தானிய முடிக்குட்பட்ட சுயாட்சி முறையாக இருக்குமென்றும், இதனை உருவாக்குவதற்கான ஒரு நகலொன்றை அமைச்சரவையை உருவாக்கும்படி பிரித்தானிய அரசு வேண்டியது. இதனை 1943க்குள் தயாரிக்கும்படியும் நான்கில் மூன்று பெரும்பான்மை பகுதியினரின் ஒப்புதலைப் பெற்றபின் இதனை நடைமுறைக்கு கொண்டு வரலாமென்றும் அதிலிருந்தது.

## “சுதந்திர சாசனம்” கையெழுத்தான போது

“அமைச்சர்களின் நகல்” (Minister’s Draft) எனும் பெயரில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த நகல் உண்மையிலேயே அமைச்சர்களால் உருவாக்கப்பட்டது அல்ல. இதனை உருவாக்கியவர் அன்றைய இலங்கைப் பல்கலைக்கழக (பேராதனைப் பல்கலைக்கழக) உபவேந்தராகவிருந்த சேர். ஐவர் ஜெனிங்ஸ் என்பவரே. இது தன்னாலேயே உருவாக்கப்பட்டது என பிற்காலத்தில் சேர்.ஐவர் ஜெனிங்ஸ் எழுதிய “இலங்கையின் அரசியலமைப்பு” (Constitution of Ceylon) எனும் நூலில் குறிப்பிட்டிருந்தது குறிப்பிட்டிருந்தது.

இந்த நகலுக்கு சிறுபான்மை இனத்தவர்களின் ஆதரவு கிடைக்கவில்லை. குறிப்பாக தமிழ்த் தலைவர்கள் இதனை எதிர்த்தனர். தம்மிடமிருந்து எந்தவித யோசனைகளையும் கேட்டறியாமல் தயாரிக்கப்பட்ட இந் நகல் சிறுபான்மையினங்களுக்கு எதிரானவை என அவர்கள் தெரிவித்தனர்.

ஆனாலும் இந்நகலை மீளப் பரிசீலிக்கும்படி அமைச்சர்களால் குடியேற்ற நாட்டுக் காரியதரிசியிடம் கோரப்பட்டது. இந்நகலைப் பரிசீலிப்பதற்குப் பதிலாக பிரித்தானிய அரசு இன்னொரு அறிவித்தலை விடுத்தது. “1944 அறிக்கை” எனும் பெயரில் அழைக்கப்படும் இவ்வறிக்கையில் “அமைச்சர்களின் நகலை” நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியப்பாட்டை ஆராய்வதற்காக ஒரு ஆணைக்குழு இலங்கைக்கு அனுப்பப்படுமென்றும், யுத்தம் இன்னமும் தொடர்ந்து கொண்டிருப்பதால் அரசாங்க சபையின் காலத்தை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

“1944 அறிக்கை”யை அமைச்சர்கள் எதிர்த்தார்கள். அதனை அரசாங்க சபைக்கு முன்வைக்கு முன்பே அதனை நிராகரித்தார்கள். ஆனாலும் அமைச்சர்களின் எதிர்ப்பின் மத்தியிலும் அது நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன் பிரகாரம் 1944 செப்டம்பர் மாதம் அரசியலமைப்பு சீர்

# எமக்கு எப்போது சுதந்திரம்?




திருத்தத்தை பரிசீலிப்பதற்கென சோல்பரி ஆணைக்குழு 1944 யூலை 5இல் அமைக்கப்பட்டது. இக்குழு டிசம்பர் 22 இலங்கை வந்தது.
சோல்பரி ஆணைக்குழுவினருக்கு செய்வதற்கு ஒன்றுமிருக்கவில்லை. "அமைச்சர்களின் நகல்" எனும் பெயரில் சொல்லப்பட்ட ஐவர் ஜெனிங்ஸ் தயாரித்திருந்த அதே திட்டத்தையே தமது ஆணைக்குழுவின் சிபாரிசாக முன்வைத்தது. செனட் சபை எனும் பேரில் மேற்சபையொன்றும் உருவாக்கப்பட வேண்டுமென்றும் அவ்வாணைக்குழு கூறியிருந்தது. சிறுபான்மை இனங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அம்மேற்சபை அனுகூலமாக இருக்குமென சோல்பரி குழு நம்பியது. வேறும் சில சிறு சிறு திருத்தங்கள் செய்த போதும் ஜெனிங்ஸின் அடிப்படையான திட்டத்தில் பாரிய மாற்றமெதனையும் இது செய்யவில்லை. இறுதியில் ஜெனிங்ஸ் திட்டமானது சோல்பரித் திட்டமாக 1945 ஒக்டோபர் 09இல் முன்வைக்கப்பட்டது.

சோல்பரி அரசியலமைப்பு டொமினியன் அந்தஸ்தை விட சற்றுக் குறைந்திருந்தது. இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பின் நடந்த தேர்தலில் பிரித்தானியாவில் தொழிற்கட்சி பதவியிலமர்ந்தது. இலங்கைக்கான சீர்திருத்தமும் இந்த தொழிற் கட்சி அரசாங்கத்தாலேயே பரிசீலிக்கப்பட்டது.

"சோல்பரித் திட்டம்" பற்றி அன்றைய சபைத் தலைவர் டி.எஸ். சேனநாயக்கவுடன் பிரித்தானிய அரசு பேச்சுவார்த்தை நடாத்தியது. அதன் பின் இது ஒரு மசோதாவாக பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த மசோதா 1945ம் ஆண்டு நவம்பர் 8 இல் அரசாங்க சபையில் வாக்குக்கு விடப்பட்ட போது 51 வாக்குகள் ஆதரவாகவும் 3 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. (எஸ்.நடேசன், பீ.தியாகராஜா, ஏ.மகாதேவா ஆகியோர் இதற்கு ஆதரவளித்திருந்தனர்).

1947ம் ஆண்டு அது இலங்கைக்கு அனுப்பப்பட்டது. "947 அரசியல் திட்டம்" என அழைக்கப்படுவது இது தான்.

யூன் 18ஆம் திகதி அரசாங்க சபை கூடிய போது பிரித்தானியா இலங்கைக்கு சுயாட்சி (டொமினியன்) வழங்கும் தனது திட்டத்தை அறிவித்தது. அடுத்த மாதமே 4ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. ஒகஸ்ட் 23 - செப்டம்பர் 20 வரை பொதுத் தேர்தல் நடைபெற்றது. இத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் (ஐ.தே.க.வானது இலங்கை தேசிய காங்கிரசும், பண்டாரநாயக்காவின் சிங்கள மகா சபை உட்பட சில அமைப்புக்களையும் இணைத்தே அமைக்கப்பட்டிருந்தது) இருந்த சிங்கள மகா சபையைச் சேர்ந்தவர்கள் கூடிய ஆசனங்களைக் கைப்பற்றியிருந்த போதும் இறுதி நேரத்தில் பண்டாரநாயக்காவால் டி.எஸ்.சேனநாயக்கா பிரதமராக ஆவதற்கு ஆதரவளிப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. இத் தேர்தலில் சோல்பரி அரசியல் திட்டத்துக்கு ஆதரவு வழங்கிய எஸ்.நடேசன் யாழ்ப்பாணத்தில் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தினால் தோற்கடிப்பட்டார். ஏ.மகாதேவா (சேர்.பொன் அருணாசலத்தின் மகன்) ஜி.ஜி.பொன்னம்பலத்தினால் தோற்கடிக்கப்பட்டார்.

செப்டம்பர் மாதம் 24 அன்று டி.எஸ். பிரதமராகப் பதவியேற்றார். ஒக்டோபர் மாதம் முதலாவது பாராளுமன்றம் கூடியது.

| | பெயர் | தொகுதி |
|---|---|---|
| எதிராக வாக்களித்தவர்கள். | | |
| 1. | டி.எஸ்.சேனநாயக்க | மினுவாங்கொட |
| 2. | S.W.R.D.பண்டாரநாயக்க | வேயங்கொட சுகாதார, உள்ளூராட்சி அமைச்சர், சபைத்தலைவர் |
| 3. | R.S.S.குணவர்தன | கம்பஹ |
| 4. | டி.பி.ஜாயா | மத்திய கொழும்பு |
| 5. | ஜே.ஆர்.ஜெயவர்தன | களனி |
| 6. | ஜே.எல்.கொத்தலாவல | தொடங்கொஸ்லந்த |
| 7. | ஈ.ஏ.நுகவெல | கடுகன்னாவ |
| 8. | ஏ.ரத்நாயக்க | வத்தேகம |
| 9. | டட்லி சேனநாயக்க | தெடிகம |
| 10. | சீ.சித்தம்பலம் | மன்னார். |
| 11. | சீ.சுந்தரலிங்கம் | வவுனியா |
| 12. | ஜீ.ஆர்.டி.சில்வா | கொழும்பு வடக்கு |
| 13. | ஏ.ஈ.குணசிங்க | மத்திய கொழும்பு |
| 14. | எச்.எஸ்.இஸ்மயில் | புத்தளம் |
| 15. | பீ.பி.புலன்குலம் | அனுராதபுரம் |
| 16. | ஏ.பி.ஜயசூரிய | ஹொரண |
| 17. | எம்.எஸ்.காரியப்பர் | கல்முனை |
| 18. | வீ.நல்லையா | கல்குடா |
| 19. | H.D.Z.சிறிவர்தன | நீர்கொழும்பு |
| 20. | A.R.A.M.அபுபக்கர் | மூதூர் |
| 21. | சீ.ஈ.ஆட்டிகல | ரத்னபுர |
| 22. | எம்.டி.பண்டா | மத்துரட்ட |
| 23. | பீ.எல்.பௌத்தசார | பொலன்னறுவை |
| 24. | ஐ.டி.தசநாயக்க | வாரியபொல |
| 25. | ஆர்.ஏ.டி.மெல் | கொழும்பு தெற்கு |
| 26. | ஜீ.ஏ.டி.சொய்ஸா | அம்பலங்கொட |
| 27. | எம்.எம்.இப்பிராகிம் | பொத்துவில் |
| 28. | S.U.எதிர் மன்னசிங்கம் | பதிரிப்பு |
| 29. | ஜே.ஜே.பெர்ணாண்டோ | சிலாபம் |
| 30. | லியோ பெர்ணாண்டோ | புத்தல |
| 31. | ஈ.ப்.என்.கிரேஷன் | நியமனம் |
| 32. | எப்.எச்.கிரிபின் | நியமனம் |
| 33. | டி.எஸ்.குணசேகர | உடுகம |
| 34. | டி.பி.ஜயசூரிய | ஜாஎல |
| 35. | மொன்டேகு ஜயவிக்கர | நியமனம் |
| 36. | டி.டி.கருணாரத்ன | கம்பஹ |
| 37. | என்.எச்.கீர்த்திரத்ன | கேகாலை |
| 38. | S.H.மஹாதிவுல்வெவ | கலாவெவ |
| 39. | ஜே.ஒப்ரெ மார்டின் | நியமனம் |
| 40. | ஈ.டபிள்யு.மெதிவ் | பலங்கொட |
| 41. | வீ.டி.நாணயக்கார | மாத்தளை |
| 42. | து.று.ஒல்பீல்ட் | நியமனம் |
| 43. | எஸ்.எஸ்.பேக்மன் | நியமனம் |
| 44. | டி.பி.பானபொக்க | கலஹா |
| 45. | எல்பட்.எப்.பீரிஸ் | நாத்தாண்டியா |
| 46. | டி.பி.பொஹொலியத்த | ஹொரவ்பதான |
| 47. | எச்.ஆர்.யு.பிரேமசந்திர | கடுகன்னாவ |
| 48. | டி.ஏ.ராஜபக்ஷ | பெலிஅத்த |
| 49. | ஜே.ஏ.ரம்புக்பொத்த | அலுத்நுவர |
| 50. | எச்.பி.ரம்புக்வெல்ல | மினிபே |
| 51. | ஏ.பு.று.ரத்நாயக்க | தெனியாய |
| 52. | எச்.எல்.ரத்வத்தே | மாவனெல்ல |
| 53. | எம்.சேனநாயக்க | மதவாச்சி |
| 54. | ஆர்.ஜி.சேனநாயக்க | தம்பதெனிய |
| 55. | ஏ.சின்லெப்பை | மட்டக்களப்பு |
| 56. | கே.வீ.டி.சுகததாச | வெலிமட |
| 57. | எச்.பிங்தென்னே | தம்புல்ல |
| 58. | ஜீ.ஆர்.விக்கி | நியமனம் |
| 59. | சைமன் அபேவிக்கிரம | பத்தேகம |

அதே மாதம் பிரதமர் யாழ்ப்பாணம் விஜயம் செய்த போது அங்கு கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதுடன் பூரண ஹர்த்தால் அனுட்டிக்கப்பட்டது.

இதே வேளை 1947 டிசம்பர் ஆளுனர் சேர். ஹென்றி மொங்க் மேசன் மூர் மற்றும் டி.எஸ். சேனநாயக்க ஆகியோருக்கிடையில் மூன்று ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டது. இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அல்லது அமைச்சரவை யுடன் எவ்வித கலந்துரையாடலையும் செய்யாமல் இந்த ஒப் பந்தம் தன்னிஷ்டப்படி பிரித்தானிய விசுவாசியாக தன்னைக் காட்டிக் கொள்வதற்காக செய்து கொண்டார் சேனநாயக்கா. பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள், அரசாங்க நிர்வாகம் ஆகி யன தொடர்பாக 3 ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. அவ்வொப்பந்தங்கள் 1948 பெப்ரவரியிலிருந்து நடைமுறைக்கு வரும்படி செய்து கொள்ளப்பட்டது. இதன் பிறகே 1947 நவம்பர் 26 அன்று பிரித்தானியப் பாராளுமன்றத்தில் "சதந்திரச் சட்டம்" (The Ceylon Independence Act 1947) நிறைவேற்றப்பட்டது. இச் சட்டம் இலங்கையில் 1947 டிசம்பர் 1ஆம் திகதி பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டு 3ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. இச் சட்டத்துக்கு 59 வாக்குகள் ஆதரவாகவும், 11 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டன. 29 பேர் வாக்களிப்பிலிருந்து தவிர்த்துக் கொண்டனர். அவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (பார்க்க அட்டவணை)

| | | |
|---|---|---|
| எதிராக வாக்களித்தவர்கள். | | |
| 1. | எச்.டி.அபேகுணுவர்தன | மாத்தறை |
| 2. | டபிள்யு தஹநாயக்க | காலி |
| 3. | கலாநிதி கொல்வின் | வெல்லவத்தைகல்கிஸ்ஸை |
| 4. | பீ.ச்.டபிள்யுடி.சில்வா | அம்பலங்கொடபலபிட்டிய |
| 5. | சம்லி.குணவர்தன | களுத்துறை |
| 6. | பீட்டர் கெனமன் | மத்திய கொழும்பு |
| 7. | ஜே.சீ.டி.கொத்தலாவல | பதுளை |
| 8. | பீ.குமாரசிறி | ஹக்மன |
| 9. | எம்.ச்.பீரிஸ் | பானந்துறை |
| 10. | எல்.ராஜபக்ஷ | ஹம்பாந்தொட்டை |
| 11. | W.P.A.விக்கிரமசிங்க | அக்குரெஸ்ஸ |

| | | |
|---|---|---|
| வாக்களிப்பத்திலிருந்து தவிர்த்துக் கொண்டவர்கள் | | |
| 1. | சோமவீர சந்திரசிறி | மொரட்டுவ |
| 2. | S.J.V.செல்வநாயகம் | காங்கேசன்துறை |
| 3. | டி.பி.ஆர்.குணவர்தன | கோட்டே |
| 4. | டி.பி.ஆர்.குணவர்தன | அவிஸ்ஸாவெல்ல |
| 5. | கே.ஹேரத் | நிக்கவரெட்டி |
| 6. | டி.எல்.ஹெட்டிஆராச்சி | நிவிட்டிகல |
| 7. | I.M.R.A.ஈரியகொல்ல | தண்டகமுவ |
| 8. | கே.கனகரத்னம் | வட்டுக்கோட்டை |
| 9. | வீ.குமாரஸ்வாமி | சாவக்கச்சேரி |
| 10. | கே.குமாரசுவாமி | கொட்டகல |
| 11. | ஜீ.ஆர்.மொ | மஸ்கெலியா |
| 12. | கே.வி.நடராஜா | பண்டாரவெல |
| 13. | என்.எம்.பெரேரா | ருவன்வெல்ல |
| 14. | ரெஜினோல்ட் பெரேரா | தெஹிவிட்ட |
| 15. | வில்மட் ஏ.பெரேரா | மத்துகம |
| 16. | ஜி.ஜி.பொன்னம்பலம் | யாழ்ப்பாணம் |
| 17. | கே.ராஜலிங்கம் | நாவலபிட்டிய |
| 18. | டி.ராமலிங்கம் | பருத்தித்துறை |
| 19. | டி.ராமானுஜம் | அலுத்நுவர |
| 20. | புளோரன்ஸ் | கிரிஎல்ல |
| 21. | எஸ்.ஏ.சில்வா | அகலவத்த |
| 22. | எஸ்.சிவபாலன் | திருகோணமலை |
| 23. | எச்.ஸ்ரீ நிஷ்ஷங்க | குருணாகலை |
| 24. | டி.பி.சுபசிங்க | பீ.கிரிய |
| 25. | எஸ்.எம்.சுப்பையா | பதுளை |
| 26. | ஏ.எல்.தம்பையா | ஊர்காவற்துறை |
| 27. | எஸ்.தொண்டமான் | நுவரெலியா |
| 28. | சீ.வன்னியசிங்கம் | கோப்பாய் |
| 29. | சீ.வி.வேலுப்பிள்ளை | தலவாக்கலை |

இச்சட்டத்தின் பின் தான் 1948 பெப்ரவரி 4ஆம் திகதி "சுதந்திரம்" என்ற கேலி நாடகம் அரங்கேற்றப்பட்டது. சோல்பரி கொமிசனின் செயலாளராக செயற்பட்ட பில்லிஸ் மில்லர் (Phyllis Miller) அம்மையாரின் பிறந்த நாளைத் தான் சுதந்திரத் தினத்துக்காக தெரிவுசெய்திருந்தார்கள் என்கிற ஒரு கதையுமுண்டு. சேர் ஒலிவர் குணதிலக்க 1962 அரச கவிழ்ப்புச் சமபவத்தின் பின் லண்டனில் குடியேறியிருந்த காலத்தில் பில்லிஸ் மில்லர் அம்மையாரைத் தான் 1968இல் திருமணம் செய்து கொண்டார்.

இப்படித்தான் காலனித்துவத்திலிருந்து நவ காலனித்துவத்திற்கு பரிமாறப்பட்டது. காலனித்துவத்துக்கு முன் பன்முக சமூகங்களின் வெவ்வேறு அரசாட்சிகளைக் கொண்டிருந்த இந்தத் தீவு காலனித்துவம் முடிவுக்கு வரும்போது "ஒற்றையாட்சியாக்கி" ஒட்டுமொத்தமாக சிங்கள - பௌத்த கொவிகம - ஆணாதிக்க -











JATHU RENOVATION




உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்

★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical

RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com

அகரம்
Akaram

வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant

தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல் (Business Cards, Flyers, Posters, Logo, Banner Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)

இவற்றிற்கான ஆலோசனைகளையும், தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள

அழையுங்கள் (Call):
437.345.4203

The ESTATE
BANQUET AND EVENT CENTRE



The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"

The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar

430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com

Call today to Save energy

Free Estimate!
Call today
$50 OFF




Let us help with...
- Replacement (Door & Windows)
- Custom Door & Windows
- Front Door & Patio Door
- Garden Door
- Door & Windows Re-Caulking (Important)
- Painting Doors & Windows
- Basement Separate Entrance Door
- Home Painting
- Spotlights installation
- California Shutters

PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-

Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com





# தொல்லியல் சுவடுகள்...

# ஜல்லிக்கட்டு சங்க காலம் முதல் ஆயிரம் ஆண்டுக்கும் மேலாக தொடரும் தமிழர் பாரம்பரியம்!

16.01.2024



வேளாண்மை தமிழர்களின் வாழ்வியலோடு இணைந்த ஒன்றாகும். கால்நடைகள் வேளாண்மையின் முதுகெலும்பாகும். நான்கு நாட்கள் வெகு சிறப்பாக கொண்டாடி மகிழும் பொங்கல் விழாவின் மூன்றாவது நாள் மாட்டுப்பொங்கல். தாங்கள் வளர்த்துவரும் கால்நடைகளுக்கு குறிப்பாக மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஆதி காலம் முதல் இவ்விழா கொண்டாடப்பட்டு வருகின்றது.

தற்காலத்தில் வேளாண்மை பணிகளுக்கு பல்வேறு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. ஆனால் முன்பு வேளாண்மையின் பல்வேறு வேலைகளுக்கும் உழவர்கள் மாடுகளையே பயன்படுத்தி வந்தனர். மண்ணை உழுது சமன் செய்வதற்கு, கிணற்றிலிருந்து நீர் இறைக்க, தானியத்தை பிரித்தெடுக்க என அனைத்து வேலைகளுக்கும் மாடுகள் பயன்படுத்தப்பட்டன.

உழவர்களின் உற்ற தோழனாக விளங்கும் மாடுகளை குளிக்க வைத்து பொங்கலிட்டு வணங்கி நன்றி செலுத்தும் விழாவாகவே மாட்டுப் பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது. தொடர்ந்து உழவர் தினம் என்று சொல்லக்கூடிய காணும் பொங்கல், ஜல்லிக்கட்டும் இன்றளவிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

தமிழர் வரலாற்றில் ஏறு தழுவுதல், காணும் பொங்கல் குறித்து இந்த கட்டுரையில் விரிவாக காண்போம்.

சங்க காலம் முதல் தொடரும் ஏறு தழுவுதல்

ஏறு தழுவுதலின் வரலாறு

விழுப்புரம் அறிஞர் அண்ணா கலை அறிவியல் கல்லூரி வரலாற்று துறை பேராசிரியர் ரமேஷ் பிபிசி தமிழிடம் ஏறு தழுவுதல் குறித்து விவரித்தார்.

மாடுகளின் பயன்பாடு ஆதிகாலம் முதலே இருந்துள்ளது. சிந்து சமவெளி காலம் முதல் கால்நடைகள் மக்களுடன் இணைந்து இருந்துள்ளன. சிந்து சமவெளி முத்திரைகள் இதற்கு மிகச்சிறந்த ஆதாரமாகும். மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற நகரங்களில் அகழாய்வில் கிடைத்த முத்திரைகளில் திமில் காளை உருவம் காணப்படுகின்றது.

சங்க இலக்கியமான கலித்தொகையில் ஏறு தழுவுதல் பற்றி தெளிவாக உள்ளது.

அதில்

" எழுந்தது துகள்,
ஏற்றனர் மார்பு,
கவிழ்ந்தன மறுப்பு
கலங்கினர் பலர்..."

என்ற அடிகள் ஏறுதழுவுதல் களம் குறித்து தெளிவுபடுத்துகின்றன.

அதேபோல் திமில் பெருத்த காளைகள் கால்களால் தரையை கீறி புழுதியை எழுப்பின. நிலத்தை காலால் உதைத்தன. முரண்பட்டு ஒன்றோடு ஒன்று எதிர்த்து நின்றன. இந்த காளைகள் மிடுக்குடனும் வீரத்துடனும் போருக்கு செல்லும் வீரர்களை ஒத்ததாக இருந்தன என்பதை

"நீர் எடுப்பவை, நிலம் சாடுபவை,
மாறுயேற்றுச் சிலைப்பவை, மண்டிப் பாய்பவை
துளங்கு இமில் நல் ஏற்றினம் பல களம்புகும்,
மள்ளர் வனப்பு ஒத்தன"

என கலித்தொகை பாடல் விவரிக்கின்றது என்றார்.

பழந்தமிழ் நூலான மலைபடுகடாம் நூலிலும், பட்டினப்பாலையிலும், சிலப்பதிகாரத்திலும் ஏறு தழுவுதல் பற்றிய பல குறிப்புகள் உள்ளன.

தமிழர்கள் பலவகை மாடுகளை அறிந்தவர்களாக இருந்தனர்.
கருப்புக் காளைநின்று குத்திக் காளை, பில்லைக் காளை,
காராம் பசுபுள்ளி மாடு,
குள்ளிமாடு , மயிலைக் காளை என பல வகையான மாடுகள் இருந்தன.

அதேபோல் ஏறு தழுவுதல் நடைபெறும் போது காளைகளை பற்றிய செய்தியை பறையறைந்து தெரிவித்தனர்.

வெள்ளை காளையை அடக்கியவன் முள் போல் பல்லழகு கொண்டவளை திருமணம் செய்யலாம். காரிக்காளையின் சினத்துக்கு அஞ்சாமல் அடக்கியவன் ஒளி மிக்கவளின் வாரி முடித்த கூந்தலில் உறங்கலாம் என்று தெரிவித்துள்ளனர். இதன் மூலம் ஏறு தழுவுதல் நிகழ்ச்சியில் காளையை அடக்கியவர்களுக்கு பெண்ணை திருமணம் செய்து கொடுத்ததை இலக்கியங்கள் பதிவு செய்துள்ளதாகவும் கூறினார்.



ஏறுதழுவுதல் விழா

அந்த காலம் முதல் பல நூறு ஆண்டுகளாக பல்வேறு அரசியல் சூழல்களையும் தாண்டி தொடர்ந்து தற்காலத்திலும் தமிழ் மக்களின் கூட்டுணர்வின் எழுச்சியின் குறியீடாக ஏறு தழுவுதல் இன்னமும் நடைபெற்று வருகிறது. இது அனைவரையும் பெருமைப்படுத்தும் விழாவாகும். காளையை அறிமுகம் செய்யும்போது அந்த காளையின் உரிமையாளரின் பெயர், ஊரின் பெயர் அறிவிக்கப்படும். அதைப்போலவே காளையை அடக்கி வெற்றி பெறும் இளைஞரின் பெயரும் அவரின் ஊர் பெயரோடு சேர்த்து சொல்லப்படும் எனவே இது ஒரு பெருமைப்படுத்தும் விழாவாகவே பார்க்கப்படுகிறது.

இலக்கியங்கள் மட்டும் அல்லாது பாறை ஓவியங்கள் மூலமாகவும் காளைகள், மாடுகள் பற்றிய ஓவியங்கள் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் காணக் கிடைக்கின்றன .

கூரிய கொம்புகளும், சிலிர்த்த திமில்களும் கொண்ட மூன்று எருதுகளை பலர் கூடி விரட்டுவது போன்ற பண்டைய கால ஓவியம் நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே உள்ள கருக்கையூரில் காணப்படுகிறது.

திமிலுடன் கூடிய காளையை ஒருவர் அடக்க முயல்வது போன்ற ஓவியம் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே கல்லூத்து மேட்டுப்பட்டியில் கண்டறியப்பட்டது. தேனி மாவட்டம் மயிலாடும்பாறை அருகே சித்திரக்கல் புடவு என்ற இடத்தில் திமிலுடன் கூடிய பாறை ஓவியமும் கண்டறியப்பட்டுள்ளது. அதேபோல் கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலையில் மாடுகள் கோட்டோவியம் கண்டறியப்பட்டுள்ளது இன்று ஓவிய சான்றுகள் குறித்தும் கூறினார்.

1956-ல் தாய்க்குப் பின் தாரம், 1959 -வீரபாண்டிய கட்டபொம்மன் 1980- முரட்டுக்காளை, 1983- மண்வாசனை, 2004-விருமாண்டி, 2012- அரவாண் என்று பல திரைப்படங்கள் வெளிவந்துள்ளன.

ஜல்லிக்கட்டு

நடுகல்லில் ஏறு தழுவுதல்

கிருஷ்ணகிரி மாவட்டம் அகரம் கிராமத்தில் தென் பெண்ணை ஆற்றங்கரையோரம் உள்ள விவசாய நிலத்தில் சுமார் 300 ஆண்டுகள் பழமையான நடுகல் கண்டெடுக்கப்பட்டது.

இதில் காளையானது முன்னங்காலை தூக்கி ஓடுவது போல காட்டப்பட்டுள்ளது. அதற்குப் பின்னால் அக்காளையை அடக்க முற்படும் வீரன் காளையின் திமிலை இறுகப் பற்றிக்கொண்டு காளையின் முன்னங்காலில் தனது கால்களை

பின்னிக்கொண்டு தொங்குகிறான். இதனால் காளையின் நாக்கு வாய்க்கு வெளியே தொங்குகிறது. ஏறு தழுவுதல் என்னும் சொல்லுக்கு ஏற்ப இந்த நடுகல் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது தனிச்சிறப்பாகும்.

இதேபோல் ஏறுதழுவுதல் குறித்த நடுகல் திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் அருகே ஆதமங்கலம் புதூர் அருகே கண்டெடுக்கப்பட்டதையும் தெரிவித்தார்.

ஜல்லிக்கட்டு அல்லது ஏறு தழுவுதல்

சல்லி என்பதற்கு பணம் என்று பொருள், காளையின் கொம்பில் பணமுடிப்பை கட்டி வைத்து, அதன்பின் காளைகளை அடக்கும் மாடுபிடி வீரர்கள், மாட்டினை அடக்கி அந்த பணமுடிப்பை கைப்பற்றியதால் இவ்வீர விளையாட்டிற்கு "ஜல்லிக்கட்டு" எனும் இப்பெயர் வழங்கப்பட்டு , அது இன்றளவும் தொடர்கிறது.

இந்த ஜல்லிக்கட்டானது இலக்கியங்களில் ஏறுதழுவல் என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ளது என்றார்.

பாண்டியருக்கு மீனும், சேரருக்கு வில்லும், சோழருக்கு புலியும், சாளுக்கியருக்கு பன்றியும் இலச்சினையாகத் திகழ்ந்தது போன்று, பல்லவருக்கு நந்தி (காளை உருவம்) இலச்சினையாகத் திகழ்ந்தது.

பல்லவர்கள் ஆட்சி பொ.ஆ. 4 -ஆம் நூற்றாண்டு முதல் தென்னிந்தியாவில் தொடங்கப்பட்டது. தமிழ் நாட்டில் இவர்களது ஆட்சி பொ.ஆ. 6 ஆம் நூற்றாண்டு முதல் சிம்மவிஷ்ணு காலந்தொட்டு தொடங்கியது.

பல்லவர் காசுகளில் அவர்களது குலச்சின்னமான திமிலுடன் கூடிய காளை உருவமே பெரும்பாலும் இடம்பெறுகின்றது. ஒரு சில காசுகளில் சிங்க உருவம் உள்ளது.

ஸ்ரீவஸ்தா, பிறை, சங்கு, பாம்புடன் காளை உருவமுள்ள காசுகள் இரண்டாம் சிம்மவர்மன் காலத்தில் தொடங்கப் பெற்று பின்னர் வந்த மன்னர்களாலும் பயன்படுத்தப்பட்டன என்றார்.

அதேபோல் சம்புவராயர்களின்14- ஆம் நூற்றாண்டு ஆட்சி காலத்தில் அவர்கள் குலச்சின்னமான காளை ஒரு புறம் பொறிக்கப்பட்ட செப்பு காசுகள் பயன்படுத்தப்பட்டன என்றும் தெரிவித்தார்.

ஏறு தழுவுதலின் வரலாறு

சங்க கால சோழர் காசில் என்ன இருக்கிறது?

சங்க காலச் சேரர் தலைநகரான கரூரில், அமராவதி ஆற்றுப்படுகையில், சங்க காலச் சோழர் காசு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. காசின் முன்பக்கத்தில் காளை உருவம் நின்ற நிலையில் காணப்படுகிறது. காளையின் கீழே நந்திப் பாதச் சின்னங்கள் காணப்படுகின்றன. பின்பக்கத்தில் புலி உருவம் கோடுகளினால் வரையப்பட்டுள்ளது. காசின் வடிவம் நீள் சதுர வடிவத்தில் அமைந்துள்ளது.

காசில் உள்ள காளை, அச்சுக் குத்திய வெள்ளி முத்திரை நாணயங்களில் உள்ள காளையைப் போலவே உள்ளது என்று கூறினார். இதுபோல் பல்லவர்கள், சம்புவராயர்கள், சோழர்கள் காலகட்டத்திலும் மாடுகளின் முக்கியத்துவம் உணர்ந்து நாணயங்களில் அதன் உருவங்கள் குறித்து பயன்படுத்தப்பட்டன என்று தெரிவித்தார்.

பொம்மை காளை ஆட்டம்

காளை மாட்டின் பொம்மைக் கூட்டிற்குள் நுழைந்துகொண்டு நையாண்டிமேளம் இசைக்கேற்ப ஆடப்படுவது காளை ஆட்டம் ஆகும். சல்லிக்கட்டில் இடம்பெறும் காளையை அடக்குதல் என்ற நிகழ்வு காளை ஆட்டத்தில் போலச் செய்தலாக நிகழ்த்திக் காட்டப்படும். கரகாட்டத்தின் துணைநிலை ஆட்டமாக இன்றும் கிராமங்களில் நடைபெறும் திருவிழா காலங்களில் ஆடப்பட்டுவருகிறது என்று கூறி முடித்தார் பேராசிரியர் ரமேஷ்.

தொடர்ந்து எழுத்தாளரும், திருச்சி ஆற்றுப்படை மையத்தின் நிர்வாகியுமான பார்த்திபன் நடுக்கலில் ஏறுதழுவுதல் குறித்து விவரித்தார்.

ஜல்லிகட்டு நிகழ்வு வெறும் வீரம் தொடர்பானது மட்டுமல்ல, ஒரு காளையை தழுவும்போது, அந்த காளை மாடு பிடி வீரர்களின் எதிர்ப்பை தாண்டி ஒரு 50 அடி துாரம் சென்றுவிட்டால் அந்த காளைக்கு வீரியம் அதிகம் என்று கருதி அதை இனப்பெருக்கத்திற்கு அனுப்புவார்கள். பிடிபட்ட காளைகளை விவசாயத்துக்கு பயன்படுத்திக் கொள்வார்கள் என்றார்.

ஏறு தழுவுதலில் இறந்தவர்களுக்கு நடுகல்

சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் பெத்தநாயக்கன் பாளையத்தில் ஏறுதழுவல் குறித்த வீரக்கல் இருந்தது.





தற்பொழுது அது சேலம் அருங்காட்சியகத்தில் உள்ளது .

அதில் மாட்டின் உருவமும் அருகில் வீரனும் இருப்பார்கள் அருகிலேயே அது பற்றிய விவரமும் உள்ளது. கோவூர் சங்கன்என்பவர் எருதுவிளையாட்டில் இறந்துவிடுகிறார். அவருக்கு எடுக்கப்பட்ட நடுகல்லாகும்.

இது 17 ஆம் நூற்றாண்டை சேர்ந்ததாக கருதப்படுகிறது.

கருவந்துறை அதாவது கல்வராயன் மலை கருமந்துறை என்னும் ஊரில் கோவூர் சங்கன் என்பவர் எருது விளையாடி அதில் இறந்து விடுகிறார். அவனது மகன் தனது தந்தைக்கு எடுத்த நடுகல்லாக "சங்கன் மகன் பெரிய பயலு நட்ட கல்லு" என்று கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது.

அதேபோல் துறையூர் வட்டம் நாகலாபுரம் கிராமத்தில் தொன்மையான நடுகல் கண்டெடுக்கப்பட்டது. இது 17 -ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்,

இது ஏறுதழுவல் போல அல்லாமல் மஞ்சு விரட்டு அல்லது எருதாட்டம் என்று சொல்லக்கூடிய விளையாட்டில் வீரமரணம் அடைந்த வீரனுக்காய் எழுப்பப்பட்டுள்ள நடுகல் ஆகும்.

இதில் காளையின் இருபுறமும் வீரர்கள் கயிறு கட்டி இழுத்து வருவது போலவும், அதனை இவ்விளையாட்டில் உயிர் நீத்த வீரன் அதனை தழுவுவது போலவும் வீரன் அருகில் ஒரு பெண் நிற்பது போலவும், இருபுறமும் சூரியன் சந்திரன் ஆகிய சின்னங்களோடும் இந்த நடுகல் காணப்படுகிறது என்று விரிவாக கூறினார்.

"விருந்தின் மன்னர் அருங்கலம் தெறுப்ப,
வேந்தனும் வெம்பகை தணிந்தனன்" (அகநானூறு:54)

விருந்து எனும் சொல்லிற்கு புதுமை எனும் ஒருபொருளை தொல்காப்பியம் தருகிறது.

பண்டைய தமிழரின் பண்பாட்டில் தலையாய் இருந்த பண்பு விருந்தோம்பல் ஆகும். "பண்டமாற்று முறை வழக்கிருந்த அக்காலத்தில் போக்குவரத்து வசதிகளும் இல்லாத சூழலில். இரவலர்கள் மட்டுமின்றி ஏனையோரும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மக்கள் நடந்து செல்ல வேண்டியிருந்தது.

உணவு விடுதிகள் இல்லாத காரணத்தினால் உண்டிக்கும் உறையுளுக்கும் அனைவரும் செல்லும் ஊர்களையே நம்ப வேண்டியிருந்தது. ஆகவே, புதிதாக வருவோர்க்குப் பசிக்கு உணவளிக்க வேண்டிய நிலை இருந்தமையால் விருந்தோம்பல் பண்பாடு தமிழகத்து இல்லங்களில் உருவாயிற்று.

'விருந்தோம்பல்' என்பது தம் இல்லம் தேடி வரும் புதியவர்களை இன்முகத்துடன் வரவேற்று இனிய மொழி கூறி உபசரித்து உணவளிக்கும் உயரிய பண்பாகும்.

இதை நீலகிரி மலைப்பகுதியின் உயர்ந்த இடத்தில் உள்ள கறிக்கையூரில் பாறை ஓவியம் எடுத்துக்காட்டுகிறது.

அதில் தம் கைப்பிடித்து புதிதாய் வருபவரை மகிழ்வாய் வரவேற்று மகிழ்கிறான் ஆதிக்குடி குடிமகன் என்று கூறினார்.

ஏறு தழுவுதல் மாட்டுப்பொங்கல் காணும் பொங்கல் என்று அழைக்கப்படும் தமிழர்களின் பாரம்பரிய விழா பல ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்களின் வாழ்வியலோடு இணைந்தது அதற்கு பல்வேறு ஆதாரங்களும் உள்ளது என்றும் கூறினார்.

நன்றி: மாயகிருஷ்ணன்.க. - தமிழ் பிபிசி

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு
437.345.4203

# ஈழத்தமிழர்களை அடிமைப்படுத்திய 76 வது ஆண்டு

# பெப். 04. 1948 – பெப். 04.2024




ஆதி கால குடியிருப்புகள்




ஐரோப்பியர் வருகையின் போது இருந்த அரசுகளும் தமிழர் பிரதேசங்களும்





ஐரோப்பியர் ஈழத்தீவுக்கு வருகை தந்தபோது தமிழர் செறிவாக வாழ்ந்த விரதேசம்

## தமிழ் வன்னிமைகள்

1. பெரும் காற்றுப்பற்று
2. முசலிப்பற்று
3. மேற்குமூலை
4. சின்னச் செட்டிகுளம்
5. நடுச் செட்டிகுளம்
6. கிழக்கு மூலை தெற்கு
7. கிழக்கு மூலை வடக்கு
8. மேல் பற்று வடக்கு
9. மேல் பற்று கிழக்கு
10. மேல் பற்று தெற்கு
11. பனங்காமம்
12. உடையாவூர் (உடையார்கட்டு)
13. துணுக்காய்
14. கரைச்சி
15. புதுக்குடியிருப்பு
16. முள்ளியவளை
17. கரிக்கட்டு மூலை வடக்கு
18. கரிக்கட்டு மூலை தெற்கு
19. மகாவன்னி
20. திருகோணமலை
21. கொட்டியாரம்
22. கட்டுக்குளம்
23. மட்டக்களப்பு
24. மண்முனை
25. பழுகாமம்
26. போரதீவு
27. பாணமை
28. யாலா
29. புத்தளம்




ஆங்கிலேயர் தமிழர் தாயகத்தை 1833 இல் சிறீலங்காவுடன் இணைப்பதற்கு முன் இருந்த மாகாண அமைப்பு




ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மாகாணப் பிரிவினை என்ற பெயரில் தமிழர் தாயகம் சிதைக்கப்பட்டபின் 1889 இல் இருந்த மாகாண அமைப்பு.




1889 ஆம் ஆண்டின் பின் தமிழர் நிலம் சிங்களக் குடியேற்றம்

# ஈழத்தமிழர்களை அடிமைப்படுத்திய 76 வது ஆண்டு பெப். 04.2024



1948 பெப். 04
அதிகாரம் கைமாறல்



"அந்நிய ஆட்சியால் பிணைக்கப்பட்ட சிங்கள நாட்டினமும், தமிழ் நாட்டினமும் இன்று வரை பிணைக்கப்பட்டுள்ளமையால் சுதந்திர இலங்கையின் அரசுகள் அனைத்தும் சிங்கள நாட்டினத்தை ஆக்கிரமிப்பு நாட்டினமாக ஊக்குவித்து வளர்ந்ததன் பயனாக இப்போதுள்ள அரசியல் யாப்பு ஒருதலைப் பட்சமாகத் தீர்மானிக்கப்பட்டு தமிழ்நாட்டினம் ஆளப்படும் நாட்டினமாக ஆக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறை இடைத் தேர்தல் மக்களால் வழங்கப்பட்ட தீர்ப்பை விடுதலை பெற்ற இறைமை உடைய மதச் சார்பற்ற சமதர்ம நாடான தமிழீழத்தை அமைப்பதற்குரிய ஆற்றல் உரிமையாக ஏற்றுக்கொள்வதென இப் பேரவை தீர்மானிக்கின்றது."

– 1976 பெப். 04 இல் சிறீலங்கா பாராளுமன்றத்தில்
திரு. எஸ். ஜே.வி. செல்வநாயகம் அவர்கள்
கொண்டவந்த தமிழீழப் பிரேரணை.



சிங்கள இனவெறித்தாக்குதல்
உயிருக்கு
மன்றாடும் அரும்புகள்



சிங்கள இனவெறி
இரத்த சாட்சி



நாங்கள் சமாதானத்தின் எதிரிகளோ அதற்கு விரோதமானவர்களோ அல்ல, நாங்கள் விரும்பும் நீதியானதும் நேர்மையானதுமான சமாதானமே. சிறீலங்காவில் ஆட்சிக்கு வந்த எந்த அரசும் இத்தகைய சமாதானத்தை தமிழ் மக்கள் கௌரவத்தோடும் சுய மரியாதையோடும் வாழ்வதற்குரிய சமாதானத்தை வழங்குவதற்குத் தயாராக இருக்கவில்லை. நாங்கள் விரும்புவது தமிழ் மக்களை எல்லா விதத்திலும் மாற்றவர்களுக்கு சமானமானவர்களாக வாழவைக்க கூடிய நீதியான சமாதானமே.

–தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.



பண்டா – செல்வா
ஒப்பந்தம்



சிங்கள இனவெறி
இரத்த சாட்சி
தமிழ் குழந்தைகள்



1961 இல் யாழ்ப்பாணத்தில்
நடந்த சத்தியாக்கிரகம்



தேசியத் தலைவரின்
அரவணைப்பில்
தமிழீழக் குழந்தைகள்



தேசியத்தலைவா
மேதகு
வே. பிரபாகரன்
பாதையில் தமிழீழ
மக்கள்



தமிழீழத்தை மீட்க களம்
புகுந்த தமிழர் படை




# பெப்.04.2024 (Feb.04.2024)

## தமிழீழத்தின் கரிநாள், சிறீலங்காவின் சுதந்திர நாள்

## SRI LANKA'S INDEPENDENCE DAY, A BLACK DAY FOR THAMILEELAM

சிறீலங்கா சிங்கள அரசின் இனப்படுகொலை மற்றும் அடக்குமுறையின் 76 ஆண்டுகளைக் குறிக்கும், ஈழத்தமிழர் தேசத்திற்கு இந்த நாள் ஒரு கருப்பு நாளாகும்.

The day was a black day for the Eelam Thamil Nation that marked 76 years of Genocide & Oppression at the hands of the Sri Lankan Sinhala State.



**தமிழீழ மண்ணில் சிங்கள ஆக்கிரமிப்பு படைகள் இருக்கும் வரை எமது தாய் நிலம் சுடுகாடு...**

இலங்கைத்தீவின்
வடக்கு, கிழக்கு பகுதி
தமிழர்களின் மரபு வழித் தாயகம்.
தமிழ் மக்கள் பூர்வகுடித் தேசிய இனம்.
தமிழ் மக்களுக்கு
சுயநிர்ணய உரிமை உண்டு.


Total Wipeout
147, 000 Killed
in 8 Months
- Largest Massacre
of 21st Century


SPEAK UP
STOP TAMIL GENOCIDE


February 04
Black Day
for
Thamils
DISAPPEARANCE
RAPES
CHILDREN
MEDICINE
LIFE
PARA
MILITARY
AID
DYING
KILLED
OPPRESSION
JUSTICE
PEACE
AIRSTRIKE
WHITE VAN
SRI LANKA
EDUCATION
INNOCENT
FREEDOM
DO YOU
BLOOD
EELAM
APARTHEID
DEAD
FOOD
HUMANITY
MASSACRED
MURDER
MILITARY
LOSS
STOP
PRISON
BOMBINGS
DESTRUCTION
WHO CARES
STARVATION
MASSACRE
WOMEN
RIGHTS
PEOPLE
PROTEST
HUMAN
WOLRD
RELIGION
COLONIZTION
RAIDS
JOBS
REFUGEES
LANGUAGE
VIOLATION
TAMILEELAM
GENOCIDE

# சிறீமா – சாத்திரி ஒப்பந்தம்!

சிறீமா – சாஸ்திரி ஒப்பந்தம் என்பது, இலங்கையில் நாடற்றவர்களாக இருந்த 975,000 இந்திய வம்சாவளித் தமிழர்களின் எதிர் காலம் தொடர்பாக, அப்போதைய இலங்கைப் பிரதமராக இருந்த சிறீமாவோ பண்டாரநாயக்காவுக்கும், இந்தியப் பிரதமரான லால் பகதூர் சாஸ்திரிக்கும் இடையில் 1964 ஆம் ஆண்டில் அக்டோபர் 30 இல் கையெழுத்தான ஒப்பந்தத்தைக் குறிக்கும். இந்த ஒப்பந்தத்தின்படி மேற் குறிப்பிட்டவர்களில் 525,000 பேரை இந்தியா ஏற்றுக்கொள்வதெனவும், 300,000 பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்குவதெனவும் முடிவானது. மீதி 150,000 பேர் விடுபட்டுப் போயினர். 1967 முதல் அமலாகத் தொடங்கிய இந்த ஒப்பந்தம் அம்மக்களை இந்தியக் குடியுரிமை பெறுவோர், இலங்கை குடியுரிமை பெறுவோர், நாடற்றவர்கள் என மூன்று கூறாகபிரித்தது.



### பிரித்தானிய இலங்கை

I am too far away from you by body,but I am too near to your heart.


Never belieive the Sinhala chauvanist leaders,who never change the hearts and minds towards justice and peace.
We continuesly ask and fight for our resonable rights before the world community.
There is a Bible Saying- 'Ask it will be given to you and knock, the door will be opened.
As so-one day the world's heart,mind and the soul will wake up.
That day we liberate ourself,our homeland and enter into a new era.
With much hope and confidence......
yours,
murukathasan

# உலக நீதி; காசாவும் முள்ளிவாய்க்காலும்!



20.01.2024

“அனைத்துலக நீதியின் மாண்பு தராசில் தொங்கிக்கொண்டிருக்கிறது” இவ்வாறு அனைத்துலக நீதிமன்றத்தில் வைத்துக் கூறியிருப்பவர் தென்னாபிரிக்காவின் பிரதிநிதி. காசாவில் இசுரவேல் புரியும் இனப்படுகொலைக்கு எதிராகத் தென்னாபிரிக்கா உலக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறது. அந்த வழக்கின் தொடக்கத்தில் மேற்கண்டவாறு கூறப்பட்டிருக்கிறது. உலக நீதி மட்டுமல்ல மேற்கு நாடுகளின் அரசியல் அறமும் கூட தராசில் வைக்கப்பட்டிருக்கிறது. முழு உலகத்துக்கும் ஜனநாயகம் மனித உரிமைகள் போன்றவற்றின் மாண்பைக் குறித்து வகுப்பெடுக்கும் மேற்கு நாடுகளின் அரசியல் அறத்தை மிக இளைய ஜனநாயகங்களில் ஒன்று ஆகிய தென்னாபிரிக்கா கேள்விக்கு உள்ளாக்கியிருக்கிறது. காசாவில் இனப்படுகொலை நடந்து கொண்டிருக்கும் பொழுதே, ரத்தம் காய முன்பே, தென்னாபிரிக்கா வழக்குத் தொடுத்திருக்கின்றது. அதுபோல ஏற்கனவே மற்றொரு ஆபிரிக்க நாடாகிய காம்பியா மியான்மரில் ரோஹிங்கா முஸ்லிம்களுக்காக நீதி கேட்டு 2019 ஆம் ஆண்டு அனைத்துலக நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்தது.

அனைத்துலக நீதிமன்றம் எனப்படுவது ஐநாவின் ஆறு பிரதான உறுப்புகளில் ஒன்று. ஐநாவின் நீதி பரிபாலனக் கட்டமைப்பு அது. ஐநாவின் ஏனைய உறுப்புக்கள் நியூயோர்க்கில் உள்ளன. ஆனால் அனைத்துலக நீதிமன்றம் நெதர்லாந்தின் தலைநகரமான ஹேக்கில் அமைந்துள்ளது. ஐநாவின் சுயாதீனமான உறுப்பாக அது கருதப்பட்டாலும் அதன் தீர்ப்புக்களின் அடுத்தடுத்த கட்டங்களைத் தீர்மானிப்பது ஐநா பொதுச் சபையும் பாதுகாப்புச் சபையுந்தான். பாதுகாப்புச் சபையில் சக்திமிக்க நாடுகளுக்கு வீற்ரோ அதிகாரம் உண்டு. எனவே அங்கு விவாதிக்கப்படும் தீர்ப்புகளின் மீது சக்தி மிக்க நாடுகள் வீற்ரோ வாக்கைப் பிரயோகிக்க முடியும். ரோஹியங்கா முஸ்லிம்களின் விடயத்தில் மியான்மருக்குச் சார்பாக சீனா அவ்வாறு வீற்ரோ வாக்கைப் பிரயோகித்திருக்கிறது. அதுபோலவே இசுரவேலுக்கு எதிரான ஐநா தீர்மானங்களின் போதும் அமெரிக்கா இசுரவேலுக்கு ஆதரவாக தன்னுடைய வீற்ரோ அதிகாரத்தைப் பயன்படுத்தியிருக்கிறது. ஐநாவின் வரலாற்றிலேயே அமெரிக்கா அதிகம் எண்ணிக்கையிலான வீற்ரோ வாக்குகளைப் பிரயோகித்தது இசுரவேலுக்கு ஆதரவாகத்தான் என்று ஒரு கணக்கு உண்டு.

எனவே ஐநாவின் உறுப்புக்களில் ஒன்று என்ற அடிப்படையில் அனைத்துலக நீதிமன்றம் ஐநாவுக்குள்ள எல்லா வரையறைகளையும் பலவீனங்களையும் இயலாமைகளையும் கொண்டிருக்கும். இந்த விளக்கத்தின் பின்னணியில் வைத்தே, குறிப்பாக மியான்மருக்கு எதிராக கம்பியா தொடுத்த வழக்கின் கடந்த நான்கு ஆண்டுகால அனுபவத்தின் பின்னணியில் வைத்தே தென்னாபிரிக்கா இசுரவேலுக்கு எதிராக தொடுத்திருக்கும் வழக்கையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ரோஹியங்கா முஸ்லிம்களுக்கு கடந்த நான்கு ஆண்டுகளாக பொருத்தமான நீதி வழங்கப்படவில்லை. ஐநா உருவாக்கப்பட்டதிலிருந்து அது பெருமளவுக்கு இனப்படுகொலைகளின் பார்வையாளராகத்தான் இருந்து வந்துள்ளது. ஐநாவின் இயலாமையை, கையாலாகத்தனத்தை நிரூபிக்கும் ஆகப் பிந்திய இனப்படுகொலைக் களந்தான் காசா. தென்னாபிரிக்கா தொடுத்திருக்கும் வழக்கின் மூலம் பலஸ்தீனர்களுக்கு நீதி கிடைக்குமா? அல்லது அந்த வழக்கு ஐநாவின் கையாலாகத்தனத்தை மீண்டும் ஒரு தடவை நிரூபிக்குமா ?

ஏனெனில், உலகில் தூய நீதி என்று எதுவும் கிடையாது இருப்பதெல்லாம் அரசியல் நீதிதான். நீதிபதிகள் தனிப்பட்ட முறையில் நீதியாக நடக்கலாம். ஆனால் அந்த நீதியை நடைமுறைப்படுத்தப் போவது அரசுகள்தான். அரசுகள், நலன்களின் அடிப்படையில்தான் முடிவுகளை எடுக்கும். அரசியலில் அறம் நீதி என்பவையெல்லாம் கிடையாது. நிலையான இராணுவப் பொருளாதார நலன்கள்தான் உண்டு. அது சார்ந்த முடிவுகள்தான் உண்டு. அதனால்தான் அமெரிக்க அறிஞராகிய நோஆம் சொம்ஸ்கி பின்வருமாறு சொன்னார். அரசியல் அறத்தைக் கடைப்பிடிக்கும் காலம் வரும்வரை இனப்படுகொலை என்ற சொல்லை அகராதியில் இருந்து எடுத்துவிடுவதே நல்லது என்று.



தென்னாபிரிக்கா தொடுத்திருக்கும் வழக்கு இசுரவேலுக்கு மட்டும் எதிரானது அல்ல. இசுரவேலை ஆதரிக்கும் எல்லா மேற்கு நாடுகளுக்கும் எதிரானதுதான். அனைத்துலக நீதிமன்றத்தை ஸ்தாபிக்கும்பொழுது அதில் முக்கிய பங்களிப்பை நல்கியது அமெரிக்காவும் பிரித்தானியாவுந்தான். அதே நாடுகள் இப்பொழுது தென்னாபிரிக்காவின் நகர்வை ஆதரிக்கவில்லை. எந்த ஒரு மேற்கத்திய நாடும் இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் அனைத்துலக நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா தொடுத்திருக்கும் வழக்கை ஆதரிக்கவில்லை.

ஆனால் அதே மேற்கு நாடுகள்தான் ஐநா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக தீர்மானங்களை நிறைவேற்றி வருகின்றன. இதை எப்படி விளங்கிக் கொள்வது?

இசுரவேலுக்கு எதிராக வழக்குத் தொடுத்திருக்கும் தென்னாபிரிக்காவும் மியான்மருக்கு எதிராக வழக்குத் தொடுத்திருக்கும் காம்பியாவும் ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ளன. இந்த நாடுகள் எவையும் உக்ரைனில் ரஷ்யா முன்னெடுக்கும் ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்து வழக்கு தொடுக்கவில்லை. அது மேற்கு நாடுகளுக்கு எதிரான ஆபிரிக்க நிலைப்பாடு. ரஷ்யா ஆபிரிக்க கண்டத்தை அதிகம் அரவணைத்து வைத்திருக்கின்றது. அங்குள்ள முன்னால் பிரெஞ்சுக் கொலனிகளில் நடக்கும் இராணுவச் சதிப் புரட்சிகளின் பின்னணியில் ரஷ்சியாவின் மறைகரங்கள் இருப்பதாக ஊகங்கள் உண்டு.

அதேசமயம் காசாவில் நடப்பது இனப்படுகொலை என்று சொல்லாத மேக்கு நாடுகள், அதற்கு எதிராக வழக்கு தொடுத்திருக்கும்



தென்னாபிரிக்காவை ஆதரிக்காத மேற்கு நாடுகள், ரஷ்ய-உக்ரைன் போரில் ரஷ்யா இனப்படுகொலை செய்வதாகக் குற்றம் சாட்டின. போர் தொடங்கிய குறுகிய காலத்துக்குள்ளேயே அமெரிக்கா அதை இனப்படுகொலை என்று சொன்னது. அது ரஷ்யாவுக்கு எதிரான அமெரிக்காவின் நிலைப்பாடு.






பேரரசுகள் மட்டுமல்ல சிறிய அரசுகளும் கூட அறம் சார்ந்து அரசியல் முடிவுகளை எடுப்பதில்லை. உதாரணமாக தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாகிய பொழுது, பலஸ்தீனம் தமிழ் மக்களுடன் நிற்கவில்லை. பாலஸ்தீன அதிகார சபையானது மஹிந்த ராஜபக்சவின் நண்பனாகத்தான் காணப்படுகின்றது. 2009க்கு பின்னர் 2014ஆம் ஆண்டு பாலஸ்தீனம் மகிந்தவிற்கு அந்த நாட்டின் உயர் விருதாகிய "பலஸ்தீன நட்சத்திரம்" என்ற விருதை வழங்கியது. அங்குள்ள வீதி ஒன்றுக்கும் அவருடைய பெயரைச் சூட்டியது. அதாவது ஈழத் தமிழர்களால் இனப்படுகொலை தெரிந்தவர் என்று குற்றச் சாட்டப்படும் ஒருவருக்கு பலஸ்தீனம் நாட்டின் உயர் விருதை வழங்கியிருக்கிறது. இதை எப்படி விளங்கிக் கொள்வது?

அப்படித்தான் கியூபாவும். ஒரு காலம் போராடும் இயக்கங்களுக்கு அது முன்மாதிரியாக இருந்தது. ஈழப் போராட்ட இயக்கங்கள் சில தமது பொறுப்பாளர்களுக்கு கஸ்ட்ரோ என்று பெயர் வைத்தன. ஆனால் 2009க்கு முன்னரும் பின்னரும் குறிப்பாக ஐநாவில் கியூபா யாருடைய பக்கம் நிற்கின்றது? ஐநா தீர்மானங்களின் போது கியூபா அரசாங்கத்திற்கு ஆதரவாகத்தான் வாக்களித்து வருகின்றது. இதை எப்படி விளங்கிக் கொள்வது?

அதாவது மேற்கண்டவைகளைத் தொகுத்துப் பார்க்கும்போது தெளிவாக தெரிவது என்னவென்றால், சக்தி மிக்க நாடுகளோ அல்லது சிறிய நாடுகளோ எவையானாலும் அறத்தின் பாற்பட்டோ நீதியின் பாற்பட்டோ முடிவுகளை எடுப்பது குறைவு. பெருமளவுக்கு நிலையான அரசியல் நலன்களின் அடிப்படையில் தான் அவை முடிவுகளை எடுக்கின்றன. இப்படிப்பட்டதொரு குரூர உலகில் பலஸ்தீனர்களுக்கு அனைத்துலகை நீதிமன்றம் எப்படிப்பட்ட ஒரு நீதியை வழங்கும்?

தென்னாபிரிக்காவின் நகர்வை, ஆபிரிக்கக் கண்டத்தில் தற்பொழுது மேலோங்கிக் காணப்படும் மேற்கத்திய நாடுகளுக்கு எதிரான உணர்வுகளின் பிரதிபலிப்பாகவும் விளங்கிக் கொள்ளலாம். எனினும் எல்லாவிதமான வாதப்பிரதிவாதங்களுக்கும் அப்பால் அது இனப்படுகொலைக்கு உள்ளாக்கி கொண்டிருக்கும் மக்களுக்கு நம்பிக்கையூட்டுவது. தாங்கள் தனித்து விடப்படவில்லை என்ற உணர்வை அது அவர்களுக்கு கொடுக்கும். இந்த விடயத்தில் பலஸ்தீனர்கள் ஈழத் தமிழர்களை விடவும் பாக்கியசாலிகள் என்று கூறலாமா?




ஏனெனில், இறுதிக்கட்டப் போரில் வன்னி கிழக்கில் தமிழ் மக்கள் சுற்றி வளைக்கப்பட்டிருந்தார்கள். யாரும் உதவிக்கு வரவில்லை. எந்த ஒரு நாடும் உத்தியோகபூர்வமாக அவர்களை ஆதரிக்கவில்லை. தென்னாபிரிக்கா ஆதரிப்பதாகக் கூறப்பட்டாலும் நடைமுறையில் எதுவும் நடக்கவில்லை. தனது சேவைக் காலத்தில் தான் கண்ட மிக மோசமான நரகம் அதுவென்று அப்பொழுது ஐ.சி.ஆர்.சியின் தென்னாசியாவுக்குப் பொறுப்பான அதிகாரி கூறினார். உதவிக்கு யாரும் வராத அந்த ஒடுங்கிய கடற்கரையில் தனித்து விடப்பட்டிருந்த தமிழ் மக்களுக்கு எதிராக உலகின் பெரும்பாலான நாடுகள் ஒன்றாக நின்றன. அல்லது ஈழத் தமிழர்களுக்கு எதிரான தரப்புக்களோடு நேரடியாகவோ மறைமுகமாகவோ கூட்டுச் சேர்ந்திருந்தன. ஐநா போரில் நேரடியாகத் தலையிடாமல் விட்டதன் மூலம் இனப்படுகொலையை மறைமுகமாக அங்கீகரித்தது.

இந்தியாவும் சீனாவும் பிராந்தியத்தில் ஒன்றுக்கொன்று நட்பு நாடுகள் அல்ல. ஆனால் இரண்டு நாடுகளுமே ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஒரே கோட்டில் நின்றன. இந்தியாவும் பாகிஸ்தானும் பிராந்தியத்தில் எதிரிகள். ஆனால் ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஒரே கோட்டில் நின்றன. சீனாவும் அமெரிக்காவும் உலக அளவில் நடப்பு நாடுகள் அல்ல. ஆனால் ஈழத் தமிழர்களுக்கு எதிராக இரண்டும் ஒன்றாக நின்றன. உலகில் பிராந்திய மட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் தங்களுக்கு இடையே பகைவர்களாகக் காணப்படும் நாடுகள் ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஒன்றாக நின்றன. அப்பொழுது எந்த ஒரு நாடும் அதை இனப்படுகொலை என்று கூறவில்லை. இப்பொழுதும் எத்தனை நாடுகள் கூறுகின்றன? அனைத்துலக நீதியின் மீது நம்பிக்கையிழந்த பின்னரும்கூட கடந்த 15 ஆண்டுகளாக விடாமல் போராடும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக வழக்குத் தொடுக்க இக்கொடிய உலகில் யாருண்டு?

நன்றி: நிலாந்தன்

# 15ம் ஆண்டு நினைவில்



பிறப்பு:
02.12.1982

தமிழீழ
மண்ணுக்காக:
12.02.2009

ஈகைப் பேரொளி

# முருகதாசன்

உன்னை எழுதவும் பாடவும் எமக்கிருக்கும்
வார்த்தைகளில் எதுவுமேயில்லை.
உன்னை வணங்குகிறோம்.
நீ
எரிந்தபொழுதினில் எம்நெஞ்சில்பட்ட
சுடுதழும்பை ஆறவிடாமல் வன்மம் வளர்ப்போம்.
காலம் எவ்வளவு கடந்தாலும் அனலாடிய உன்
ஆன்மத்தை, அதனிலும் உயர்ந்த உன் ஈகத்தை
எம்முள் நிரந்தரமாய் படிந்துவிட்ட காயத்தை
எதையுமே நாம் மறவோம்.
நீ நினைத்த விடுதலையை நாளைப்பொழுது
மீட்டுவரும். நம்பிக்கையோடு இரு.

# நெருக்கடிகளிலிருந்து இந்தியாவை மீட்ட தமிழர்கள்!

**- பழ. நெடுமாறன் -**

ஜனவரி 16, 2024

ஆற்காடு சகோதரர்கள் என அழைக்கப்பட்ட திரு. அ. இராமசாமி முதலியார் ளூ திரு. இலட்சுமணசாமி முதலியார் ஆகிய இரு சகோதரர்களும் இரட்டையர்களாவார்கள்.






இருவரும் தாங்கள் தேர்ந்தெடுத்தத் துறைகளில் உயர் நிலையை எட்டினார்கள். இராமசாமி முதலியார் சர்வதேசச் சட்டத்துறையில் உலகப் புகழ்பெற்ற அறிஞராகத் திகழ்ந்தார். இலட்சுமணசாமி முதலியார் மருத்துவத்துறையில் மிகச்சிறந்த வல்லுநராகத் திகழ்ந்தார்.

இருவரும் இந்தியாவில் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களாக விளங்கினார்கள். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் சுதந்திர ஆட்சியிலும் இருவரும் பல உயர் பதவிகளை வகித்தனர். அதைப்போலவே தமிழகச் சட்டமன்ற மேலவை, ஒன்றிய நாடாளுமன்ற மேலவை போன்றவற்றில் அங்கம் வகித்து அரசுக்குப் பல்வேறு அறிவுரைகளை வழங்கினார்கள்.

இந்த இரு சகோதரர்களும் காங்கிரசுக் கட்சியின் சிந்தனைப் பள்ளிக்கு நேர் எதிரான நீதிக்கட்சியின் சிந்தனைப் பள்ளியைச் சேர்ந்தவர்கள். ஆங்கிலேயர் ஆட்சியில் பல்வேறு முக்கியமான பொறுப்புகளை வகித்து அரசியலுக்கு அப்பாற்பட்டு நாட்டின் முன்னேற்றத்திற்கு அயராது பாடுபட்டவர்கள்.

இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த பிறகு 1945ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பேரவையை உருவாக்கிய உலக நாடுகளின் மாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதியாக கலந்துகொண்ட பெருமை இராமசாமி முதலியாருக்கு உண்டு. மேலும், ஐ.நா. பொருளாதார மற்றும் சமுதாயப் பேரவை அமைப்பின் (unesco) தலைவராக 1945-1947ஆம் ஆண்டுகளில் அ. இராமசாமி முதலியார் பதவி வகித்தார். அதே உலக அமைப்பின் தலைவராக அ. இலட்சுமணசாமி முதலியார் 1954-1956ஆம் ஆண்டுகளில் பதவி வகித்தார். மேலும், 1961ஆம் ஆண்டு உலக சுகாதார அமைப்பின் (WHO) தலைவராக அவர் திகழ்ந்தார். இங்ஙனம் உலக அமைப்புகளின் தலைவர் பொறுப்பை ஏற்று திறம்பட செயலாற்றி புகழ்பெற்ற இருவருமே தமிழர்கள் என்பது மட்டுமல்ல, இந்தியாவைச் சேர்ந்த வேறு எந்த மொழி பேசும் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்தப் பெருமை கிட்டியதில்லை.

சென்னை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக 1942ஆம் ஆண்டு முதல் 1969ஆம் ஆண்டு வரை 27 ஆண்டுகாலம் பதவி வகித்த பெருமை அ. இலட்சுமணசாமி முதலியாருக்கு மட்டுமே உண்டு. வேறு யாரும் இந்தியாவின் எந்த பல்கலைக் கழகத்திலும் இவ்வாறு தொடர்ந்து துணைவேந்தராக விளங்கியதில்லை. அதைப்போல திருவிதாங்கூர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக அ. இராமசாமி முதலியார் திகழ்ந்தார்.

1947ஆம் ஆண்டு ஆகசுடு 15ஆம் நாள் இந்தியா மற்றும் பாகித்தான் ஆகிய நாடுகள் ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றன. ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் இந்தியாவிலிருந்த 600க்கும் மேற்பட்ட சுதேச சமத்தானங்களை ஆண்ட மன்னர்கள் தங்களின் எதிர்காலம் குறித்து அவர்களே முடிவு செய்துகொள்ளலாம் என ஆங்கிலேயர் ஆட்சி அறிவித்துவிட்டு வெளியேறியது. திருவிதாங்கூரில் அப்போது திவானாக இருந்த சி.பி. இராமசாமி ஐயர் தங்களது சமத்தானம் இந்தியாவுடனோ அல்லது பாகித்தானுடனோ இணையாமல் சுதந்திர நாடாக விளங்கும் என அறிவித்தார். அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டார்.

திருவிதாங்கூருக்கு அருகே அரபிக் கடலில் இருந்த இலட்சத் தீவுகளில் முசுலீம்கள் பெரும்பான்மையினராகத் திகழ்ந்தார்கள். எனவே அத்தீவுகளை கைப்பற்ற பாகித்தான் திட்டமிட்டுப் போர்க்கப்பல் ஒன்றினை அங்கு அனுப்பியது. இந்தியாவின் உள்துறை அமைச்சராகப் பதவி வகித்த சர்தார் வல்லபாய் படேல் உடனடியாக அ. இராமசாமி முதலியார் மற்றும் அ. இலட்சுமணசாமி முதலியார் ஆகியோருடன் தொடர்புகொண்டு பேசினார். அவரது அறிவுரைப்படி இரு சகோதரர்களும் திருவிதாங்கூர் மக்களைத் திரட்டி இலட்சத்தீவுக்குச் சென்று இந்தியக் கொடியை ஏற்றினர். இந்தியக் கடற்படையைச் சேர்ந்த போர்க்கப்பலும் விரைந்து வந்தது. இதன்மூலம் பாகித்தான் பிடியில் சிக்காமல் இலட்சத் தீவு மீட்கப்பட்டது. அதற்கான பெருமை சகோதரர்களான இந்த இரு தமிழர்களையே சாரும்.

அதுமட்டுமல்ல, இந்தியாவின் மிகப்பெரிய சமத்தானமான ஐதராபாத் மன்னராக இருந்த நிஜாம், தனது நாடு சுதந்திர நாடாக விளங்கும் என்று அறிவித்ததோடு, ரசாக்கர் படை என்ற பெயரில் ஒரு படையையும் திரட்டினார். இந்தியாவுடன் இணையவேண்டும் என்று போராடியவர்களை இந்தப் படை கடும் நடவடிக்கைகளின் மூலம் ஒடுக்குவதற்கு முயன்றது. இதற்கு மறைமுகமாக பாகித்தான் அரசு ஆதரவளித்தது. அப்போது சர்தார் வல்லபாய் படேலின் அறிவுரையின்படி இந்திய இராணுவம் ஐதராபாத்தை மீட்பதற்கு அனுப்பப்பட்டு மூன்றே நாட்களில் ரசாக்கர் படையை ஒடுக்கி ஐதராபாத்தை மீட்டது.

ஆனால், பாகித்தான் இது குறித்து ஐ.நா. பாதுகாப்புக் குழுவில் புகார் செய்தது. அப்போது சர்தார் வல்லபாய் படேல் பாதுகாப்புக் குழுவில் இந்தியாவின் சார்பில் வாதாடுவதற்காக அ.இராமசாமி முதலியார் அவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தார். அங்கு அவர் “இந்தியா மேற்கொண் டது இராணுவ நடவடிக்கை அல்ல. அதுவொரு போலீசு நடவடிக்கை” என வாதாடினார். அதா வது, இராணுவ நடவடிக்கை என்பது, இன்னொரு நாட்டின் மீது படையெடுப்பது; அல்லது தனது நாட்டின் மீது படையெடுத்து வரும் அந்நிய நாட்டை எதிர்த்துப் போரிடுவதாகும். ஆனால் போலீசு நடவடிக்கை என்பது உள்நாட்டில் மூண்டெழும் ஒரு கிளர்ச்சியை அடக்குவதற்குப் பயன்படுவதாகும். இந்த வாதத்தை பாதுகாப்புக் குழுவில் இருந்த பெரும்பான்மையான நாடுகள் ஏற்றுக் கொண்டன. பாகித்தான் தீர்மானம் தோல்வி யடைந்தது. அன்று அ. இராமசாமி முதலியார் சென்று திறமையுடன் வாதாடி ஐதராபாத் இந்தியா வுடன் இணைந்ததை ஐ.நா. பாதுகாப்புக் குழு ஏற்கும்படிச் செய்தார். இல்லாவிட்டால், காசுமீர் பிரச்சனை போல இதுவும் இன்றுவரை தீராத தலைவலியாக இந்தியாவிற்கு அமைந்திருக்கும்.

காங்கிரசு அரசியல் சிந்தனையோட்டத்தை ஏற்றுக்கொள்ளாத இந்த இரு தமிழர்களும் காங்கிரசு ஆட்சியில் இந்தியாவுக்கு நெருக்கடி ஏற்பட்ட போதெல்லாம் அதிலிருந்து அதை மீட்பதற் குத் தங்களது அறிவாற்றலைப் பயன்படுத்தியுள்ளனர் என்பது தமிழ்நாட்டிற்கு பெருமைத் தேடித் தந்ததாகும்.



சென்னைப் பல்கலைக்கழகம், பேரவை இல்லத்தில் ஏ. இலட்சுமணசுவாமியின் உருவச்சிலை

சர் இராமசுவாமி முதலியார் மேலநிலைப் பள்ளி




அம்பத்தூர், சென்னை


வெளிவந்துவிட்டது
உலக
வணிகம்
ULAGA VANIKAM
2024
BUSINESS DIRECTORY
www.ulagavanikam.ca
விளம்பரமின்றி வியாபாரமில்லை
தங்கள் வணிகத்தை மேம்படுத்திக்கொள்ள உலக வணிகத்தில்
உங்கள் விளம்பரமும் இடம்பெற அழையுங்கள்
www.ulagavanikam.ca
437-345-4203



# மண்பற்று

சிறுகதை

நாட்டிலிருந்து 12 வருடங்களின் பின்னர் வீடு வந்த அவனை எல்லோரும் விழுந்து விழுந்து உபசரித்தார்கள்.

1990ஆம் ஆண்டு கிளிநொச்சியில் நடந்த விமானக் குண்டு வீச்சில் அனந்தனின் தகப்பனார் இறந்துவிடக் குடும்பப் பொறுப்பு இவனது தலையில் வந்தது. குடும்பத்தைக் காப்பாற்ற உழைப்பிற்காக உறவினரின் உதவியுடன் 1990ஆம் ஆண்டே தனது O/L படிப்பை இடைநிறுத்திவிட்டு வெளிநாடு சென்றவன். பன்னிருவருடங்களாக உடலை வருத்தி உழைத்துக் குடும்பத்தை முன்னேற்றிவிட்டிருந்தான்.

தற்போதைய சமாதான சூழலால் வீட்டாரின் அழைப்பின் பேரில் 03மாத விடுமுறையில் அவன் வந்திருந்தான்.

அனந்தனின் சொந்த இடம் குமரபுரம், பரந்தன். அங்கு அவர்களுக்குச் சொந்தவீடு வளவு உண்டு. சத்ஜெய நடவடிக்கை காரணமாக அவனது வீட்டார் இடம் பெயர்ந்து கந்தபுரத்தில் வசித்து வந்து தற்போது கனகபுரத்தில் வசித்து வருகின்றார்கள்.

இவனைக் கண்டதும் மாமி ஓடிவந்து இவனைக் கட்டிப்பிடித்து அழுதார். அருகில் நின்ற மாமா அழுகையை அடக்காமல் கண்களைத் துடைத்துக் கொண்டார். மாமிக்குக் கீதா ஒரே ஒரு மகள். சின்ன வயதிலேயே கீதாவை இவனுக்கு கட்டி வைப்பதென்று பெற்றவர்கள் நிச்சயித்து விட்டார்கள். சிறு வயதிலிருந்தே இருவரும் பாசம் வைத்துப் பழகினார்கள்.

மாமியைச் சமாளித்து வாசல் தாண்டி வீட்டிற்கு அனந்தன் சென்றபோது விறாந்தையில் வீரவணக்கத்தின் கீழ் வரியுடையில் சிரித்தபடி வரவேற்கிறாள் அவன்ர கீதா.

“நல்லாப்படிச்சுக் கொண்டிருந்தவள் கிளிநொச்சிக்கு ஆமி வந்தவுடன் இயக்கத்துக்குப் போய்விட்டாள். லீவிலை வரேக்கை உன்னைநலம் கேப்பாள். கடைசியாக நடந்த ஆனையிறவுச் சண்டையிலதான் வீரச்சாவடைந்தவள்.” “கிளிநொச்சியில விதைச்சனாங்கள்” மாமா அழுகையை அடக்கமுடியாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

சின்ன வயதில் ஓடிப்பிடித்து விளையாடியது, ஒன்றாகப் பாடசாலைக்குப் போனது, சண்டைபிடித்து இடையில் கதைக்காமல் விட்டது. வெளிநாடு செல்லும்போது கடைசியாக சந்தித்துக் கதைத்தது “நீங்கள் திரும்பி வரும்வரை காத்திருப்பன்.” என்று கூறி வழியனுப்பி வைத்தது என்று பழைய நினைவுகள் அனந்தனுக்கு வந்து வந்து போயின.

வீடு திரும்பிய அனந்தன் அதனிமையிலிருந்து கையிலிருந்த படத்தைப் பார்தவாறு அழுதுகொண்டிருந்தான். அது அவன் வெளிநாடு செல்வதற்கு முன்பு தனது ஞபகமாக கீதா

அவனுக்குக் கொடுத்த ரோசாச் செடிகள் மத்தியில் நின்று சிரித்துக் கொண்டிருக்கும் அவளது புகைப்படம்.

அனந்தன் வந்து ஒருவாராமாகி விட்டது. இவன் வந்திருப்பதை அறிந்த குமார் அன்று காலை அவனைப் பார்க்க வந்திருந்தான். அனந்தன், குமார், சந்திரன், பாலன், கரன், நிசாந்தன், என்று பலர் ஒன்றாகப் படித்தவர்கள். அனந்தனும், குமாரும், சந்திரனும் உயிருக்குயிராகப் பழகியவர்கள். ஊரில் மூவரும் ஒன்றாகவே திரிவார்கள். அனந்தன் வெளிநாடு சென்றுவிட அவர்களிருவரும் இயக்கத்திற்குச் சென்றுவிட்டனர். சந்திரன் ஆனையிறவுச் சண்டையில் வீரச்சாவடைந்து விட்டான்.

நீண்ட நாட்களின் பின்னரான சந்திப்பு அனந்தனைக் கண்டதும் குமார் ஓடிவந்து கட்டிப்பிடித்தான். பழைய நினைவுகளை கதைத்துவிட்டு இருவரும் ஆனையிறவு பார்க்க குமாரின் உந்துருளியில் சென்றனர்.

**"ஓ... போர் எத்தனை கொடியது அதன் வலிய கரங்களில் சிக் குண்டு சிதைந்து போனவை தான். எத்தனை எத்தனை. நேரடியாகக் காணும் போதே இப்படி என்றால் அனுபவித் திருந்தால் எவ்வளவு கொடுமையாக இருக்கும். அந்நிய தேசத்தில் இருக்கும் போது எதுவும் தெரியவில்லையே.**



உந்துருளி டிப்போச் சந்திக்கு வந்ததும் "இது தான் மச்சான் கிளிநொச்சி மத்திய கல்லூரி" என இடத்தைக் காட்டினான் குமார்.

சத்ஜெயவில் இந்த இடத்தை பிடித்தவன் தொண்ணூற்றெட்டில் திருப்பி அடிச்சுப் பிடிச்சனாங்கள். பள்ளிக் கூடத்தில் ஆமி இருந்தவன் ஓடிப்போன பிறகு கிபிரால குண்டு போட்டு உடைச்சுப் போட்டான்" விளக்கினான் குமார்.

கரடிப்போக்குச் சந்தியை அடைந்ததும் உந்துருளியை நிறுத்தினான் குமார்.

"ஓயாத அலைகள் இரண்டில இந்த இடத்தை பிடிச்சனாங்கள். சந்தியைப் பிடிக்க நல்லா கஸ்ரப்பட்டனாங்கள்." தனது பழைய அனுபவத்தைக் கூறினான் குமார்.

பரந்தன் சந்திக்கு கிட்ட வந்ததும் வேகத்தைக் குறைத்த குமார் இந்த இடத்திலதான் கிளிநொச்சி சண்டைக்கு பால்ராஜ் அண்ணையாக்கள் "பொக்ஸ்" அடிச்சவை இதாலதான் கிளிநொச்சி எங்களிடம் வீழ்ந்தது." குமார் சொல்ல அனந்தனுக்கு எல்லாம் புதுமையாக இருந்தது.

பரந்தன் சந்தியைத் தாண்டியதும் குமரபுரம் நோக்கி உந்துருளி திரும்பியது. கொஞ்சத் தூரம் பயணித்ததும் உந்துருளியை நிறுத்திய குமார் "இது தான் மச்சான் உங்கட வீடு" என்று ஓரிடத்தைக் காட்டினான்.

அவது கண்களை அவனாலேயே நம்ப முடியவில்லை. இது தானா எனது வீடு? சின்ன வயசில ஓடி விளையாடிய முற்றம். ஊஞ்சல் கட்டி ஆடிய மரம். ஆசையாய் நட்டு நீரூற்றிவளர்ந்த பூமரம் எல்லாம் எங்கே?

எதுவுமே இல்லையே.

தென்னைகள், வாழைகள் என்று சோலையாய் இருந்த வளவு இப்போது வீடொன்று இருந்ததற்குச் சாட்சியாய் அத்திவாரம் மட்டும் எஞ்சி இருக்கிறது. ஆசையாய் நீர் அள்ளிக் குளித்த கிணற்றடி புதர் மண்டிக் கிடக்குது. அவனுக்கு அந்த இடந்தைப் பாக்க அழுகை வந்தது.

தொடர்ந்து அனந்தனைக் கூட்டிச் சென்ற குமார் "இதுதான் நாங்கள் படிச்ச பாடசாலை" என்று இனனோர் இடத்தைக் காட்டினான். அங்கு பாடசாலை ஒன்று இருந்ததற்கான அடையாளமாய் பாதி அழிந்த நிலையில் பெயர்ப்பலகை மட்டுமே எஞ்சி நின்றது.

ஓ... ஆறு வயதிலிருந்து எனக்கு அறிவூட்டிய பாடசாலை இன்று இருந்ததே தெரியாமல் அழிந்து கிடக்கிறதே.

ஓடிப்பிடித்து விளையாடிய மைதானம், கல்விகற்ற வகுப்பறை, அருகிருந்த அதிபர் அலுவலகம், அருகிருந்த ஆலயம் என்று எதுவும் எஞ்சவில்லையே..

வகுப்பில் குழப்படி செய்து ஆசிரியரிடம் பிரம்படி வாங்கியது தண்டனையாக வெய்யிலில் முட்டுக் காலில் நின்றது, உயிர் நண்பனுடன் கட்டிப்பிடித்துப் புரண்டு சண்டை பிடித்தது என்று பழயவை எல்லாம் நினைவில் வந்து வந்து போயின.

"ஓ... போர் எத்தனை கொடியது அதன் வலிய கரங்களில் சிக் குண்டு சிதைந்து போனவை தான். எத்தனை எத்தனை. நேரடியாகக் காணும் போதே இப்படி என்றால் அனுபவித்திருந்தால் எவ்வளவு கொடுமையாக இருக்கும். அந்நிய தேசத்தில் இருக் கும் போது எதுவும் தெரியவில்லையே.



தொடர்ந்து ஆனையிறவுக்கு அனந்தனைக் கூட்டிச் சென்ற குமார் உமையாள்புரம் தாண்டி கொஞ்சம் வந்ததும் உந் துருளியை நிறுத்தினான்.

இந்த இடத்திலதான் மச்சான் சந்திரன் வீரச்சாவடைஞ்சவன் என்று கூறிய குமார் விம்மி விம்மி அழத்தொடங்கினான்.

"இதிலதான்... இதிலதான் மச்சான் இடிச்சுக் கொண்டு முன்னேறேக்க நான் காயப்பட்டு விழுந்திட்டன். என்னைத் தாண்டிப் போன சந்திரன் நெஞ்சில வெடிபட்டு வீரச்சாவடைஞ்சிட்டான். என்று கூறி ஓரிடத்தைக் காடட்னான் குமார்.

"ஓண்டாத்தான் சண்டைக்கு வந்தனாங்கள், கடைசியாக வெளிக் கிடேக்கை ஒண்டா இருந்து ஒரு பாசலில் சாப்பிட் டனாங்கள்" பழைய சம்பவங்களை நினைவு கூர்ந்தான் குமார்.

குமார் சொல்லச் சொல்ல அனந்தனுக்கு பழைய நினைவுகள் வந்து வந்து போயின. சந்திரனுடன் ஒன்றாய் திரிந்தது. வயற் பரப்பில் ஓடியாடி விளையாடியது, ஊர்க்குளத்தில் குளித்தது. ஆளையாள் மாறி மாறி நீரில் தாட்டது, கடைசியாக கண்ணீர் மல்க விடைகொடுத்து அனுப்பியது என்று எல்லாமே வந்து வந்து போயின.

ஆனையிறவு பார்த்ததன் பின் கிளிநொச்சி திரும்பியவர்கள் நேராக கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லம் சென்றார்கள் உள்ளே கூட்டிச் சென்ற குமார் இதுதான் சந்திரன விதைச்ச இடம் என்று அங்கிருந்த கல்லறை ஒன்றைக் காட்டினான். கல்லயைக்கு மேலே வீரவணக்கத்தின் கீழ் சந்திரனது விப ரங்கள் எழுதப்பட்டு இருந்தன. தொடர்ந்து சென்றவன் ஓரிடத் தில் நின்று "இது தான்ரா கீதாவின்ர கல்லறை" என்று காட்டினான் குமார்.

ஓ... என்னருமைக் கீதா என்னையே நினைத்து எனக்காகவே வாழ்ந்தவள் இன்று அமைதியாய் துயில் கொள்கிறாள். பொக் கற்றுக்குள்ளிருந்த 'பேர்ஸை' எடுத்து அதிலிருந்த கீதாவின் படத்தை பார்த்தவாறு கண்ணீர் மல்கத் தொடங்கினான் அனந்தன்.

என்னையே நினைத்து வாழ்ந்த என்னருமைக் கீதா. அருமை நண்பன் சந்திரன் என்று ஆயிரமாயிரம் பேர்கள் அன்னை மண் விடிவிற்காய் தம்பணி முடித்து இங்கே அமைதியாய் துயில் கொள்கிறார்கள். அவர்கள் இங்கே போராடி மடிந்த போது, அந்நிய தேசத்தில் ஆடம்பரமாய் வாழ்ந்ததையிட்டு வெட்கம் கொண்டான் அனந்தன்.

வீடு திரும்பிய அனந்தனுக்கு மனம் ஒரே குழப்பமாக இருந்தது. வீட்டாரின் உபசரிப்புகளிலெல்லாம் அவன் மனம் லயித்திருக்கவில்லை.

அனந்தன் வந்து இரண்டு மாதங்கள் கடந்து விட்டிருந்தன. அடிக்கடி குமார் வந்துபோனான். இரண்டு மாதத்தில் அனந்தன் நிறைய மாறியிருந்தான்.

அனந்தனுக்கு விடுமுறைக் காலம் முடிந்து திரும்பிச் செல்ல வேண்டிய நாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

"போக வேண்டிய நாளும் நெருங்குது. பயண ஒழுங்கெல்லாம் செய்ய வேணும் எப்ப தம்பி போகப்போறாய்" மகனைப் பிரிகின்ற கவலையில் அந்தனைக் கேட்டாள் தாயார்.

"இல்லையம்மா நான் இனித் திரும்பிப் போகேல்லை. இங்கேயே நிக்கப்போறேன்" என்று அமைதியாகக் கூறினான் அனந்தன்.

- மா. தமிழவன் - வெள்ளிநாதம் 07-13 பெப்ரவரி 2003






கறுப்புக்கொடிப் போராட்டத்தில் நடராஜன் கொல்லப்பட்டார் (அன்றைய சுதந்திரனில்)

இது தான் 2500வது சம் புத்த ஜயந்தி கண்ட புனித ஆண்டு!

## திருப்பூர் குமரன் தீரபரம்பரையிலே

### *திருமலை தந்த தியாகி நடராஜன்*

### துப்பாக்கிகுண்டுக்கு விழியைப் பலியாக்கி மொழியைக் காக்க முன்வந்த முதியவர்

### உயிர் ஈந்து, செங்குருதி வழிந்தோட திருகோணமலையில் துக்கதின அனுஷ்டானம்

(சுதந்திரன் விசேஷ நிருபர்)

***இந்திய சுதந்திரப் போராட்டத்திலே பொலிஸாரின் குண்டாந் தடிப் பிரயோகம் மண்டையைப் பிளக்க, தியாகத்தின் பிரவாக மாக பச்சை இரத்தம் பீறிட்டு வழிந்தோட, இறுதி மூச்சுவரை சாத்வீகப் போராடி உயிர் நீத்து மூவர்ணக் கொடியின் புனிதத் தைப் பாது காத்தான் தீரன் திருப்பூர்க்குமரன்.***

அந்த வீர பரம்பரையிலே திருமலை ஒரு தியாகி நடராஜனைத் தந்துவிட்டது. எந்த இன எழுச்சியிலும் முன்னணி வகிக்கும் திரு மலைக்கு இது தீராப் பெரும் புகழைத் தேடித்தந்து விட்டது.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே, அன்னைத் தமிழ் மொழியின் உரிமை காக்க அறப்போரிட்டு ஆருயிரை ஈந்தார்கள். தாள முத்து தடராஜன் என்ற திராவிட வீரர்கள். அந்த வீரர்களுக்கு ஈடும் எடுப்புமான ஒரு ஜோடி நடராஜன், திருமலையில் தியாகக் கோபுரத்தின் உச்சிக்கே உயர்ந்து விட்டான்.

முது பெரும் கிழவர் ஒருவர் தன் விழியைத் துப்பாக்கிக் குண் டுக்கு இரையாகக் கொடுத்து மொழியைக் காப்பதில் தன் கடமை யைப் புரிந்துவிட்டார். இன்னும் எத்தனையோ இளைஞர்கள் இரத்தம் சிந்தி இன உரிமைப் போருக்கு இளைத்தவர் அல்ல நாம் என்பதை நிருபித்து விட்டார்கள் இவ்வாரம் தமிழ் பேசும் மக்கள் அனுஷ்டித்த துக்க தினத்திலே.

உயிரிழந்த நடராஜனைத் தேசியத் தியாகியாக வைத்து வணங்குவோம். அவன் நாமத்தைத் தமிழரசின் சரித்திரத்தில் பொன் எழுத்தில் பொறிப்போம். இரத்தம் சிந்தியவர்களை தேசிய வீரர்களாகக் கொணடாடுவோம்.

தமிழ் பேசும் மக்களின் தியாக வரலாறு கொழும்பு சத்தியாக் கிரகத்தையும், கல்லோயா கலவரத்தையும் தொடர்ந்து திரு மலையிலும் வளர்ந்து வருகிறது. வளரட்டும், வளரட்டும் இந்த தியாகத் தீயிலே அக்கிரமக்காரர்கள் பொசுங்கும் புண்ணிய தினம் அதிக தூரத்திலில்லை.
-ஆசிரியர்

திருகோணமலையிலுள்ள தமிழ்ப் பேசும் மக்கள் பெப்ரவரி 4-ந் திகதி சுதந்திர தினத்தைத் துக்க தினமாக அனுஷ்டிக்க முடிவு செய்தார்கள். அங்கு வாழும் சிங்கள மக்கள் சுதந்திர தினத் தைக்கொண்டாட விரும்பினார்கள் எனவே இருசாராருக்கும் தகராறு ஏற்படாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மாகாண அதிபர் திரு மக்கேஷருக்கும் பொலிசாருக்கும் ஏற்பட்டது.

**சமரச முடிவு**

அரசாங்க ஏஜண்ட் திரு மக்கேஷர் 3- திகதி ஞாயிற்றுக்கிழமை ஒரு மகாநாடு கூட்டி தமிழ் மக்கள் துக்கம் அனுஷ்டிக்கவும் சிங்கள மக்கள் சுதந்திரதினம் கொண்டாடவும் எப்படி வசதி செய் யலாம் என்றும் ஆலோசனை நடத்தினார். இந்த ஆலொசனை யின் பிரகாரம் காலை 6 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை தமிழ்ப்பேசும் மக்கள் துக்கதின ஆர்ப்பாட்டங்களை நடத்துவ தென்றும் பிற்பகல் 2மணிமுதல் மாலை 6 மணிவரை சிங்கள மக்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. தமிழர்கள் தங்கள் இல்லங்களிலும் ஸ்தாபனங் களிலும் கறுப்புக் கொடி உயர்த்துவதென்றும் சிங்களவர்கள் தங்கள் தங்கள் இடங்களில் சிங்கக் கொடி உயர்த்துவதென்றும் ஒருவரையொருவர் எந்த வகையிலும் நிர்ப்பந்திப்பதில்லை யென்றும் முடிவு செய்யப்பட்டது

**மார்க்கட் விவகாரம்**

ஆனால் திருமலை மார்க்கட்டைப் பற்றி ஒரு பிரச்னை கிளம் பிற்று திருமலை மார்க்கட் நகரசபைக்குச் சொந்தமான கட்டட மாகும். திருமலை நகரசபைக் கட்டடத்திலும் அதற்கு சொந்த மான இடங்களிலும் கறுப்புக்கொடி உயர்த்துவதென முடிவு செய்திருந்தது. இதன் படி மார்க்கட்டிலும் கறுப்புக்கொடி உயர்த்த நகர சபைக்கு உரிமையுண்டு. ஆயினும் மார்க்கட் முழு வதிலும் சிங்கள வியாபாரிகளே இடம் பிடித்திருந்ததால் அங்கு கறுப்புக்கொடி ஏற்றுவது அவர்களைப் புண்படுத்தும் என்று வாதிக்கப்பட்டது. முடிவில் மார்க்கட் கட்டடத்தில் சிங்கக் கொடி யும் ஏற்றக் கூடாது கறுத்தக் கொடியும் ஏற்றுவதில்லை, அதை ஒரு பொது இடமாகப்பாவிக்க வேண்டும் என்று சுமுகமான முடிவு செய்யப்பட்டது. இந்த அளவிற்கு திருமலையில் வாழும் தமிழ்ப்பேசும் மக்களும், நகர சபையினரும் பெருந்தன்மை யாக விட்டுக் கொடுத்தனர். மரக்கறி மார்க்கட்டிலும் மீன் விற் பனவுச்சந்தையிலும் எந்தவிதமான கொடியும் ஏற்றுவதில்லை யென்ற முடிவை தமிழரும் சிங்களவரும் ஒப்புகொண்டிருந் தனர்.

**ஊர்வலம்**

4-ம் திகதிகாயில் பல்லாயிக்கணக்கான தமிழ்ப் பேசும் மக்கள் கருப்புக் கொடிகளப் பிடித்துக் கொண்டும், கறுப்பு சின்னங்களை அணிந்து கொண்டும் மடத்தடிச் சந்தியிலிருந்து நகரசபை காரி யாலயத்தை நாடி அமைதியுடன் ஊர்வலமாகச் சென்றனர். இவ் வூர் வலத்தை திருமலைப் பிரதிநிதி திரு என், ஆர். இராஜவ ரோதயம், ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு வி. ஏ. கந்தையா, கப்டன் ஏ, ஸி கனகசிங்கம், புரக்டர் துரைநாயகம் ஆகியோர் முன்னின்று நடத்தினர்.

ஊர்வலம் நகர சபைக்காரியாலயத்தை அடைந்ததும் நகர சபைத் தலைவர் திரு த. ஏகாம்பரம் அங்கு ஒரு கறுப்புக் கொடியை ஏற்றிவைத்து உணர்ச்சிகரமான ஒரு சொற் பொழிவை நிகழ்த்தினார். பின்னர் மக்கள் திரளாகச் சென்று மணிக்கூண்டுக் கோபுரத்தின் மீதும் கறுப்புக்கொடி உயர்த் தினர்.

இதைத் தொடர்ந்து திருமலை காலி கோயில் முன்றிலில் ஒரு பிரமாண்டமான பொதுக் கூட்டம் நடை பெற்றது. அக்கூட்டத்தில் திரு. இராஜவரோதயம் தலைமை தாங்கி சுமார் மூன்று நிமிடங்கள் பேசியிருக்கலாம். அப்போது கூட்டத்தில் ஒரு பர பரப்பு ஏற்பட்டது. வீர இளைஞர்கள் மரக்கறி மீன் மார்க்கட் டுகளை நாடி ஓட்டம் பிடித்தனர். என்ன காரணம் என்று பார்த்த போது, கண்ணியமாகச் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை மீறி வெறி பிடித்த சிங்களவர் சிலர் மீன் சந்தையிலும், மரக்கறி சந்தை யிலும், தனிச்சிங்கக் கொடிகளை ஏற்றிவைத்து விட்டனர் என்று தெரிய வந்தது.


இதுதான் 2500வது சம் புத்த ஜயந்தி கண்ட புனித ஆண்டு!

திருப்பூர் குமரன் தீரபரம்பரையிலே

திருமலை தந்த தியாகி நடராஜன்

துப்பாக்கிகுண்டுக்கு விழியைப் பலியாக்கி மொழியைக் காக்க முன்வந்த முதியவர்

உயிர் ஈந்து, செங்குருதி வழிந்தோட திருகோணமலையில் துக்கதின அனுஷ்டானம்

ஒரு மைல் நீளத்தில் ஊர்வலம்

நடராஜனின் பிரேதப் பெட்டியைப் பிரமுகர்கள் கையேந்தித் தூக்கினர்

**பொலீஸ் இராணுவம்**

உடனே தலைவர் களும் அந்த இடத்திக் குச் சென்றனர் மா காண அதிபருக்கும், டிஸ்ரிக் நீதிபதிக்கும், பொலீஸுக்கும் டெலி போன் செய்யப்பட்டது அவரும் அங்கு வந்து சேர்ந்தனர். இரா ணுவமும் பொலிஸ் படையும் கூட துப்பாக் கிகள் சகிதம் அங்கு வந்து வட்டமிட்டு அணிவகுத்து நின்றன.

**முடிவை மீறுவதா**

மாகாண அதிபர் மக் கேஷரும் தலைவர் களும் மார்க்கட் கட் டடங்களிலிருந்து சிங் கக் கொடிகள் இறக்கி சமாதானத்தைக் காக்குமாறு அன்பாக


திருப்பூர் குமரன்.....

ஒரு மைல்...




வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் சிங்களவர்கள் முரட்டுத்தனமாக மணிக்கூண்டுக் கோபுரத்தின் மீது உயர்த்திய கறுப்புக் கொடியை இறக்க வேண்டும் என்று அடம் பிடித்தனர். அவர்கள் கோரிக்கை நியாயமற்றது என்றும் மணிக்கூண்டுக் கோபுரம் நகரசபையின் உடைமை என்றும் முதல் நாள் மகாநாட்டில் மார்க்கட் மட்டுமே பொது இடமாக ஒப்பு கொள்ளப்பட்டதென்றும், மணிக்கூண்டுக் கோபுரம் பொது இட மாகாது என்றும் வாதிக்கப்பட்டது.

தமிழ் பேசும் மக்கள் அந்த இடத்தில் ஆயிரக்கணக்கில் திரண்டு விட்டார்கள். சிங்களவர்கள் எல்லோரும் கூட்டமாகத் திரண்டு இரு மார்க்கட தலைவாசல்களையும் அடைத்துக் கொண்டு நின் றார்கள்.

**துப்பாக்கி முழங்கிற்று**

இந்த நேரத்தில் டும், டும் என்று இரு வெடியோசைகள் கிளம் பின. எங்கோ பட்டாஸ் கொளுத்தப்படுகிறதென்று ஆரம்பத்தில் மக்கள் எண்ணினார்கள், ஆனால் அந்தோ பரிதாபம்! கூட்டத் தில் கூக்குரல் கிளம்பிற்று நடராஜா என்ற இளைஞரின் மார்பில் துண்டு பாய்ந்ததில் அவர் பதறிக் கதறிக் கொண்டு அடி சாய்ந் தார் துடிக்கத் துடிக்க அவர் உயிர் பறந்தது. திரு.வ.நடராஜா என்ற மற்றொரு இளைஞர் படுகாயப்பட்டார். ஒரு முதியவரின் கண்களிலினூடாக குண்டு பாய்ந்து விட்டது. இன்னொரு இளை ஞருக்கு நெற்றியில் காயம்பட்டது. மற்றும் பலருக்கும் காயங்கள் ஏற்பட்டன. ஜன சமுத்திரம் அல்லோல கல்லோலப்பட்டது. எங் கும் குழப்பம். எங்கும் கலவரம், எங்கும் பயங்கர தத்தளிப்பு நில வியது.

கூட்டத்தை களைந்து போகுமாறு டிஸ்ட்ரிக் நீதிபதி திரு. கந்த சாமி கட்டளையிட்டார். கூட்டம் கலைந்தது துப்பாக்கியினால் தாக்குண்டவர்கள் ஆஸ்பத்திரி நோக்கி விரைந்தெடுத்துச் செல்லப்பட்டனர்.

**சிங்களக் கோழை**

நடந்தது இது தான் வெளியில் தலைவர்களும் மக்களும் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கையில், சிங்களவர்கள் திரண்டு மார்க்கட் வாயில்களை மறைந்து நிற்க ஒரு வெறி பிடித்த சிங்களவன் மார்க்கட்டுக்குள் கோழையைப் போல் மறைந்து நின்று, மார்க்கட் சுவரிலிருந்த கிராதித் துவாரத்தின் மூலம் இரட்டைக் குழல் துப்பாக்கியினால் குருட்டுவாக்கில் கூட் டத்தை நோக்கி இரண்டுமுறை சுட்டிருக்கிறான் ரவைகள் நாலா திசைகளிலும் பாய்ந்து தமிழ்மக்களைப் பலி கொண்டன, கொடி காக்கும் பணியில் தியாகி நடராசா தம் இன்னுயிரைப் பணையம் வைத்தார்.

**ஒருவர் கைது**

மேற்படி துப்பாக்கி சம்பவம் சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் எல். ஜி. மனுவல் சில்வா என்றசிங்களவர் கைது செய்யப் பட்டிருக்கிறார் கோட்டில் ஆஜர் செய்த போது இம்மாதம் 15-ந் திகதிவரை அவரை விளக்க மறியலில் வைக்கும்படி நீதி பதி உத்தரவிட்டிருக்கிறார்.

திருகோணமலை துப்பாக்கி சம்பவத்தை தொடர்ந்து நகரத்தின் பல பகுதிகளிலும் ஆங்காங்கு சில சிறு சிறு கலவரங்கள் ஏற்படடன, சிங்களவர்கள் தெருக்களில் தாக்கப்பட்டனர் என் றும், சிங்களவர்களுக்குச் சொந்தமான சில கடைகள் தீயிடப் பட்டனவென்றும் தெரிகிறது.

**சிங்களவர் வெளியேற்றம்**

திருமலையில் இருந்த பல சிங்கள முதலாளிகளும், மற்றை யோரும் குடும்ப சகிதம் திருமலையைவிட்டு வெளியூர்களுக்கு ஓடிவிட்டார்கள் என்று தெரிகிறது. இப்போது திருமலையில் அமைதி நிலவுகிறது இராணுவமும் போலிசும் நகர் காவல் புரிகின்றன. ஆயினும் எந்த நிமிஷமும் மீண்டும் வகுப்புக் கல வரம் ஏற்படலாம் என்ற நிலை இன்னும் தணிந்துவிட்தாகத் தெரியவில்லை.

நன்றி - சுதந்திரன் (10.02.1957)



# சிறீதரனுக்கு முன்னுள்ள பொறுப்புக்கள்!

29.01.2024

தமிழரசு கட்சிக்குள் நடந்த தேர்தல் ஏன் முக்கியத்துவமுடையது? செல்வநாயகம் தமிழ் மக்களைக் கடவுளிடம் ஒப்படைத்த பொழுதே அக்கட்சி செயல்பூர்வமாக இறந்து போய் விட்டது. அப்படிப்பட்ட ஒரு கட்சிக்கு யார் தலைவராக வந்தாலும் எதுவும் நடக்கப் போவதில்லை என்று ஒரு விமர்சனம் சமூக வலைத்தளங்களில் வைக்கப்படுகின்றது. கோட்பாட்டு ரீதியாக அது சரி. ஆனால் நடைமுறையில் தமிழரசுக் கட்சி இப்பொழுதும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. உள்ளதில் பெரிய கட்சி அது. தமிழ் மக்கள் மத்தியில் மக்கள் இயக்கம் எதுவும் கிடையாது. இருக்கின்ற கட்சிகளின் பிரதிநிதிகள்தான் தமிழ் அரசியலை முன்னெடுக்கின்றார்கள். அரசியல் என்பது சாத்தியக்கூறுகளின் கலை. இருப்பதை வைத்துத்தான் அரசியல் செய்யலாம். இருப்பதை வைத்துத்தான் அரசியலை எழுதலாம். கற்பனைகளில் இருந்தோ அல்லது விருப்பங்களில் இருந்தோ அரசியலை ஆய்வு செய்ய முடியாது. உள்ளதில் பெரிய கட்சி அதற்குள் நடக்கும் தேர்தல் என்று பார்க்கும்பொழுது தமிழரசு கட்சிக்குள் நடக்கும் தேர்தலுக்கு முக்கியத்துவம் உண்டு.


இலங்கைத் தமிழரசுக் கட்சியின்
நான்கு அம்சத் திட்டம்.

திருமலைத் தீர்மானங்கள்:

(1956 ஆகஸ்ட் 20ந் தேதி நிறைவேற்றப்பட்டவற்றின் சாரம்)

★ தமிழ் பேசும் இனத்துக்குக் கேடு விளைக்கும் இன்றைய ஒற்றையாட்சியை ஒழித்து சமஷ்டிக் கூட்டாட்சி நிறுவி அதன் மூலம் தமிழ் பேசும் மக்கள் சுதந்திர புருஷர்களாகத் தன்மானத்தோடு உரிமை வாழ்வு வாழ வழிவகுப்பது.

★ தமிழ் பேசும் மக்கள் தமது சொந்தப் பிரதேசத்திலேயே சிறுபான்மையினராக்கப்பட்டு அதன் மூலம் அவர்களது அரசியல் உரிமைகள் பறிக்கப்படும் அநியாயத்தைத் தவிர்க்க, திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் தமிழ் பிரதேசங்களில் நடப்பதைத் தடுப்பது. அதாவது தமிழ் பேசும் மக்களின் உறைவிடம் சூறையாடப் படாது பாதுகாப்பது.

★ தமிழ் மொழிக்கு ஆட்சித்துறையில் சிங்களத்தோடு ஒத்த சரிசம அந்தஸ்து பெறுவது.

★ மலை நாட்டுத் தமிழர்களுக்கு அவர்களின் இழந்த உரிமைகளை, அவற்றினும் சிறப்பாக அவர்களின் பிரஜா உரிமையைப் பெற்றுக்கொடுப்பது.

அதே சமயம் அது தமிழ் அரசியலின் இயலாமையைக் காட்டும் ஒரு தேர்தல் என்பதிலும் சந்தேகம் இல்லை. ஏனென்றால் தமிழ் அரசியல் கட்சி மைய்தேர்தல் மைய அரசியலாகச் சுருங்கி போய் இருப்பதை அது காட்டுகின்றது. இது முதலாவது காரணம். இரண்டாவது காரணம், தமிழரசுக் கட்சியின் ஆங்கிலப் பெயர் சமஸ்டி கட்சி. அதற்கு இப்பொழுது 73 வயது. 73 ஆண்டுகளாக கட்சி தன் பெயரில் வைத்துக் கொண்டிருக்கும் சமஸ்டியை அடைய முடியவில்லை. எனவே அதன் தேர்தல் வாக்குறுதிகள், இலட்சியங்கள் என்பவற்றின் அடிப்படையில் சொன்னால், தமிழரசுக் கட்சி ஒரு தோல்வியுற்ற கட்சி. அதன் புதிய தலைவர் கட்சியை வெற்றிப் பாதையில் செலுத்துவாரா? அதற்கு என்ன செய்ய வேண்டும்?

அவர் கடந்த 73 ஆண்டு கால தோல்விகளிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டும். அதுபோல, அண்மையில் கட்சிக்குள் நடந்த தேர்தலில் இருந்தும் கற்றுக்கொள்ள வேண்டும்.

73 ஆண்டு கால தோல்விக்குக் காரணம் தமிழரசுக் கட்சியிடம் பொருத்தமான வினைத்திறன் மிக்க வழிவரைபடம் இருக்கவில்லை என்பதுதான். விக்னேஸ்வரன் கூறுவது போல எல்லாருமே சமஸ்டிப் பண்புடைய தீர்வைதான் கேட்கின்றார்கள். ஆனால் ஒருவரிடமும் சமஷ்டிக்கான வழிவரைபடம் கிடையாது. சமஸ்டியை எப்படி அடைவது?

நிச்சயமாக நாடாளுமன்ற அரசியலுக்கு ஊடாக மட்டும் அடைய முடியாது. நாடாளுமன்ற அரசியலுக்கு வெளியே ஒரு மக்கள் இயக்கம் தேவை. அதே சமயம் அந்த மக்கள் இயக்கத்தின் வழி நடத்தலின் கீழ் பொருத்தமான ஒரு வெளிவிவகாரக் கொள்கையை முன்னெடுக்கும் வினைத்திறன் மிக்க ஒரு வெளிவிவகாரக் கட்டமைப்பு வேண்டும்.

ஏனென்றால், எல்லாத் தேசிய இனப் பிரச்சினைகளும் சாராம்சத்தில் பிராந்திய மற்றும் அனைத்துலகப் பிரச்சினைகள்தான். அவற்றுக்கு அனைத்துலகத் தீர்வுதான் உண்டு. அவை உள்நாட்டுப் பிரச்சினைகள் அல்ல. உள்நாட்டுப் பிரச்சினை ஒன்றை வெளிநாடுகள் கையாளும்போது அது அனைத்துலகப் பரிமாணத்தைப் பெறுகின்றது. எனவே வெளிநாடுகளின் அழுத்தத்தால்தான் அதற்குத் தீர்வு வரும். இந்த அடிப்படையில் பார்த்தால், வெளிநாடுகளைக் கையாள்வதற்குத் தேவையான பொருத்தமான வினைத்திறன்மிக்க ஒரு வெளியுறவுத் தரிசனமும் வெளியுறவுக் கட்டமைப்பும் வேண்டும். தமிழ் அரசியலில் அப்படியேதும் உண்டா?

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் இந்தச் சவால்களை எதிர்கொள்ள வேண்டும். சிறீதரன் இப்பொழுது ஒரு மாவட்டத்தின் பிரதிநிதி மட்டுமல்ல. அவர் ஒரு கட்சியின் தலைவர். எனவே மூன்று தளங்களில் அவர் ஒருங்கிணைப்பைச் செய்ய வேண்டும்.

முதலாவதாக, கட்சிக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டும். தேர்தலின் விளைவாக கட்சி துருவமயப்பட்டிருக்கிறது. இரண்டு பகை அணிகளையும் ஒன்றாகச் சேர்ந்து செயல்படும் ஒரு சூழலை ஏற்படுத்த வேண்டும். தேர்தலை நடத்தி ஒரு தலைவரை தேர்வு செய்த விடயத்தில் தமிழரசுக் கட்சி ஒரு முன்னுதாரணத்தை ஏனைய கட்சிகளுக்குக் காட்டியிருக்கின்றது. பெருமளவுக்கு பரம்பரை பரம்பரையாக வரும் தலைவர்களையும் கேள்விக்கிடமற்ற தலைவர்களையும் கொண்ட ஒரு பிராந்தியத்தில், தமிழரசுக் கட்சியின் முன்னுதாரணம் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளும் பின்பற்ற வேண்டிய ஒன்று. தேர்தலில் தோற்ற தரப்பு கட்சியை விட்டு வெளியேறினால், அந்தத் தேர்தல் மூலம் வெளிப்படுத்தப்பட்ட ஜனநாயக மாண்பு சிதைந்து விடும். சுமந்திரன் அனைத்துலகத் தொடர்புகளை அதிகமாக வைத்திருப்பவர். அது ஒரு வளம். ஒரு வெளியுறவுக் கட்டமைப்புக்குள் அவருக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் ஒரு வெளியுறவுக் கொள்கைக்கு அவர் பொறுப்புக்கூற வேண்டும்.

ஒரு தேர்தலை நோக்கி நிலைமைகளை நகர்த்தியவர் அவர்தான். ஏனெனில் வெற்றி தனக்கே என்று அவர் திட்டவட்டமாக நம்பினார். அதற்காக அவர் பல ஆண்டுகள் உழைத்துமிருக்கிறார். சிறீதரன் அவமானகரமான ஒரு தோல்வியைத் தழுவுவார் என்று சுமந்திரனின் ஆதரவாளர்கள் தொடக்கத்தில் நம்பினார்கள். ஆனால் சிறீதரன் கடுமையாக உழைத்தார். அவருடைய பிரதான பலம் கிளிநொச்சியில் இருக்கின்றது. அதோடு, மட்டக்களப்பு தொடக்கத்திலிருந்து அவரோடு நின்றது. சிறு தொகுதி உறுப்பினர்கள் சாணக்கியனோடு நின்றார்கள். ஏனையவர்கள் திட்டவட்டமாக சிறீதரனை ஆதரித்தார்கள். வெற்றிக்குரிய அடிப்படை வாக்குகளில் மட்டக்களப்பு வாக்குகள் உண்டு.

அடுத்தது, யாழ்ப்பாணம் தீவுப்பகுதி. அமிர்தலிங்கத்திற்கும் காவலூர் நவரத்தினத்துக்கும் இடையிலான பகிரங்க விவாதத்தில் தொடங்கி தீவுப் பகுதிக்கு என்று சிறப்பான முன்னுதாரணங்கள் உண்டு. நவரத்தினம் தனிநாட்டுக் கோரிக்கையின் பிதாக்களில் ஒருவர். பலமான தமிழரசுக் கட்சியின் தலைமையை அவர் எதிர்த்தார். அவரோடு பக்கபலமாய் நின்றவர்கள் அநேகர் தீவுகளைச் சேர்ந்தவர்கள்தான். அண்மையில் கட்சிக்குள் நடந்த தேர்தலில் தீவுப்பகுதி உறுப்பினர்கள் ஒரு சிறிய தொகை. எனினும் அச்சிறு தொகை அசையாது சிறீதரனோடு நின்றது. இவைதவிர கடைசி நேரத்தில் வெல்பவரின் பக்கம் சாய்பவர்கள் சிறீதரனை வெற்றிபெற வைத்தார்கள். சிறீதரன் அதற்காகத் திட்டமிட்டு உழைத்தார். வெல்லமுடியும் என்ற நம்பிக்கையை அவர் தொடக்கத்திலிருந்து இழக்கவில்லை.

அதை ஒரு கொள்கை வெற்றி என்று கூறுவது மிகைப்படுத்தலாக இருக்கலாம். தமிழரசுக் கட்சி மட்டுமல்ல ஏனைய கட்சிகளுக்குள்ளும் விசுவாசக் கட்டமைப்புகள் கொள்கையின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படவில்லை. அவை நலன்களின் அடிப்படையில்தான் கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றன. தமிழ் அரசியல்வாதிகளில் எத்தனை பேர் நேர்மையானவர்கள்? எத்தனை பேர் தேசியம் என்றால் என்ன என்பதனை அதன் நடைமுறை அர்த்தத்தில் விளங்கி வைத்திருக்கிறார்கள்? கடந்த 15 ஆண்டுகளில் தேசியம் எனப்படுவது திருடர்களும் பொய்யர்களும் பாலியல் குற்றவாளிகளும் எடுத்தணியும் முகமூடியாக மாறியிருக்கிறது.

இதை இவ்வாறு கூறுவதன்மூலம் தமிழரசுக் கட்சிக்குள் இருக்கக்கூடிய நேர்மையான தேசியவாதிகளை இக்கட்டுரை கொச்சைப்படுத்தவில்லை. ஆனால் அது ஒரு பொதுப்போக்கு. கடந்த 15 ஆண்டு கால தேசிய நீக்க அரசியலின் விளைவு. எனவே கட்சியை கொள்கை ரீதியாக வார்த்தெடுக்க வேண்டிய ஒரு பொறுப்பு சிறீதரனுக்கு உண்டு. அவர் இப்பொழுது தனது சொந்த வெற்றியின் கைதி. தனக்குக் கிடைத்த வெற்றி கொள்கை வெற்றிதான் என்று அவர் நிரூபித்துக்காட்ட வேண்டும். இது முதலாவதாக சிறீதரன் செய்ய வேண்டியது. அதாவது கட்சிக்குள் கூட்டொருமைப்பாட்டை ஆகக்கூடியபட்சம் கட்டியெழுப்புவது.

இரண்டாவதாக, சிறீதரன் தனது சொந்த மாவட்டத்திலேயே



தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்க வேண்டும். அங்கே அவர் அரசியலை துருவமயப்படுத்தி வைத்திருக்கின்றார். தமிழரசுக் கட்சியின் ஏனைய மாவட்டக் கிளைகளோடு ஒப்பிடுகையில், கிளிநொச்சியில்தான் துரோகி-தியாகி என்ற உரையாடல் அதிகமாக உண்டு. அதற்குக் காரணம் சந்திரகுமாரின் சமத்துவக் கட்சி அங்கே ஒரு பலமான வாக்குத் தளத்தைக் கொண்டிருப்பதுதான். அதற்கு ஒரு பலமான காரணம் உண்டு.

கிளிநொச்சி போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டம். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் இறுதிக்கட்டத் தலைநகரமாக இருந்தது. 2009க்குப் பின் அங்குள்ள புனர்வாழ்வு பெற்ற போராளிகளில் ஒரு பகுதியினருக்குச் சந்திரகுமார் பெருமளவுக்குப் புகலிடம் கொடுத்தார், பாதுகாப்புக் கொடுத்தார், தொழில் கொடுத்தார். அவ்வாறு அவரால் அரவணைக்கப்பட்ட முன்னாள் இயக்கத்தவர்கள் பலர் முன்பு இயக்கத்தில் நிர்வாகப் பொறுப்புகளில் இருந்தவர்கள். அந்த ஊரவரல்லாத சந்திரக்குமாருக்கு அவர்கள் பலமான ஒரு வாக்குத்தளத்தைக் கட்டியெழுப்பினார்கள். சந்திரக்குமாரின் சமத்துவக் கட்சியில் மாவட்ட அமைப்பாளரும் உட்பட முக்கிய பொறுப்புக்களில் பல முன்னாள் புலிகள் இயக்கத்தவர்கள் உண்டு. தமிழ்த் தேசியப் பரப்பில் ஜனநாயகப் போராளிகள் கட்சிக்கு வெளியே அதிகம் முன்னாள் விடுதலைப் புலிகளைக் கொண்ட கட்சி சமத்துவக் கட்சிதான்.

மேலும் சந்திரக்குமார் அங்கே பிற்படுத்தப்பட்ட மக்கள் மத்தியில் அதிகமாக வேலை செய்திருக்கிறார். அவருடையது அபிவிருத்தி மைய அரசியல். இவ்வாறு சிறீதரனின் சொந்த மாவட்டத்துக்குள்ளேயே அவருக்குச் சவாலாக பலமான எதிர் வாக்குத்தளம் உண்டு. அது இனப்படுகொலையாளிகளின் வாக்குவங்கி என்று கூறி முத்திரை குத்திவிட்டுப் போக முடியாது. அல்லது தியாகி-துரோகி என்ற அளவுகோல்களால் அதை மதிப்பிடவும் முடியாது. இந்த விடயத்தில் சிறீதரன் பண்புருமாற்றம் ஒன்றுக்குத் தலைமை தாங்கத் தயாராக இருக்க வேண்டும். இது இரண்டாவது.

மூன்றாவது, கட்சிகளை ஒருங்கிணைப்பது. 2009க்கு முன் இருந்த அதே ஐக்கியத்தை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. கடந்த 15 ஆண்டுகால அனுபவத்தின் அடிப்படையில் தேசத் திரட்சியை எப்படிப் பாதுகாப்பது என்று சிந்திக்க வேண்டும். எல்லாவற்றையும் கட்டமைப்புக்குள்ளால் சிந்திக்க வேண்டும். குறைந்தபட்சம் வெளி விவகாரத்திலாவது கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஒரு தேசிய கட்டமைப்பை உருவாக்க வேண்டும். இந்தியாவையும் ஐநாவையும் மேற்கு நாடுகளையும் அக்கட்டமைப்புத்தான் கையாள வேண்டும். தனிநபர்கள் தனியோட்டம் ஓடுவதற்கு அனுமதிக்கக்கூடாது. அது சிறீதரனுக்கும் பொருந்தும்.

எனவே சிறீதரன் முதலில் கட்சிக்குள் துருவ நிலைப்பட்டிருக்கும் உறுப்பினர்களை ஒரு திரளாக வார்த்தெடுக்க வேண்டும். ஒரு



கூட்டுணர்வை உருவாக்க வேண்டும். இரண்டாவதாக, தனது மாவட்டத்தில் அதைச் செய்ய வேண்டும். மூன்றாவதாக, தேசிய மட்டத்தில் அதைச் செய்யவேண்டும். அதாவது ஒரு பண்புருமாற்றத்திற்குத் தலைமை தாங்க வேண்டும். அதற்கவர் தயாரா?

நன்றி: நிலாந்தன்

# 37 ஆம் ஆண்டு
# வீரவணக்கம்



லெப். கேணல் அற்புதன் (பொன்னம்மான்)
(யோகரத்தினம் குகன்
கலட்டி, யாழ் - 23.12.1956)



மேஜர் கேடில்ஸ்
(மகாலிங்கம் திலீபன்
கண்டாவளை கிளி
11.05.1966)



கப்டன் வாசு
(உருத்திராபதி சுதாகர்
வல்வெட்டித்துறை, யாழ்
13.03.1961)



லெப். சித்தார்த்தன்
(வைத்திலிங்கம் வசீகரன
சுண்டுக்குளி, யாழ்
09.05.1959)



2 ம் லெப். பரன்
(கிருட்னர் அர்ச்சுனன்
வல்வெட்டித்துறை, யாழ்
27.05.1967)

**14.02.1987 அன்று கைதடியில் சிறீலங்காப் படையின் நாவற்குழிமுகாமைத் தாக்கும் முயற்சியின்போது எதிர்பாராது ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர்கள்**



வீரவேங்கை குமணன்
(கந்தையா மோகனலிங்கம்
மட்டுவில், யாழ்
20.10.1965)



வீரவேங்கை தேவன்
(தும்பிப்பிள்ளை வசந்தகுமார்
மீசாலை, யாழ்
24.02.1963)



வீரவேங்கை யோகேஸ்
(சுந்தரன் தனபாலசிங்கம்
ஆழியவளை, யாழ்
09.06.1960)



வீரவேங்கை கவர்
(கதிர்காமு நகுலேஸ்வரன்
வவுனியா
23.12.1966)



வீரவேங்கை அக்பர்
(அருளம்பலம் யோகநாதன்
மட்டுவில், யாழ்
22.05.1963)

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**